# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை

2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள
பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும்

## பாகம் 2

**21** - பொருளியல்
**22** - புவியியல்
**23** - அரசியல் விஞ்ஞானம்
**24** - அளவையியலும் விஞ்ஞான முறையும்
**25** - வரலாறு
**28** - மனைப் பொருளியல்
**29** - தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

Curriculum
Assessment & Evaluation
Teaching
Learning
NETS

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை

## 2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும்

# பாகம் 2

**21** - பொருளியல்
**22** - புவியியல்
**23** - அரசியல் விஞ்ஞானம்
**24** - அளவையியலும் விஞ்ஞான முறையும்
**25** - வரலாறு
**28** - மனைப்பொருளியல்
**29** - தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

முழுப்பதிப்புரிமையுடையது.

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும்
பாகம் 2

இலங்கை பரீட்சைத் திணைக்களம்
முதற் பதிப்பு 2018

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

நிதி அனுசரணை

கல்வித்துறை அபிவிருத்தி மானியம் (ESDP) மூலம் வழங்கப்பட்டது.

# பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி

எந்தவொரு கலைத்திட்டத்தின் மூலமும் பெறப்பட்ட அறிவு விளக்கம் என்பவற்றை அளவிடுவதற்குப் பல்வேறு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினுள் எழுத்துப்பரீட்சையே தற்போது பயன்படுத்தப்படும் மிகப் பிரபல்யமான முறையாகும். எழுத்துப் பரீட்சையானது கற்றல், கற்பித்தல் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்துவதுடன் கூட்டுமதிப்பீட்டு முறையியல்களுக்கிடையில் தொடர்புகளை வளர்த்தெடுக்குமென்பதும் அடைவு மட்டத்தைத் தீர்மானிக்க உதவுமென்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

2017 ஆம் ஆண்டில் தரம் 12 இல் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அம்மாணவர்கள் க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக முதன்முறையாக 2019 ஆம் ஆண்டில் தோற்றுவார்கள். திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப 2019 இலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள க.பொ.த (உயர் தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி வினாத்தாள் கட்டமைப்பும் முன்னோடி மாதிரி வினாக்களும் அடங்கும் விதத்தில் தயாரிக்கப்பட்ட தொகுப்பு இதுவாகும்.

க.பொ.த (உயர் தர)ப் பாடத்திட்டத்தில் பாட உள்ளடக்க சீர்திருத்தத்துடன் அதற்குப் பொருத்தமான விதத்தில் வினாத்தாளின் கட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்துதல் அவசியமாகும். இதற்கமைய பாடத்தொகுதிகளைத் திரட்டி ஒவ்வொரு பாகங்களாக வினாத்தாள் கட்டமைப்பின் தனித்துவத்தைப் பேணுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அவ்வவ் பாடங்களுக்குரிய நிபுணத்துவக் குழுவினூடாக இந்தக் கட்டமைப்பு தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கமைய முன்னோடி மாதிரி வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கல்வி அளவீடும் மதிப்பீடும் பற்றிய நம்பிக்கையும் கவனமும் அதிகளவில் செலுத்தப்படும் இக்கால கட்டத்தில் க.பொ.த.(உயர் தர) மட்டத்தில் அந்த மதிப்பீட்டுப் பணி எவ்வாறு செய்யப்படுகின்றதென்பதை எல்லாச் சமூகத்தினருக்கும் அறிவூட்டுதல் முக்கியமானதாகும். க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை முக்கியமாக சான்றிதழ்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட அடைவுப்பரீட்சையாகும். எனினும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வேறு தேசிய சர்வதேச உயர் கல்வி நிறுவனங்கள் என்பன இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதன் காரணமாக இது தெரிவுப் பரீட்சையின் பண்புகளையும் கொண்டு விளங்குகிறது. அதனால் இப்பாகத்தில் தரப்படும் வினாத்தாள் கட்டமைப்பு, மாதிரி வினாக்கள், மாணவர்கள் இப்புதிய பாடத்திட்டத்திற்கமைய எவ்வாறான மதிப்பீட்டுப் பரீட்சைக்கு முகங்கொடுப்பது என்பதை விளக்கிக் கொள்வதற்காகவாகும். இதனால் மாணவர்களைப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழிகாட்டல்களை மேற்கொள்வோருக்கும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் இது துணைபுரிவதாக அமையும்.

இந்த அறிவுரைப்பு நூலில் பகுதி I இல் பரீட்சை பற்றிய பொதுத்தகவல்களும் பகுதி II இல் வினாத்தாள்களின் கட்டமைப்பும் இயல்பும் பகுதி III இல் ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய முன்னோடி மாதிரி வினாக்களும் இடம் பெற்றுள்ளன.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள வினாத்தாள் கட்டமைப்பு, முன்னோடி மாதிரி வினாத்தாள் என்பவற்றைத் தயாரிக்கும்போது ஒத்துழைப்பை நல்கிய கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் குழுவுக்கும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட செயற்குழுவினருக்கும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட செயற்குழுவினருக்கும் அனைத்து பாடங்களுக்கும் உரிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களுக்கும் வளவாளர்களுக்கும் இலங்கைப் பரீட்சை திணைக்கள ஆய்வு அபிவிருத்திக் கிளையின் அலுவலர்கள் மற்றும் செயற்குழுவினருக்கும் அச்சக மேற்பார்வையாளர் உள்ளிட்ட செயற்குழுவினருக்கும் இப்பணியைச் செவ்வனே நிறைவு செய்வதற்கு உலக வங்கியின் கல்வித்துறை அபிவிருத்தி நிதியம் (ESDP) மூலம் மானியம் வழங்கிய குழுவினருக்கும் அச்சுப்பதிப்பு செய்த விஷ்வ கிராபிக் நிறுவனத்துக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2018.10.10
ஆய்வு அபிவிருத்திக் கிளை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | : | திரு. பீ.சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | : | திருமதி. காயத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர் (ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| பாட இணைப்பாளர் | : | திரு. ஜே. ஏ. ஜே. ஆர். ஜயக்கொடி<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| உதவி இணைப்பாளர் | : | எச். எம். சீ. மனோமி செனெவிட்ன<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| | | கே. ஏ. எச். எச். ஹசந்தாகுருப்பு<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | | எல். ஜீ. எஸ். சமரகோன்<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | | ஏ. கிருஷ்ணகோபி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | | என். என். சூரியஆரச்சி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | | கே. எம். ஜயந்த குமார<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | | கே. டப்ளியூ. எம். டீ. நிலங்கா கிரிஅல்ல<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| கணினி பக்க வடிவமைப்பு | : | காஞ்சனா சுப்ரமணியம்<br>கணினி தரவுப் பதிவாளர் |
| | | எஸ். இந்துஷா<br>கணினி தரவு உதவியாளர் |
| முன்பக்க அட்டை | : | எஸ்.எச். சமன் குமார<br>முகாமைத்துவ உதவியாளர் |

## உள்ளடக்கம்

பக்க இலக்கம்


பகுதி I

பரீட்சைகள் தொடர்பான பொதுத் தகவல்கள் ........................................................ 1

பகுதி II

வினாத்தாள் கட்டமைப்பும் அதன் இயல்பும் ........................................................ 7

பகுதி III

மாதிரி வினாக்கள்........................................................................................ 8

(21) பொருளியல் ........................................................................................ 10

(22) புவியியல் ........................................................................................ 28

(23) அரசியல் விஞ்ஞானம் ........................................................................ 43

(24) அளவையியலும் விஞ்ஞான முறையும் ................................................ 52

(25) வரலாறு ........................................................................................ 65

(28) மனைப்பொருளியல் ........................................................................ 104

(29) தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் ................................................ ~~118~~

இணைப்பு 01 ........................................................................................ ~~119~~

இணைப்பு 02 ........................................................................................ 145

இணைப்பு 03 ........................................................................................ 151

# பகுதி I
## கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சை
### பரீட்சை தொடர்பான பொதுத் தகவல்கள்

**1.** அறிமுகம்

இலங்கையின் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப்படுத்தும் பரீட்சையாக க.பொ.த (உ.தர)ப் பரீட்சை உள்ளது. இது முக்கியமாக சான்றிதழ்ப்படுத்தும் பரீட்சையாக நடைபெற்ற போதும் பல்கலைக்கழகங்கள், வேறு உயர்கல்வி நிறுவனங்கள், கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றிற்குத் தகைமைத் தெரிவு செய்வதற்கும் இப்பரீட்சையின் பெறுபேறு அடிப்படையாகக் கொள்ளப்படுவதால் இது ஒரு தேர்வுப் பரீட்சையாகவும் கருதப்படுகிறது.

இது போன்றே நடுத்தர மட்டத்தில் தொழிலைப் பெறுவதற்கும் இப்பரீட்சைப் பெறுபேறுகள் அடிப்படைத் தகைமையாகக் கருதப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டு வரை க.பொ.த (உ.தர)ப் பரீட்சை தரம் 12, 13 என்பவற்றின் பாடத்திட்டத்தினை அடிப்டையாகக் கொண்டு உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை என நான்கு பாடத்துறைகள் இடம் பெற்றதுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தொழினுட்பவியல் பாடத் துறையின் கீழும் பரீட்சை நடைபெற்றது. இதற்கமைய உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை, பொறியியல் தொழினுட்பவியல், உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் எனும் பாடத்துறைகளிலும் பரீட்சைகள் நடைபெறும்.

**2** பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

**2.1** பாடசாலைப் பரீட்சார்த்திகள்

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் தகைமையை நிறைவு செய்த பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது பெயர், விண்ணப்பிக்கும் பாடங்கள், மொழிமூலம் ஆகிய தகவல்களுடன் அதிபரினூடாக விண்ணப்பத்தை முன்வைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகளின் பெயர், பிறப்புச் சான்றிதழில் காணப்படும் விதத்தில் சரியாகப் பூரணப்படுத்தப்படுவதுடன், பாடங்கள், பாட இலக்கங்கள், மொழிமூலம் என்பனவும் சரியாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும்.

**2.2** தனிப்பட்ட பரீட்சார்த்திகள்

பாடசாலை மட்ட புதிய மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வகுப்பறையில் மதிப்பீடு செய்தல் வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கு உரியதன்று. கல்வி அமைச்சின் இல ED/01/12/12/05/08/i , 2017.10.31 திகதி கடிதம் மூலம் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (இணைப்பு 03)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு செய்திப் பத்திரிகைகளில் வெளியாகும் அறிவித்தல் மூலம் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்காக விண்ணப்பங்கள் கோரும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள பரீட்சார்த்திகள் உரிய விதத்தில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு செய்திப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்த குறித்த தினத்திற்கு முன்னர் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

## 3. பாடங்களைத் தெரிவு செய்தல்

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட இல 2016/13, 2016.04.26 ஆம் திகதி "**க.பொ.த (உ.தர) பாட மறுசீரமைப்பு பல்கலைக்கழக நுழைவுக்கான பாட மறுசீரமைப்பு**" ஆகிய சுற்று நிருபங்கள் (இணைப்பு 01) என்பவற்றுக்கேற்ப இப்பரீட்சையில் பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

க.பொ.த (உ.தர) புதிய பாடத்திட்டம் 2017 ஆம் ஆண்டு தரம் 12 இல் அறிமுகப்படுத்தப்படுவதுடன் இப்பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முதல் தடவையாக க.பொ.த (உ.தர) ப் பரீட்சை 2019 ஆம் ஆண்டில் நடைபெறும். மேலே குறிப்பிடப்பட்ட 2016/13 சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய உயிரியல், பௌதிகவியல், வர்த்தகம், கலை, பொறியியல் தொழினுட்பவியல், உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் ஆகிய பாட நெறிகளுக்கு அமைந்த பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக பிரதான பாடங்கள் மூன்றினுக்குத் தோற்றுவதுடன் பல்கலைக்கழக நுழைவை எதிர்பார்க்கும் மாணவர்கள் "பொதுப் பரீட்சை" வினாத்தாளிலும் சித்தியடைதல் வேண்டும். பல்கலைக்கழக நுழைவினைக் கவனத்தில் கொள்ளாவிடினும் ' பொது ஆங்கிலம்' வினாத்தாளுக்கு மாணவர்கள் தமது விருப்பின் பேரில் தோற்ற முடியும்.

### 3.1 க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட பாடங்கள்

அனைத்து பாட நெறிகளுக்காகவும் மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டிய பாட மறுசீரமைப்பு பற்றிய ஒப்பந்த இணைப்பு 01 இல் அடங்கும் இல 2016/13 சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக அங்கீகரிக்கப்பட்ட பாடங்களும் பாட இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது அவற்றுக்குரிய பாட இலக்கங்களும் பயன்படுத்தப்பட வேண்டும்.

| | பாடம் | பாட இலக்கம் | |
|---|---|---|---|
| (01) | பௌதிகவியல் | 01 | |
| (02) | இரசாயனவியல் | 02 | |
| (03) | கணிதம் | 07 | |
| (04) | விவசாய விஞ்ஞானம் | 08 | |
| (05) | உயிரியல் | 09 | |
| (06) | இணைந்த கணிதம் | 10 | |
| (07) | உயர் கணிதம் | 11 | |
| (08) | சாதாரண பொதுப்பரீட்சை | 12 | |
| (09) | சாதாரண ஆங்கிலம் | 13 | |
| (10) | குடிசார் தொழினுட்பவியல் | 14 | |
| (11) | பொறிமுறைத் தொழினுட்பவியல் | 15 | |
| (12) | மின், இலத்திரனியல், தகவல் தொழினுட்பவியல் | 16 | |
| (13) | உணவுத் தொழினுட்பவியல் | 17 | |
| (14) | விவசாயத் தொழினுட்பவியல் | 18 | |
| (15) | உயிர்வளத் தொழினுட்பவியல் | 19 | |
| (16) | தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் | 20 | |
| (17) | பொருளியல் | 21 | |
| (18) | புவியியல் | 22 | |
| (19) | அரசியல் விஞ்ஞானம் | 23 | |
| (20) | அளவையியலும் விஞ்ஞான முறையும் | 24 | |
| (21) | இலங்கை வரலாறு | 25 | வினாத்தாள் I |
| (22) | இந்திய வரலாறு | 25A | வினாத்தாள் II |
| (23) | ஐரோப்பிய வரலாறு | 25B | வினாத்தாள் II |
| (24) | நவீன உலக வரலாறு | 25C | வினாத்தாள் II |
| (25) | மனைப் பொருளியல் | 28 | |
| (26) | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | 29 | |
| (27) | வணிகப் புள்ளிவிபரவியல் | 31 | |
| (28) | வணிகக் கல்வி | 32 | |
| (29) | கணக்கீடு | 33 | |

| | | |
|---|---|---|
| (30) | பௌத்தம் | 41 |
| (31) | இந்து சமயம் | 42 |
| (32) | கிறிஸ்தவம் | 43 |
| (33) | இஸ்லாம் | 44 |
| (34) | பௌத்த நாகரிகம் | 45 |
| (35) | இந்து நாகரிகம் | 46 |
| (36) | இஸ்லாமிய நாகரிகம் | 47 |
| (37) | கிரேக்க உரோம நாகரிகம் | 48 |
| (38) | கிறிஸ்தவ நாகரிகம் | 49 |
| (39) | சித்திரக்கலை | 51 |
| (40) | நாட்டியம் (தேசிய) | 52 |
| (41) | நாட்டியம் (பரதம்) | 53 |
| (42) | சங்கீதம் (கீழைத்தேய) | 54 |
| (43) | சங்கீதம் (கர்நாடகம்) | 55 |
| (44) | சங்கீதம் (மேலைத்தேய) | 56 |
| (45) | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) | 57 |
| (46) | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | 58 |
| (47) | நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) | 59 |
| (48) | எந்திரவியல் தொழினுட்பவியல் | 65 |
| (49) | உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | 66 |
| (50) | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 67 |
| (51) | சிங்களம் | 71 |
| (52) | தமிழ் | 72 |
| (53) | ஆங்கிலம் | 73 |
| (54) | பாளி | 74 |
| (55) | சம்ஸ்கிருதம் | 75 |
| (56) | அரபு | 78 |
| (57) | மலாய் | 79 |
| (58) | பிரெஞ்சு | 81 |
| (59) | ஜேர்மன் | 82 |
| (60) | ரஷியன் | 83 |
| (61) | ஹிந்தி | 84 |
| (62) | சீனமொழி | 86 |
| (63) | ஜப்பான் | 87 |

க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்கான மேலுள்ள பாடங்களில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2016/13 சுற்றுநிருபத்துக்கேற்ப பிரதான பாடங்கள் மூன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும். அந்த பிரதான விடயங்கள் தவிர பொதுச் சாதாரணப் பரீட்சை, பொது ஆங்கிலம் ஆகிய இரண்டு பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

*     **பொதுச் சாதாரணப் பரீட்சை (12)**

இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்றின் உள்ளக மாணவராக நுழைவதற்கு இப்பாடத்தில் தீர்மானிக்கப்படும் இழிவளவுப் புள்ளியைப் பெறுதல் அத்தியாவசியமாகும். இத் தகைமையை ஒரு சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக நுழைவுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இவ்விடயத்துக்காகப் பெறப்படும் புள்ளிகள், Z புள்ளி கணிக்கப்படும்போது சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

*     **பொது ஆங்கிலம் (13)**

இப்பாடம் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை தொடர்பான பிரதான பாடம் அன்று. பொது ஆங்கிலத்தில் பெறப்படும் புள்ளியோ சித்தியோ பல்கலைக்கழக நுழைவுக்காகப் பயன்படுத்தப்படமாட்டாது. எனினும் இந்தப் பாடத்தில் பெறும் பெறுபேறு க.பொ.த (உ.தர)ப் பரீட்சைச் சான்றிதழில் தனியாகக் குறிப்படப்படும்.

## 4. தரங்களைத் தீர்மானித்தல்

ஒவ்வொரு பாடத்திலும் பெறப்படும் மொத்தப் புள்ளிகளுக்கமைய பின்வரும் தரங்கள் தீர்மானிக்கப்படும்.

| புள்ளி வீச்சு | தரம் |
|---|---|
| 75 - 100 | A - விசேட சித்தி - (Distinction Pass) |
| 65 - 74 | B - மிகத் திறமைச் சித்தி - (Very Good Pass) |
| 50 - 64 | C - திறமைச் சித்தி - (Credit Pass) |
| 35 - 49 | S - சாதாரண சித்தி - (Ordinary Pass) |
| 00 - 34 | F - சித்தியின்மை - (Fail) |

## 5. பாடசாலை மட்டக் கணிப்பீடு

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட இல 23/2017, 2017.06.01 திகதியிடப்பட்ட "பாடசாலை மட்டக்கணிப்பீடு தரம் 6 - 13 இற்கான 2017 இலிருந்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படல்" எனும் சுற்றுநிருபத்திற்கு (இணைப்பு 02) அமைய இவ்வேலைத்திட்டம் 2017 தொடக்கம் பாடசாலை முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும்.

### 5.1 நோக்கங்கள்

தரம் 12, 13 இல் கல்வி பெறும் மாணவர்களின் க.பொ.த (உ.தர)ப் பரீட்சையில் அளவிட முடியாத ஆற்றல்கள், தேர்ச்சிகள் ஆகியவற்றை கற்றல் கற்பித்தல் செயன்முறை நிகழும் வேளையில் அளவிடலும் இயலுமை இயலாமை என்பவற்றை இனங்கண்டு குறைபாடுகள் உள்ள மாணவர்கள் இருப்பின் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் இதன் நோக்கங்களாகும். இந்த வேலை ஒழுங்கமைப்பின் கீழ் வகுப்பறையில் கற்கும் வேளையில் மாணவர்களைக் கணிப்பீடு செய்வதுடன் மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் குழுச் செயற்திட்டங்களும் கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

### 5.2 கணிப்பீடு நிகழ்த்தப்படும் விதம்

5.2.1 வகுப்பறையில் கற்றலில் ஈடுபடும் பாடங்களுக்காகச் செய்யப்படும் கணிப்பீடு

(அ) வகுப்பறையில் கற்கும் எல்லாப் பாடங்களுக்காகவும் ஒரு தவணையில் ஒரு தடவை கணிப்பீட்டுச் செயன்முறை நிகழ்த்தப்படும்.

(ஆ) பாடசாலை மட்டக்கணிப்பீட்டுக்காக அறிமுகம் செய்யப்பட்ட கற்றல் கற்பித்தல் கணிப்பீட்டு வகைகளைப் பயன்படுத்தலாம்.

(இ) வகுப்பறையில் கற்கும் எல்லாப் பாடங்களுக்கும் ஒரு தவணைக்கு ஒரு சந்தர்ப்பம் வீதம் தரம் 12 இல் 3 தவணைகளுக்கும் மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்கள் 3 ஆகும். தரம் 13 இல் தவணை 1, 2 இற்காக மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்கள் 2 ஆகும். இரண்டு வருடங்களுக்குமான கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்கள் 5 நடத்தப்படும்.

(ஈ) இந்த 05 கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களினதும் சராசரி தரம் 13 இன் இரண்டாம் தவணை இறுதியில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்படும். இந்தப் புள்ளிகளுக்கமைய தீர்மானிக்கப்படும் தேர்ச்சி மட்டம் க.பொ.த (உ.தர)ப் பெறுபேற்று பத்திரத்தில் தனியான நிரலில் பின்வரும் விதத்தில் உள்ளடக்கப்படும்.

| பாடசாலை மட்டக்கணிப்பீடு | தேர்ச்சி மட்டம் | |
|---|---|---|
| 9, 10 | அதிஉயர் தேர்ச்சி மட்டம் | - (Excellent Level Competency) |
| 8 | உயர் தேர்ச்சி மட்டம் | - (High Level Competency) |
| 6, 7 | திறமை தேர்ச்சி மட்டம் | - (Credit Level Competency) |
| 4, 5 | அண்மித்த தேர்ச்சி மட்டம் | - (Near Competency) |
| 1, 2, 3 | தேர்ச்சி மட்டம் அடையப்படவில்லை | - (Not reached the Competency Level) |

### 5.2.2 குழுச் செயற்திட்டம் மூலம் கணிப்பீடு

முதற் தடவையாக க.பொ.த (உ.தர) கற்கும் அனைத்து மாணவர்களும் குழுச் செயற்திட்டத்தை செய்து முடித்தல் வேண்டும்.

#### 5.2.2.1 குழுச் செயற்திட்டம்

(அ) குழுச் செயற்திட்டத்திற்கு 6 மாணவர்கள் தொடக்கம் 10 மாணவர்கள் அடங்கும் ஒரு குழு பாடசாலையில் உரிய ஆசிரியரால் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

(ஆ) குழுச் செயற்பாட்டுக்காக குழுவானது பொருத்தமான தலைப்பை முன்வைத்து அனுமதி பெறுதல் வேண்டும்.

(இ) தரம் 12 இல் 3 தவணைகளும் தரம் 13 இல் முதலாம் தவணையும் உட்பட இச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஈ) குழு உணர்வுடன் செயற்படுதல், பல்வேறு நிறுவனங்களுடனும் தனியாள்களுடனும் செயற்படுதல், துறைசார் நடவடிக்கைகள் பற்றிய விளக்கம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் இச் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும்.

#### 5.2.2.2 செயற்திட்டத்தை கணிப்பிடுதல்

(அ) 5 நியதிகளின் கீழ் செயற்திட்டம் மதிப்பீடு செய்யப்படுவதுடன் ஆசிரியர் ஒவ்வொரு நியதிக்கும் அமைய மாணவர் செயற்பட்ட விதத்தினை அவதானித்து புள்ளிகள் வழங்குதல் இடம்பெறும்.

(ஆ) செயற்திட்டத்துக்கான மொத்தப்புள்ளிகள் 20 வழங்கப்படுவதுடன் அப்புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டு 10 ஆக மாற்றப்படும்.

(இ) இச் செயற்திட்டத்தின் புள்ளிகளுக்கேற்ப தீர்மானிக்கப்படும் தேர்ச்சி மட்டம் 5.2.1 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப க.பொ.த. (உ.த) பெறுபேற்று பத்திரத்தில் உள்ளடக்கப்படும்.

# பகுதி II

## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2019 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள பரீட்சைக்கான வினாத்தாள் கட்டமைப்பு

| பாடங்களும் பாட இலக்கங்களும் | வினாத்தாள் I | | | | | | | | | | | | வினாத்தாள் II | | | | | | | | | | | | | | | செய்முறை பரீட்சை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பகுதி I/A | | | | பகுதி II/B | | | | பகுதி III/C | | | | பகுதி I/A | | | | | பகுதி II/B | | | | பகுதி III/C | | | | | | |
| | ** நேரம் (மணித்தியாலம்) | *வினாவின் தன்மை | தெரிவுகளின் எண்ணிக்கை | வினாக்களின் எண்ணிக்கை | தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | *வினாவின் தன்மை | வினாக்களின் எண்ணிக்கை | கட்டாய வினாக்களின் எண்ணிக்கை | தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | * வினாவின் தன்மை | வினாக்களின் எண்ணிக்கை | தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | ** நேரம் (மணித்தியாலம்) | *வினாவின் தன்மை | தெரிவுகளின் எண்ணிக்கை | வினாக்களின் எண்ணிக்கை | கட்டாய வினாக்களின் எண்ணிக்கை | தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | *வினாவின் தன்மை | வினாக்களின் எண்ணிக்கை | கட்டாய வினாக்களின் எண்ணிக்கை | தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | *வினாவின் தன்மை | வினாக்களின் எண்ணிக்கை | தெரிவு செய்து விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | விடையளிக்கவேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை | | ** நேரம் (மணித்தியாலம்) | *வினாவின் தன்மை |
| (21) பொருளியல் | 2 | 1 | 5 | 50 | 50 | | | | | | | | 3 | 3 | | 5 | | 2/5 அல்லது 3/5 | 3 | 5 | | 2/5 அல்லது 3/5 | | | | 5/10 | குறைந்தது ஒரு பகுதியிலிருந்து இரண்டு வினாக்கள் வீதம் | | |
| (22) புவியியல் | 3 | 1 | 5 | 40 | 40 | 3 | 2 | 2 | | 3 | 4 | 2/4 | 3 | 3 | | 4 | | 2/4 அல்லது 3/4 | 3 | 4 | | 2/4 அல்லது 3/4 | | | | 5/8 | குறைந்தது ஒரு பகுதியிலிருந்து இரண்டு வினாக்கள் வீதம் | | |
| (23) அரசியல் விஞ்ஞானம் | 2 | 1 | 5 | 30 | 30 | 2 | 20 | 20 | | | | | 3 | 4,5 | | 3 | | 1/3 அல்லது 2/3 | 4,5 | 4 | | 2/4 அல்லது 3/4 | 4,5 | 3 | 1/4 அல்லது 2/4 | 5/10 | குறைந்தது I, III பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதமும் பகுதி II இலிருந்து குறைந்தது இரண்டு வினாக்கள் வீதமும் | | |
| (24) அளவையியலும் விஞ்ஞான முறையும் | 2 | 1 | 5 | 50 | 50 | | | | | | | | 3 | 2 | | 1 | 1 • | | 4,5 | 5 | | 2/5 அல்லது 3/5 | 4,5 | 5 | 2/5 அல்லது 3/5 | 6/11 | குறைந்தது பகுதி II, III இலிருந்து இரண்டு வினாக்கள் வீதம் | | |
| (25) இலங்கை வரலாறு | 3 | 1 | 5 | 40 | 40 | 2,4,5 | 9 | 1 | 3/8 | | | | | | | | | | | | | | | | | | | | |
| (25 A) இந்திய வரலாறு | | | | | | | | | | | | | 3 | 1 | 5 | 40 | 40 | | 2,4,5 | 9 | 1 | 3/8 | | | | | வரலாற்று வினாத்தாளில் பகுதி II இல் A, B, C என மூன்று பகுதிகள் உள்ளன. பகுதி A கட்டாயமானதாகும். பகுதி B,C இல் குறைந்தது ஒரு வினா வீதம் | | |
| (25 B) ஐரோப்பிய வரலாறு | | | | | | | | | | | | | 3 | 1 | 5 | 40 | 40 | | 2,4,5 | 9 | 1 | 3/8 | | | | | | | |
| (25 C) உலக வரலாறு | | | | | | | | | | | | | 3 | 1 | 5 | 40 | 40 | | 2,4,5 | 9 | 1 | 3/8 | | | | | | | |
| (28) மனைப்பொருளியல் | 2 | 1 | 5 | 50 | 50 | | | | | | | | 3 | 3,4 | | 8 | 1 | 5/7 | | | | | | | | 6/8 | | 3 | 6 |
| (29) தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் ▲ | 2 | 1 | 5 | 50 | 50 | | | | | | | | 3 | 3 | | 7 | | 5/7 | | | | | | | | 5/7 | | 3 | 6 |

* வினாவின் தன்மை

1. பல்தேர்வு  2. வேறு குறுவிடை வகை  3. கட்டமைப்பு  4. பகுதிக் கட்டமைப்பு  5. கட்டுரை வகை  6. செய்முறை

** **மூன்று** மணித்தியாலங்கள் நேர அளவு கொண்ட அனைத்து வினாத்தாள்களுக்கும் விடை எழுதுவதற்கு முன்னர் வினாக்களை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்காக **மூன்று மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக 10 நிமிட நேரம்** வழங்கப்படும்.

• இவ்வினா சுருக்கமான விடை எழுதுவதற்கான 10 வினாக்களைக் கொண்டது.

▲ இக்கட்டமைப்புக்கு ஏற்ப 2019 ஆம் ஆண்டின் வினாத்தாள் தயாரிக்கப்படும். 2020 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறும் பரீட்சைகளுக்காக புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வினாத்தாள் கட்டமைப்பு தீர்மானிக்கப்படுவதோடு அதற்கேற்ப வினாக்கள் தயாரிக்கப்படும்.

# பகுதி III
## முன்னோடி மாதிரி வினாத்தாள்

க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை சிரேஷ்ட இடைநிலைக் கல்வி இறுதியில் நடத்தப்படும் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். இப்பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், கல்வியிற் கல்லூரிகள் ஆகிய நிறுவனங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தல் நடைபெறுவதால் இது ஒரு தெரிவுப் பரீட்சையின் பண்புகளையும் கொண்டதாக விளங்குகிறது.

இதற்கமைய க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிக்கும்போது அடைவுப் பரீட்சையில் காணப்படக் கூடிய பண்புகளில் அதிக கவனம் செலுத்தப்படுவதுடன் இப்பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள், வேறு உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தலும் இடம் பெறுவதால் இவை பற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதற்கேற்ப மாணவர்களின் அடைவை மதிப்பீடு செய்வதற்கு எழுத்துப் பரீட்சை முறைகளில் முக்கிய இடத்தை கட்டுரைவகைச் சோதனைகளும் புறவயச் சோதனைகளும் (பாடத்துடன் இணைந்ததாக) பயன்படுத்தப்படுகின்றன. கட்டுரை வகையிலான விடைகளில் பரீட்சகர்களின் தனியாள் இயல்பு செல்வாக்குச் செலுத்துவதுடன் புறவயச் சோதனை வினாக்களில் ஒரு சரியான விடை மட்டும் காணப்படுவதால் அது முழுமையாகத் தனியாள் அகவயத் தன்மையற்றதாகக் காணப்படும். இக்கட்டுரை வகை, புறவய சோதனை இரண்டிற்கும் இடையில் "குறு விடை வினாக்கள், அமைப்புக் கட்டுரை வினாக்கள்" என்பவற்றிலும் தற்போது பரீட்சகர்களின் கவனம் செலுத்தப்படுகிறது. அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு வழங்க வேண்டிய விடைகள் வினாவில் குறிப்பிடப்படும் சில வரையறையினுள் அமையுமாறு கட்டுப்படுத்தப்படும். இதற்கேற்ப விடைகளுக்குப் புள்ளி வழங்கும்போது பரீட்சைகளுக்கிடையில் புள்ளி வழங்கலில் சமநிலைத் தன்மையைப் பாதுகாக்கக் கூடியதாக இருப்பதால் புறவயவகை வினாக்கள், அமைப்புக் கட்டுரை வகை வினாக்கள் என்பன பரீட்சைத் துறையில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

அதற்கமைய க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்கான வினாக்களைத் தயாரிக்கும்போது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே கட்டுரை வகை வினாக்களைப் பயன்படுத்துவதுடன் புறவய வினாக்களைத் தயாரிப்பதில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. இதுபோலவே க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை வினாக்களைத் தயாரிக்கும்போது நினைவாற்றலான அறிவை மட்டுமன்றி கிரகித்தல், பிரயோகம், பகுப்பாய்வு, தொகுப்பு, மதிப்பீட்டு ஆகிய உயரிய உளத்திறன்களையும் அளவிடக்கூடிய விதத்தில் வினாக்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. இயலுமானவரையில் செய்முறையுடன் தொடர்பான வினாக்களைத் தயாரிப்பதினூடாக மாணவர் யாதாயினும் ஒன்றை விளக்கமாக அறிந்து கொள்ளல் கற்றல் கோட்பாடுகளை அதுபோன்றே வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்துதல், பிரச்சினை தீர்த்தல், தர்க்க ரீதியாக சிந்தித்தல், புதிய ஆலோசனைகள் / திட்டங்களை முன்வைத்தல், விடயங்களை ஒப்பீடு செய்தல், மொழியைச் சிறந்த விதத்தில் கையாளுதல், கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தல் ஆகிய திறன்கள் மாணவர்களிடத்தில் எந்தளவில் விருத்தியடைந்துள்ளது என்பதை அளவிடும் விதத்திலும் வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

இப்பகுதி III இல் வினாத்தாள் கட்டமைப்பு புள்ளிகள் வழங்கும் விதம் என்பவற்றுடன் முன்னோடி மாதிரி வினாக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் இவை மாதிரி வினாப்பத்திரங்களல்ல. எனவே வினாப்பத்திரங்களைத் தயாரிக்கும்போது வினாக்களில் அடங்கியுள்ள **உபபகுதிகளின் எண்ணிக்கை புள்ளிகள் வழங்கப்பட வேண்டிய விதம்** என்பன வினாக்கள் தயாரிப்பதற்கு அடிப்படையான பாடப்பகுதிகளுக்கேற்பவும் சந்தர்ப்பங்களுக்கேற்பவும் **மாற்றமுடைய இடமுண்டு.**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முன்னோடி மாதிரி வினாக்கள் தவிர புறவயவகை வினாக்கள் கட்டுரைவகை வினாக்கள் என்பன பரீட்சைக்காகப் பயன்படுத்தப்படும். **பக்கம் 9 இல் குறிப்பிடப்படும் எல்லா வினா வகைகளும் வேறு வினா வகைகளும் க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்களில் சந்தர்ப்பங்களுக்கேற்ப உள்ளடக்கும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குரியதாகும்.**

புறவய சோதனைகள் (Objective Tests)

- வழங்கல் வகை (Supply Type)
- தெரிதல் வகை (Selection Type)
  - இணைக்கும் வகை (Matching Type)
  - இரு தேர்வு வகை (Alternative Type)
  - பல்தேர்வு வகை (MCQ Type)
    - வினா வகை (Question Type)
    - பூரணமற்ற வாக்கிய வகை (Incomplete Statement Type)
    - எதிர்மறையான வகை (Negative Type)
    - கூட்டு வகை (Combined Response Type)
    - சிறந்த விடை வகை (Best Answer Type)
    - பல விடை வகை (Multiple Response Type)
    - பொதுவிடை வகை (Common Response Type)
    - பிரதியீட்டு வகை (Substitution Type)
    - சோடிக் கூற்று வகை (Double Statement Type)
    - கூற்றும் காரணமும் வகை (Assertion & Reason Type)

**கட்டுரை வகை சோதனைகள் (Essay Tests)**

- கட்டுரை வகை வினாக்கள் **(Essay Type Questions)**
  - திறந்த துலங்கல் வகை (Open Response Type)
  - கட்டுப்பட்டுத்தப்பட்ட துலங்கல் வகை (Controlled Response Type)
- அமைப்புக் கட்டுரை வகை வினாக்கள் **(Structured Essay Type Questions)**
  - உப விரிவுகள் மூலம் கட்டமைப்பாக்கல் (Structuring by using subsections)
  - வழங்கும் தகவலினூடு கட்டமைப்பாக்கல் (Structuring by information provided)
  - செயல் மூலம் கட்டமைப்பாக்கல் (Structuring by function)

# (21) பொருளியல்

## வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் I** : நேரம் : **02** மணித்தியாலங்கள்

5 தெரிவுகளைக் கொண்ட **50** பல்தேர்வு வினாக்களாகும். **எல்லா வினாக்களுக்கும்** விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு **01** புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் **50** ஆகும்.

**வினாத்தாள் II** : நேரம் : **03** மணித்தியாலங்கள் (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)

இவ்வினாப்பத்திரம் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.

உப பகுதி 'அ' - கட்டமைப்பு கட்டுரை வினாக்கள் **ஐந்தாகும்.**

உப பகுதி 'ஆ' - கட்டமைப்பு கட்டுரை வினாக்கள் **ஐந்தாகும்.**

குறைந்தபட்சம் ஒரு பகுதியிலிருந்து **இரண்டு** வினாக்கள் வீதம் தெரிவுசெய்து **ஐந்து** வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு **20** புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் **100** ஆகும்.

இறுதிப் புள்ளியைக் கணித்தல் :

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | | = 50 |
| வினாத்தாள் II | = 100 ÷ 2 | = 50 |
| இறுதிப்புள்ளி | | = 100 |

## வினாத்தாள் I

கவனிக்குக :

* **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்குக.
* **சரியான அல்லது மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க. (பரீட்சையில் விடையளிப்பதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்)

---

**1.** அருமை தொடர்பான எண்ணக்கருவை விளக்கும் மிகப் பொருத்தமான கூற்று யாது?

(1) அருமை என்பது சந்தையில் சில பண்டங்களுக்குக் காணப்படும் பற்றாக்குறையாகும்.
(2) அருமை என்பது குறைந்த வருமானம் பெறும் நாடுகள் மட்டும் முகங்கொடுக்கும் பிரச்சினையாகும்.
(3) அருமை என்பது நடைமுறையில் காணப்படும் வளங்களின் மூலம் மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமையாகும்.
(4) சந்தைப் பொறிமுறையில் தங்கியிருக்கும் நாடுகளில் அருமை தொடர்பான பிரச்சினை காணப்பட மாட்டாது.
(5) பொருளாதார முதிர்ச்சி காரணமாக அருமை இல்லாமல் போகும்.


**2.** பின்வருவனவற்றுள் எது மனித மூலதனமாகக் கருதப்படலாம்?

(1) மூலதனக் கருவிகளை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஊழிய வளம்
(2) பொருளாதாரமொன்றில் கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளுக்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முதலீடு
(3) முயற்சியாளரொருவரின் இடர்களைத் தாங்கும் ஆற்றல்
(4) ஊழியப்படையின் அறிவு, திறன் மற்றும் அனுபவங்களின் தொகுதி
(5) அதிக தொழில்நுட்பத்துடன் கூடிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஊழியப்படை

**3.** சந்தைப் பொருளாதார முறைமையில் விலையின் முக்கிய தொழிற்பாடு,

(1) பொருளாதாரத்தை நிறைதொழில் மட்டம் வரை கொண்டு செல்வதாகும்.
(2) பொருளாதாரச் சமமின்மையைக் குறைத்தலாகும்.
(3) போட்டித்தன்மையுடைய உற்பத்தித்துறையிடையே அருமையான வளங்களை பங்கிடுவதாகும்.
(4) ஆடம்பரப் பொருள் உற்பத்தியை ஊக்கமிழக்கச் செய்வதாகும்.
(5) உற்பத்தி மற்றும் நுகர்வுத் தொழிற்பாட்டின்போது ஏற்படும் தடைகளை அகற்றுவதாகும்.

**4.** பின்வரும் வரைபடம் பொருளாரமொன்றின் உற்பத்திச் சாத்திய எல்லை வளையியைக் காட்டுகின்றது.




இப்பொருளாதாரம் தொடர்பாக பின்வரும் கூற்றுகளுள் எது சரியானது?

(1) A புள்ளியில் இருந்து B புள்ளியை நோக்கிச் செல்லும்போது குறைந்து செல்லும் சந்தர்ப்பச் செலவு காட்டப்பட்டுள்ளது.
(2) F புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கிச் செல்வதற்காக அரிசி உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது அவசியமாகும்.
(3) F புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கிச் செல்லல் அரிசி இறக்குமதி துரிதமாக அதிகரிப்பதால் நிகழ்வதாகும்.
(4) A புள்ளியில் வளப்பங்கீட்டின் வினைத்திறன் காணப்பட்ட போதிலும், உற்பத்தி வினைத்திறன் காணப்படவில்லை.
(5) B புள்ளியில் உற்பத்தி வினைத்திறன் காணப்பட்ட போதிலும், வளப்பங்கீட்டின் வினைத்திறன் காணப்படவில்லை.

**5.** பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?

(1) கேள்வி வளையியில் அமைந்துள்ள எந்த புள்ளியும் கேள்வியைக் காட்டும்.
(2) கேள்வி வளையியின் புள்ளிகளிடையே பயணித்தல் கேள்வி மாற்றத்தைக் காட்டப்படும்.
(3) கேள்வி வளையி வலதுபுறமாக நகர்தல் கேள்வி அதிகரிப்பைக் காட்டும்.
(4) கேள்வி வளையி இடதுபுறமாக நகர்தல் கேள்வி குறைதலைக் காட்டும்.
(5) கேள்வி வளையியிலுள்ள உள்ள புள்ளிகளிடையே பயணித்தல் கேள்வியின் அளவு மாற்றமடைதலைக் காட்டும்.

**6.** சந்தையில் காணப்படும் பட்டருக்கான நிரம்பல் வளையியைக் காட்டும் சமன்பாடு, $Q_{S1} = -200 + 10P$ இலிருந்து $Q_{S2} = -100 + 10P$ வரை மாற்றமடைவதற்கான காரணம்,

(1) பட்டருக்கான சந்தை விலை அதிகரித்தலாகும்.
(2) பாலின் விலை அதிகரித்தலாகும்.
(3) பட்டர் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கலாகும்.
(4) பட்டருக்கு உற்பத்தி வரி விதிக்கப்படுதலாகும்.
(5) குடித்தன வருமானம் அதிகரித்தலாகும்.

**7.** சீனிக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைந்தது எனக் கருதுக, சீனி உற்பத்தியின் மீது உற்பத்தி வரி விதிக்கப்பட்டால் விலை, கேள்வியின் அளவு மற்றும் நுகர்வோர் சுவை என்பன பின்வருவனவற்றுள் எந்த விதத்தில் மாற்றமடையும்?

| | விலை | கேள்வியின் அளவு | நுகர்வோர் சுவை |
|---|---|---|---|
| (1) | குறையும். | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |
| (2) | குறையும். | குறையும். | குறையும். |
| (3) | அதிகரிக்கும். | குறையும். | குறையும். |
| (4) | அதிகரிக்கும். | குறையும். | அதிகரிக்கும். |
| (5) | அதிகரிக்கும். | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |

**8.** குறித்த ஒரு பண்டத்துக்கான சந்தை கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வரும் சமன்பாடுகளின் மூலம் விபரிக்கப்படுகின்றது.

$Q_D = 400 - 7P$ (கேள்வி) $Q_S = -100 + 3P$ (நிரம்பல்)

சந்தைச் சமநிலையின் போது பண்டத்தின் விலை மற்றும் மொத்த வருமானம் எவ்வளவு?

| | சமநிலை விலை (ரூ.) | மொத்த வருமானம் (ரூ.) |
|---|---|---|
| (1) | 30 | 1500 |
| (2) | 30 | 2000 |
| (3) | 50 | 2400 |
| (4) | 50 | 2500 |
| (5) | 65 | 3500 |

**9.** கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டும் அதிகரித்தால்,

(1) சமநிலை விலை அதிகரிப்பதுடன் சமநிலைத் தொகையும் அதிகரிக்கும்.
(2) சமநிலை விலை வீழ்ச்சியடைவதுடன் சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(3) சமநிலை விலை அதிகரித்தாலும் வீழ்ச்சி அடைந்தாலும் சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(4) சமநிலை விலை அதிகரிப்பதுடன் சமநிலைத் தொகை அதிகரிக்கும் அல்லது குறையும்.
(5) சமநிலை விலை குறைவடைவதுடன் சமநிலைத் தொகை அதிகரிக்கும் அல்லது குறையும்.


**10.** குறித்த ஒரு போகத்தின் போது விவசாயிகளின் விளைச்சல் அதிகரித்தாலும் அவர்களின் விற்பனை வருமானம் வீழ்ச்சியடைந்தது. பின்வரும் எந்நிலைமை இதில் செல்வாக்குச் செலுத்தும்?

(1) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வான நிரம்பலும்
(2) நெகிழ்வான கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும்
(3) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும்
(4) பூரண நெகிழ்ச்சிக் கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும்
(5) நெகிழ்வான கேள்வியும் பூரண நெகிழ்ச்சிக்கான நிரம்பலும்

**11.** போட்டிச்சந்தையொன்றில் விற்கப்படும் சாதாரண உற்பத்தியாளர்களுக்கு பண்டமொன்றிற்கு அரசாங்கம் அலகு ரீதியான மானியம் வழங்க தீர்மானித்துள்ளதாகக் கருதுக. மானியத்தின் பின்னர் மற்றும் உற்பத்தியாளர் மிகை நுகர்வு மிகை என்பவற்றில் ஏற்படும் பாதிப்பு யாது?

| | உற்பத்தியாளர் மிகை | நுகர்வோர் மிகை |
|---|---|---|
| (1) | குறைவடையும் | குறைவடையும் |
| (2) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (3) | குறைவடையும் | அதிகரிக்கும் |
| (4) | குறைவடையும் | மாற்றமில்லை |
| (5) | மாற்றமில்லை | குறைவடையும் |

**12.** பெரிய வெங்காயச் சந்தையின் குறுங்கால கேள்வி, நிரம்பல் வளையிகள் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.




அரசாங்கத்தினால் பெரிய வெங்காயத்துக்கு 40 மில்லியன் கிலோகிராம் கோட்டா (Quota) பெரிய வெங்காய உற்பத்தியாளர்களுக்கு வழங்கத் தீர்மானித்தால், ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கான சந்தைச் சமநிலை விலை யாது?

(1) ரூ.150 (2) ரூ.100 (3) ரூ.50
(4) ரூ.50 இனை விடக் குறைவு. (5) ரூ.100 இனை விடக் குறைவாகும்.

**13.** குறித்தவொரு விவசாயப் பண்டத்திற்கான வருடாந்த கேள்வி, நிரம்பல் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| விலை (ஒரு கிலோகிராம் ரூ.) | கேள்வித்தொகை (கிலோகிராம்/மில்லியனில்) | நிரம்பல் தொகை (கிலோகிராம்/மில்லியனில்) |
|---|---|---|
| 40 | 30 | 10 |
| 50 | 25 | 15 |
| 60 | 20 | 20 |
| 70 | 15 | 25 |
| 80 | 10 | 30 |

இச்சந்தையில் தலையிடுவதன் மூலம் ரூ.70 இனைக் குறைந்தபட்ச பயனுறுதியான விலையாகப் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றது. இந்நடவடிக்கை காரணமாக அரசாங்கம் வருடாந்தம் சுமக்க வேண்டி செலவு மில்லியன் ரூபாவில்.

(1) 700 ஆகும். (2) 950 ஆகும். (3) 1,050 ஆகும்.
(4) 1,300 ஆகும். (5) 1,700 ஆகும்.

**14.** குறிப்பிட்ட ஒரு உற்பத்திக் காரணியின் மொத்த உழைப்பானது பொருளியல் வாடகையை மட்டும் கொண்டிருத்தல் அக்காரணியின் வழங்கல்,

(1) பூரண நெகிழ்சியற்றிருக்கும் போதாகும்.
(2) பூரண நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் போதாகும்.
(3) அலகு நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் போதாகும்.
(4) நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் போதாகும்.
(5) நெகிழ்ச்சியற்றிருக்கும் போதாகும்.

**15.** ஊழியத்தின் எல்லை உற்பத்தி (MP), ஊழியத்தின் சராசரி உற்பத்திக்கு (AP) சமமாகும் போது,

(1) ஊழியத்தின் எல்லை உற்பத்தி உச்ச நிலையை அடையும்.
(2) உற்பத்தியின் எல்லைச்செலவு குறைவடையும்.
(3) எல்லைச்செலவானது குறைந்த சராசரி மாறும் செலவுக்குச் (AVC) சமனாகும்.
(4) சராசரி மொத்தச் செலவு (ATC) குறைவடையும்.
(5) ஊழியத்தின் மொத்த உற்பத்தி உச்ச நிலையை அடையும்.

**16.** குறுங்கால உற்பத்தி நிறுவனமொன்று மாறும் உள்ளீடுகளை அதிகரித்து உற்பத்தியை அதிகரிக்கும்போது, அதன் சராசரி மொத்தச் செலவு (ATC) வளையி சராசரி மாறும் செலவு வளையிக்கு மிக நெருக்கமாக அமைவது, வெளியீடு அதிகரிக்கும் போது,

(1) மொத்தச் செலவு (TC) அதிகரிப்பதனாலாகும்.
(2) மொத்தச் செலவு (TC) குறைவதனாலாகும்.
(3) சராசரி நிலையான செலவு (AFC) குறைவதனாலாகும்.
(4) சராசரி மாறும் செலவு (AVC) குறைவதனாலாகும்.
(5) எல்லைச்செலவு (MC) அதிகரிப்பதனாலாகும்.

**17.** குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்றில் இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம் 500 அலகுகளும், சந்தைச் சமநிலை விலை ரூ.20 என்றும் கருதுக. இவ் உற்பத்தி மட்டத்தில் நிறுவனம் ரூ.2000 பொருளியல் இலாபத்தை உழைக்கின்றது. சமநிலை வெளியீட்டு மட்டத்தில் நிறுவனத்தின் சராசரி நிலையான செலவு (AFC) ரூ.4 எனின், உற்பத்தி மிகை,

(1) ரூ.4,000 ஆகும். (2) ரூ.6,000 ஆகும். (3) ரூ.8,000 ஆகும்.
(4) ரூ.10,000 ஆகும். (5) ரூ.12,000 ஆகும்.

**18.** தேசிய கணக்கீட்டில் அடிப்படை விலையின் கீழ் மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி (GVA) எனக் கருதப்படுவது,

(1) பொருளாதாரப் பிரதேசத்தில் வதிவிட நிறுவன அலகுகளினால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பண்டங்கள், சேவைகளின் பணரீதியான பெறுமதியாகும்.
(2) பொருளாதாரப் பிரதேசத்தில் வதிவிட நிறுவன அலகுகளினால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பண்டங்கள் சேவைகளின் பண ரீதியான பெறுமதி + உற்பத்தி மீதான தேறிய வரிகளாகும்.
(3) அடிப்படை விலையில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதி + உற்பத்தி மீதான ஏனைய தேறிய வரிகளாகும்.
(4) ஆரம்ப வருமானங்களின் கூட்டுத்தொகை - நிலையான மூலதன நுகர்வாகும்.
(5) அடிப்படை விலையில் வெளியீட்டின் மொத்தப் பெறுமதி - கொள்வனவாளரின் விலையில் இடை நுகர்வாகும்.

**19.** வருமான வழியின் படி சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தியின் பெறுமதியாவது,

(1) ஊழியர் வருமானம் + மொத்த செயற்பாட்டு மிகை + கலப்பு வருமானம் + உற்பத்தியின் மீதான ஏனைய வரிகள் - உற்பத்தியின் மீதான ஏனைய மானியங்கள் + உற்பத்தி மீதான தேறிய வரிகள்

(2) ஊழியர் வருமானம் + தேறிய செயற்பாட்டு மிகை + கலப்பு வருமானம் + உற்பத்தியின் மீதான ஏனைய வரிகள் - உற்பத்தியின் மீதான ஏனைய மானியம் + உற்பத்தி மீதான தேறிய வரிகள்

(3) ஊழியர் வருமானம் + மொத்த செயற்பாட்டு மிகை + கலப்பு வருமானம் - உற்பத்தியின் மீதான ஏனைய வரிகள் - உற்பத்தியின் மீதான ஏனைய மானியம்

(4) ஊழியர் வருமானம் + மொத்த செயற்பாட்டு மிகை + உற்பத்தியின் மீதான ஏனைய வரிகள் - உற்பத்தியின் மீதான ஏனைய மானியம்

(5) ஊழியர் வருமானம் + மொத்த செயற்பாட்டு மிகை + கலப்ப வருமானம் + உற்பத்தியின் மீதான தேறிய வரிகள்

**20.** குறித்த வருடமொன்றில், குறித்த ஒரு நாட்டின் மூலதன வழங்கலில் அடங்கும் சில விடயங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| விடயம் | பெறுமதி (மில்லியன்/ரூபா.) |
|---|---|
| வாழும் வீடு, கட்டடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்கள் | 5000 |
| இயந்திரம், கருவிகள் | 1000 |
| பாற் பசுக்கள் | 100 |
| கணினி மென்பொருள் மற்றும் தரவுத்தொகுதி | 200 |
| காணி அபிவிருத்தி | 400 |
| ஆக்கவுரிமையும் அனுமதிப் பத்திரக் கைப்பற்றலும் | 300 |
| ஆவணங்களிலேற்பட்ட மாற்றம் | 150 |
| பெறுமதியானவற்றைக் கைப்பற்றல் - விடுவித்தல் | 50 |
| முடிவுப் பொருள் மற்றும் மூலப்பொருள் | 50 |

இந்நாட்டின் மொத்த உள்நாட்டு மூலதன வழங்கலும் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன வழங்கலும் முறையே மில்லியன் ரூபாவில்,

(1) 7200 உம் 7500 உம் ஆகும்.
(2) 7200 உம் 7000 உம் ஆகும்.
(3) 6700 உம் 6650 உம் ஆகும்.
(4) 7250 உம் 7200 உம் ஆகும்.
(5) 7000 உம் 7200 உம் ஆகும்.

**21.** தேசிய கணக்கீடுகளைத் தயாரிக்கும்போது உற்பத்தியில் இருந்து அகற்றப்படுவது பின்வருவனவற்றுள் எவையாகும்?

(1) குடும்ப அலகுகளினால் சுயநுகர்வுக்காக விவசாயப் பயிர்களைப் பயிரிடல்

(2) குடும்ப அலகுகளினால் தமது அங்கத்தவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்

(3) தொண்டரடிப்படையிலான ஊழியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களும் சேவைகளும்

(4) பங்குச் சந்தையில் தரகர்கள் உழைத்த தரகுக் கட்டணங்கள்

(5) வங்கி வைப்பிற்காக வைப்பாளர்கள் உழைத்த வட்டி வருமானம்

**22.** கருதுகோள் அடிப்படையான குறித்தவொரு பொருளாதாரத்தின் தேசிய கணக்குகளுடன் தொடர்புபட்ட சில தரவுகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| உருப்படி | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 10,000 |
| தனியார் நுகர்வு | 6400 |
| மொத்த உள்நாட்டு மூலதன வழங்கல் | 1600 |
| தேறிய ஏற்றுமதி | -500 |

இப்பொருளாரத்தில் அரச நுகர்வு மற்றும் உள்நாட்டுச் சேமிப்பின் பெறுமதிகள் எவ்வளவு?

| | அரச நுகர்வு (பில்லியன் ரூபா) | உள்நாட்டுச் சேமிப்பு (பில்லியன் ரூபா) |
|---|---|---|
| (1) | 2000 | 1000 |
| (2) | 2500 | 1100 |
| (3) | 2500 | 2100 |
| (4) | 2600 | 1200 |
| (5) | 3000 | 1100 |


**23.** நுகர்வுச் சார்பு 45° கோட்டிற்கு கீழாகக் காணப்படும் போது, வீட்டுத்துறை

(1) அதிகரிக்கும் வருமானம் முழுவதையும் செலவழிக்கும்.
(2) அவர்களின் செலவிடத்தக்க வருமானத்தைவிட கூடுதலாக நுகர்வை மேற்கொள்ளும் .
(3) அவர்களின் செலவிடத்தக்க வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்கும்.
(4) அதிகரிக்கும் வருமானம் முழுவதையும் சேமிக்கும்.
(5) சேமிப்பில் ஈடுபடமாட்டார்.

**24.** அரச நடவடிக்கைகள் அற்ற மூடிய பொருளாதாரமொன்றில் 200 மில்லியன் ரூபாவினால் முதலீடு அதிகரிக்கும்போது 800 மில்லியன் ரூபாவால் வருமானம் அதிகரிக்குமாயின், இப் பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் (MPC)

(1) 0.80 ஆகும். (2) 0.75 ஆகும். (3) 0.70 ஆகும். (4) 0.65 ஆகும். (5) 0.60 ஆகும்.

**25.** குறித்த பொருளாதாரமொன்றின் குறுங்கால மொத்தக் கேள்வி வளையியும் மொத்த நிரம்பல் வளையியும் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




மொத்த கேள்வி வளையி $AD_1$ இலிருந்து $AD_2$ இற்கு நகர்தலை பின்வருவற்றில் எதன் மூலம் விளக்க முடியும்?

(1) வட்டி வீதம் அதிகரித்தல்
(2) அரச செலவு அதிகரித்தல்
(3) தேறிய ஏற்றுமதி அதிகரித்தல்
(4) பணவீக்க வீதம் குறைவடைதல்
(5) வரி குறைவடைதல்

**26.** வீட்டுத்துறையினரால் ஒரு சொத்தாக பணத்துக்கான கேள்வி அதிகரிப்பது,

(1) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையும் போதாகும்.
(2) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் போதாகும்.
(3) பிணைப்பத்திரங்களின் விலை குறைவடையும்.
(4) பணநிரம்பல் வீழ்ச்சியடையும் போதாகும்.
(5) பெயரளவு வட்டி வீதம் வீழ்ச்சியடையும் போதாகும்.

**27.** வாடிக்கையாளரொருவர் தனது வங்கிக் கணக்கிலிருந்து ரூ.50,000 பணத்தை மீண்டும் பெற்றார் எனக் கருதுக. 20% சட்டரீதியான ஒதுக்கு வீதம் காணப்படுவதுடன் ஏனைய காரணிகள் மாறாதிருக்குமாயின் இக்கொடுக்கல் வாங்கல் நேரடியாக,

(1) பண நிரம்பலை ரூ.50,000 இனால் வீழ்ச்சியடையச் செய்யும்.
(2) வங்கி வைப்புக்களை ரூ.50,000 இனால் வீழ்ச்சியடையச் செய்யும்.
(3) பண நிரம்பலை ரூ.250,000 இனால் வீழ்ச்சியடையச் செய்யும்.
(4) வங்கி வைப்புக்களை ரூ.250,000 இனால் வீழ்ச்சியடையச் செய்யும்.
(5) வங்கி வைப்புக்களை ரூ.200,000 இனால் வீழ்ச்சியடையச் செய்யும்.

**28.** மத்திய வங்கி திறந்த சந்தையில் அரச பிணைப்பத்திரங்களை விற்பனை செய்தால்,

(1) வணிக வங்கிகளின் ஒதுக்குகள் உயர்வடைவதுடன் உயர்வலுப் பண இருப்பும் உயர்வடையும்.
(2) வணிக வங்கிகளின் ஒதுக்குகள் குறைவடைவதுடன் உயர்வலுப் பண இருப்பும் குறைவடையும்.
(3) வணிக வங்கிகளின் ஒதுக்குகள் உயர்வடைவதுடன் உயர்வலுப் பண இருப்பும் வீழ்ச்சியடையும்.
(4) வணிக வங்கிகளின் ஒதுக்குகள் குறைவதுடன் உயர்வலுப் பண இருப்பும் உயர்வடையும்.
(5) வணிக வங்கிகளின் ஒதுக்குகள் குறைவடைவதுடன் வங்கியில் மிகை ஒதுக்குகள் காணப்படின் பண நிரம்பல் அதிகரிக்கும்.

**29.** விரிவடைந்த நிதிக் கொள்கையொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் வட்டி வீதம், தனியார் முதலீடு, மொத்தக்கேள்வி மற்றும் உள்நாட்டு உற்பத்தி என்பவற்றின் மீது எவ்வாறான செல்வாக்கு எதிர்பார்க்கப்படும்?

| | வட்டிவீதம் | தனியார் முதலீடு | மொத்தக்கேள்வி | உள்நாட்டு உற்பத்தி |
|---|---|---|---|---|
| (1) | வீழ்ச்சியடைதல் | அதிகரித்தல் | அதிகரித்தல் | அதிகரித்தல் |
| (2) | வீழ்ச்சியடைதல் | அதிகரித்தல் | அதிகரித்தல் | வீழ்ச்சியடைதல் |
| (3) | அதிகரித்தல் | அதிகரித்தல் | அதிகரித்தல் | வீழ்ச்சியடைதல் |
| (4) | அதிகரித்தல் | வீழ்ச்சியடைதல் | அதிகரித்தல் | அதிகரித்தல் |
| (5) | வீழ்ச்சியடைதல் | அதிகரித்தல் | வீழ்ச்சியடைதல் | வீழ்ச்சியடைதல் |

**30.** வங்கித் தொகுதியில் தொழிற்படும் வணிக வங்கியொன்றின் ஐந்தொகை கீழே காட்டப்பட்டுள்ளது.

| பொறுப்புக்கள் (மில்லியன் ரூபா) | | சொத்துக்கள் (மில்லியன் ரூபா) | |
|---|---|---|---|
| வைப்பு | 100,000 | ஒதுக்காகவுள்ள பணம் | 24,000 |
| | | பிணைமுறிகள் | 36,000 |
| | | கடன் | 40,000 |
| மொத்தம் | 100,000 | மொத்தம் | 100,000 |

சட்ட ரீதியான ஒதுக்கு வீதம் 20% ஆக இருந்தால், இவ்வங்கி புதிய கடனாக உயர்ந்த பட்சம் எவ்வளவு தொகையை வழங்க முடியும்?

(1) 2,000 மில்லியன் ரூபா (2) 4,000 மில்லியன் ரூபா (3) 8,000 மில்லியன் ரூபா
(4) 14,000 மில்லியன் ரூபா (5) 20,000 மில்லியன் ரூபா

**31.** பொதுப் பண்டமொன்று தொடர்பாக இணங்கக்கூடிய கூற்று அது,

(1) விசேடமாக அரசாங்கத்தால் அதன் அமயச்செலவை விட குறைந்த விலையில் வழங்கப்படும்.
(2) விசேடமாக தனியார் துறையினால் அதன் சந்தை விலையை விட குறைந்த விலையில் வழங்கப்படும்.
(3) தனியார் மற்றும் அரசாங்கம் ஆகிய இரு துறைகளினாலும் அதன் சந்தை விலையை விடக் குறைந்த விலையில் வழங்கப்படும்.
(4) ஒருவரின் நுகர்வு ஏனையோரின் நுகர்வைப் பாதிக்காது.
(5) உற்பத்தியின் போது அமயச்செலவு ஏற்படாது.

**32.** சந்தை தோல்வி என்பது,

(1) சந்தைக் கேள்வியும் நிரம்பலும் சமப்படாத நிலைமையாகும்.
(2) சந்தையின் மூலம் வளங்கள் வினைத்திறனாக பங்கிடப்படாத நிலைமையாகும்.
(3) பொருளியல் இலாபம் பூச்சியமாகும்போது உற்பத்தி நிறுவனங்கள் கைத்தொழிலை விட்டு விலகிச் செல்லும் நிலைமையாகும்.
(4) மத்திய திட்டமிடல் பொருளாதார முறைகளில் மட்டும் காணப்படும் நிலைமையாகும்.
(5) அரசு வரி அறவிடுவதால் பொருளாதார மிகை வீழ்ச்சியடையும் நிலைமையாகும்.

**33.** குறிப்பிட்ட ஒரு வதிவிட வீட்டுச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய நன்மைகளும் செலவுகளும் பற்றிய தரவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

(பெறுமதி மில்லியன் ரூபாவிலாகும்)

| | | | |
|---|---|---|---|
| தனியார் நன்மை | 800 | தனியார் செலவு | 500 |
| வெளிவாரி நன்மை | 100 | வெளிவாரிச் செலவு | 150 |

மேலுள்ள அட்டவணைப்படி வரக்கூடிய முடிவு,

(1) சமூக நன்மை 100 மில்லியன் ரூபா என்பதாகும்.
(2) சமூகச் செலவு 250 மில்லியன் ரூபா என்பதாகும்.
(3) சமூக நன்மை 1300 மில்லியன் ரூபா என்பதாகும்.
(4) சமூக நன்மையை மிஞ்சிய சமூகச் செலவு நிலவுகிறது என்பதாகும்.
(5) சமூகச் செலவினை மிஞ்சிய சமூக நன்மை நிலவுகிறது என்பதாகும்.

**34.** பின்வருவனவற்றுள் தேய்முறை வரிமுறையின் பண்பு எது?

(1) எல்லா வருமான மட்டத்திலும் வருமானத்திற்குச் சமமான சதவீதம் வரியாகச் செலுத்தப்படும்.
(2) குறைந்த வருமானத்தை உழைப்போரிடமிருந்து பெறப்படும் வரி வீதத்தை விட உயர் வருமானம் உழைப்போரிடமிருந்து பெறப்படும் வரி வீதம் குறைவாகும்.
(3) குறைந்த வருமானம் உழைப்போரிடமிருந்து பெறப்படும் வரியினளவை விட உயர் வருமானம் உழைப்போரிடமிருந்து பெறப்படும் வரியினளவு அதிகமாகும்.
(4) குறைந்த வருமானத்தை உழைப்போர் செலுத்தும் வரியினளவை விட உயர் வருமானம் உழைப்போர் செலுத்தும் வரியினளவு அதிகமாகும்.
(5) வருமான மட்டம் அதிகரிக்கும் போது செலுத்தப்படும் வரி வீதமும் அதிகரிக்கும்.

**35.** அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வரி வருமானத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமிடையிலான விகிதாசாரம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் **அல்லாதது** பின்வருவனவற்றுள் எதுவாகும்?

(1) நேரடி வெளிநாட்டு முதலீட்டை கவர்வதற்காக வரிச்சலுகை வழங்கப்பட்டமை
(2) அரசாங்கத்தின் குறுங்கால பணத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக வரிமுறையில் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற மாற்றங்கள்
(3) வரி செலுத்தாது விடல், வரி செலுத்தலிலிருந்து தப்பியிருத்தலுடன் கூடிய பாரிய முறையற்ற பொருளாதாரம் காணப்பட்டமை
(4) அரசாங்கச் செலவுகளுக்கும் நிதியிடுவதற்காக வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருக்கும் தன்மை அதிகரித்தமை
(5) வரி தொடர்பான சட்டங்கள் சிக்கலானவையாக அமைந்தமை, அதிக எண்ணிக்கையான வரி முறைகள் காணப்படாமை என்பன காரணமாக வரி நிர்வாகம் வினைதிறனற்றும் போனமை

**36.** உள்நாட்டு பீங்கான் உற்பத்தியாளர் ஒருவர் ரூ.1000 பெறுமதியான இறக்குமதி உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த தேநீர் குவளையொன்றை ரூ.3000 இற்கு உள்நாட்டுச் சந்தையில் செய்கிறார். அதற்குச் சமமான இறக்குமதி செய்யப்பட்ட தேநீர் குவளையொன்று தடையற்ற உள்நாட்டுச் சந்தையில் சுங்கவரியின்றி ரூ.3000 இற்கு விற்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் தேநீர் குவளையின் மீது 20% சுங்கவரி விதிக்கப்பட்டால் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம்

(1) 15% ஆகும். (2) 20% ஆகும். (3) 28% ஆகும.

(4) 30% ஆகும். (5) 33.3% ஆகும்.

**37.** இலங்கைப் பண்டங்கள் வர்த்தக மீதியின் சாதகமான மாற்றத்திற்கான காரணமாகக் குறிப்பிடக்கூடியது,

(1) எஞ்சிய உலகுடன் மேற்கொள்ளும் இலங்கையின் ஏற்றுமதி வீழ்ச்சியடைதல்
(2) ஏனைய வெளிநாட்டு பிரயோக நாணயங்களுக்கு சார்பாக இலங்கை ரூபாவில் வெளிவாரிப் பெறுமதி விழ்ச்சியடைதல்
(3) இலங்கை வர்த்தக மீதியில் மிகையொன்று காணப்படுதல்
(4) இலங்கையின் ஏற்றுமதி விலைக்குச் சார்பாக இறக்குமதி விலை வீழ்ச்சியடைதல்
(5) இலங்கையின் இறக்குமதிச் செலவிற்கு சார்பாக ஏற்றுமதி வருவாய் அதிகரித்தல்

**38.** இறக்குமதியின் மீதான கோட்டா **(Quota)** விதிப்பதின் எதிர்விளைவாக பின்வருவனவற்றில் எது நடைபெறுமென எதிர்வு கூறலாம்?

(1) போட்டித்தன்மை அதிகரித்தலும் நுகர்வு விலை வீழ்ச்சியடைதலும்
(2) இறக்குமதிப் பொருட்களால் கிடைக்கும் அரச வருமானம் உயர்வடைதல்
(3) தேறிய ஏற்றுமதி அதிகரித்தலும் மொத்த நிரம்பல் அதிகரித்தலும்
(4) நுகர்வோர் விலைகள் வீழ்ச்சியடைதலும் வளப்பங்கீட்டின் வினைத்திறன் அதிகரித்தலும்
(5) நுகர்வோர் விலைகள் அதிகரித்தலும் வளப்பங்கீட்டின் வினைத்திறனின்மையும்

**39.** இலங்கையின் சென்மதி நிலுவை அட்டவணையில் வர்த்தகக் கணக்கின் வரவுப்பகுதியில் உருப்படியாக பின்வருவனவற்றுள் எந்தக் கொடுக்கல் வாங்கல் பதியப்படும்?

(1) இலங்கை உல்லாசப் பயணியொருவர் அமெரிக்காவுக்கான சுற்றுலாவில் 2,000 $ செலவிடல்
(2) மலேசியக் கம்பனியொன்றினால் இலங்கையின் செல்லிடத் தொலைபேசி கம்பனியொன்றின் $ 10,000 பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தல்
(3) சிங்கப்பூர் முதலீட்டாளரொருவர் 5000 $ செலுத்தி இலங்கை அரசாங்கத்தின் பிணைமுறிகளைக் கொள்வனவு செய்தல்
(4) இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 5,000 $ மில்லியனைத் திருப்பிச் செலுத்தல்
(5) ரஷ்யாவின் சிறப்புச் சந்தை விலைப்பின்னலொன்று 8,000 $ செலுத்தி இலங்கையின் தேயிலை இருப்பொன்றைக் கொள்வனவு செய்தல்

**40.** கருதுகோள் பொருளாதாரமொன்றின் சென்மதி நிலுவை அட்டவணையுடன் தொடர்புடைய சில தரவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| உருப்படி | பெறுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|
| ஏற்றுமதி | 12,000 |
| இறக்குமதி | 15,000 |
| சேவை (தேறிய) | 500 |
| ஆரம்ப வருமானம் (தேறிய) | 1,000 |
| இடைநிலை வருமானம் (தேறிய) | 500 |
| மூலதனமாற்றல் (தேறிய) | 400 |

இப்பொருளாதாரத்தின் நடைமுறைக்கணக்கின் மீதி மில்லியன் ரூபாயில்.

(1) 600 பற்றாக்குறை (2) 1000 பற்றாக்குறை (3) 3000 பற்றாக்குறை

(4) 1000 மிகை (5) 3000 மிகை

**41.** இலங்கை ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலரிற்கு எதிராக வீழ்ச்சியடைதலானது இலங்கைப் பொருளாதாரத்தில் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும்?

(1) இறக்குமதிக்கான கேள்வி அதிகரித்தலும் ஏற்றுமதிக்கான கேள்வி குறைவடைதலும்
(2) இறக்குமதிக்கான கேள்வி குறைவடைதலும் ஏற்றுமதிக்கான கேள்வி அதிகரித்தலும்
(3) இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய இரண்டுக்குமான கேள்வி அதிகரித்தல்
(4) இறக்குமதி விலை, ஏற்றுமதி விலை ஆகிய இரண்டும் வீழ்ச்சியடைதல்
(5) இறக்குமதி விலை, ஏற்றுமதி விலை ஆகிய இரண்டும் அதிகரித்தல்

**42.** உலக வர்த்தக நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது,

(1) பூகோள நிதி உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல்
(2) பூகோள வறுமையை ஆரம்பத்திலேயே இல்லாதொழித்தல்
(3) நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்ளல்
(4) அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
(5) பல்பக்க வர்த்தகத்தை விருத்திசெய்தல்

**43.** பொருளாதார வளர்ச்சியை மிகச் சிறப்பாக விளக்குவது,

(1) உற்பத்திச் சாத்திய எல்லை வளையி வலது புறமாக நகர்தலும் இயற்கையான வேலையின்மை வீதம் அதிகரித்தலுமாகும்.
(2) உற்பத்திச் சாத்திய எல்லை வளையி வலது புறமாக நகர்தலும் நீண்டகால மொத்த நிரம்பல் வளையி இடது புறமாக நகர்வதுமாகும்.
(3) உற்பத்திச் சாத்திய வளையி இடதுபுறமாக நகர்தலும் நீண்டகால மொத்த நிரம்பல் வளையி வலது புறமாக நகர்வதுமாகும்.
(4) உற்பத்திச் சாத்திய எல்லை வளையி இடது புறமாக நகர்வதும் நீண்டகால மொத்த நிரம்பல் வளையி வலதுபுறமாக நகர்வதுமாகும்.
(5) உற்பத்திச் சாத்திய எல்லை வளையி வலது புறமாக நகர்வதும் நீண்டகால மொத்த நிரம்பல் வளையி வலதுபுறமாக நகர்வதுமாகும்.

**44.** 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மூலம் இனங்காணப்பட்ட நிலை பேறான அபிவிருத்தி இலக்கு **அல்லாதது** பின்வருவனவற்றுள் எதுவாகும்?

(1) எல்லா இடங்களிலும் எல்லாக் கோணங்களிலிருந்தும் வறுமையை முழுமையாக ஒழித்தலாகும்.
(2) காலநிலை மாற்றத்தையும் அதன் பாதிப்பையும் தடுப்பதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
(3) பட்டினியை இல்லாதொழித்தலும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தலும் நிலைபேறான விவசாய முன்னேற்றத்தை ஏற்படுத்தலும்
(4) நாட்டினுள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் சமத்துவமின்மையை குறைத்தல்
(5) அனைவருக்கும் ஆரம்பக்கல்வியை வழங்குதல்

**45.** நாடுகள் பொருளாதார ரீதியாக ஒப்பிடுவதற்கும் வகைப்படுத்துவதற்கும் உலக வங்கியால் பயன்படுத்தப்படும் நியதி யாது?

(1) தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம்
(2) கொள்வனவுச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம்
(3) கொள்வனவுச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட தலைக்குரிய மொத்த உள்நாட்டு வருமானம்
(4) தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி
(5) தலைக்குரிய தேறிய தேசிய வருமானம்

**46.** 2016 இல் மேற்கொள்ளப்பட்ட வீட்டு அலகுகளின் வருமான செலவு ஆய்வின்படி இலங்கையின் வறுமையின் துறைரீதியான கட்டமைப்பு எந்தத் தரவு வரிசையில் சரியாகத் காட்டப்பட்டுள்ளது?

| வருமான வறுமைச் சுட்டி- (HCI) | | | |
|---|---|---|---|
| | நகரத் துறை (%) | கிராமியத்துறை (%) | தோட்டத்துறை (%) |
| (1) | 2.1 | 7.6 | 10.9 |
B - 1931 இலிருந்து அனுபவிக்கும் சர்வஜன வாக்குரிமை தடையாக உள்ளது.
C - மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சி முறை பங்காற்றியுள்ளது.
D - யாப்புறு ஆட்சியில் பொதுமக்கள் நம்பிக்கை வைத்தமை காரணமாகியுள்ளது.
E - ஜனநாயகமல்லாத மாற்று முறைகளில் பொது மக்களின் விருப்பமின்மை காரணமாகியது.

(1) A மட்டும் (2) A மற்றும் B (3) C மட்டும் (4) A மற்றும் D (5) E மட்டும்

(...............)

- **26 தொடக்கம் 30 வரையிலான ஒவ்வொரு வினா தொடர்பாகவும் இரு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட்டியிலுள்ள 1, 2, 3, 4, 5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதைத் தெரிவுசெய்து அதனிலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

அட்டவணை 1 இற்கான வழிகாட்டி

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் விபரிக்கிறது. |

அட்டவணை I

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| **26.** | பத்தொன்பதாம் யாப்புத் திருத்தத்தின் கீழ் பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் முதலாவதாகக் கூடி 4 ½ வருடங்கள் பூர்த்தியாகும் வரை ஜனாதிபதி அதனைக் கலைக்க முடியாது. | பிரதமரின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதியால் பாராளுமன்றைக் கலைக்க முடியும். (...............) |
| **27.** | சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கிருந்த நேரடி அதிகாரம் பதினெட்டாம் யாப்புத் திருத்தத்தின் மூலம் அகற்றப்பட்டது. | பதினெட்டாம் யாப்புத் திருத்தமானது விகிதசமப் பிரதிநிதித்துவ முறையில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. (...............) |
| **28.** | மாகாண சபைகள் முறைமையானது 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நேரடிப் பெறுபேறாகும். | 13 ஆம் யாப்புத் திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மாகாணசபைகள் தீவின் 9 மாகாணங்களையும் உள்ளடக்கியது. (...............) |
| **29.** | இலங்கையிலுள்ள விகிதசமப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் எந்தவொரு தனி அரசியல் கட்சியாலும் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்வது கடினமாகும். | வாக்காளர்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்பு விகிதசமப் பிரதிநிதித்துவ முறையினால் பலப்படுத்தப்பட்டுள்ளது. (...............) |
| **30.** | இலங்கையின் அரசியல் கட்சி முறைமையில் பிரதான இரு கட்சிகள் ஆதிக்கம் மிக்கனவாகும். | இலங்கையின் அரசியல் கட்சி முறைமை பல சிறிய கட்சிகளைக் கொண்ட இரு கட்சி ஆதிக்க முறையினதாகும். (...............) |

## பகுதி B

**31.** கல்விசார் முறையில் அரசியல் என்ற எண்ணக்கருவுக்கு **இரண்டு** பிரதான பொருள்கள் உண்டு. அவற்றைக் குறிப்பிடுக.

(i) ..........

(ii) ..........

**32.** 'அரசியல் கோட்பாடு' என்ற எண்ணக்கருவுக்கு இரண்டு பொருள்கள் உண்டு. **அவ்விரு** பொருள்களையும் குறிப்பிடுக.

(i) ..........

(ii) ..........

**33.** பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசாங்க முறைகளை முறையே குறிப்பிடுக.

(i) பரம்பரை முறையில் அரசத்துவத்துக்கு உரிமை கோரும் தனிநபர் ஆட்சி

..........

(ii) பொதுமக்களின் பிரதிநிதிகளின் மூலம் கொண்டு நடத்தப்படும் ஆட்சி

..........

**34.** பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசியல் கருத்தியல்கள் **இரண்டையும்** முறையே குறிப்பிடுக.

(i) அரச வழிபாடு ..........

(ii) அரசு பற்றிய வர்க்கமுறை விளக்கம் ..........

**35.** அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை முன்வைத்த ரூசோவின் முதற்கோளின் மூலம் முன்வைக்கப்படும் மூலக்கொள்கைகள் **இரண்டும்** யாவை?

(i) ..........

(ii) ..........

**36.** அரைகுறை ஜனாதிபதி முறை சில பண்புகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........

(ii) ..........

**37.** இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றங்களில் நிர்ணயமான முறையில் பாதிப்புச் செலுத்திய அரசியல் சீர்திருத்தங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........

(ii) ..........

**38.** 'தேசிய வாதம்' என்ற அரசியல் கருத்தியலானது **இரு** பிரதான இயல்புகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. அவை யாவை?

(i) ..........

(ii) ..........

**39.** இந்திய மதச்சார்பின்மை வாதத்தின் **இரு** பொருள்களையும் குறிப்பிடுக.

(i) ..........

(ii) ..........

**40.** மோதல்களின் செயற்பாடுகளுக்கு அமைவாக, அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்க முடியும். **அவ்விரு** வகைகளும் யாவை?

(i) ..........

(ii) ..........

**41.** சோல்பரி அரசாங்க முறையின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையானது மேல் மற்றும் கீழ் என்ற இரு மன்றங்களைக் கொண்டிருந்தது. அவற்றுள்

(i) மேல் மன்றம் என அழைக்கப்பட்டது எது? ..............................................................................................

(ii) கீழ் மன்றம் என அழைக்கப்பட்டது எது? ..............................................................................................

**42.** (i) 1972 அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது?

..............................................................................................................................................................

(ii) அதன் பதவிக்காலம் யாது? ..............................................................................................................

**43.** நவீன ஜனநாயக அரசாங்க முறைகளில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதில் இரண்டு தேர்தல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. **அவ்விரண்டையும்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

**44.** ஓர் அரசின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தின் படி அரசாங்க முறைகள் இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றன. **அவ்விரு** வகைகளையும் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

**45.** பொதுக் கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் நடைமுறை பற்றிய கொள்கை வட்டமானது ஏழு கட்டங்களைக் கொண்டதாகும். அதன் முதல் **இரண்டு** கட்டங்களையும் முறையே குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

**46.** பதினெட்டாம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ்,

(i) அரசாங்கத்தின் உயர் பதவிக்கு ஆட்களை நியமிப்பதற்காக ஜனாதிபதிக்கு அவதானிப்புகளை வழங்குவதற்குத் தாபிக்கப்பட்டிருந்த பேரவையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது? ..................................................................

(ii) அப்பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது? ..................................................................

**47.** பதின்மூன்றாம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் மூலம் அதிகாரங்கள் மூன்று அதிகார நிரல்களின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

**48.** இலங்கையின் அரசியல் கட்சி முறை தலைமைத்துவ ஆதிக்கக் கட்சிகள் இரண்டைக் கொண்ட இரு கூட்டுக்கட்சி முறை என்றழைக்கப்படுகின்றது. அந்த தலைமைத்துவ ஆதிக்கக் கட்சிகள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

**49.** தற்கால அரசுகள் வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பயன்படுத்தும் **இரண்டு** உபாயங்களைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

**50.** சார்க் அமைப்பின் தலைமையின் கீழ் செயற்படும் இலங்கை தொடர்புபட்டுள்ள **இரண்டு** வர்த்தக உடன்படிக்கைகளையும் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................................................................

(ii) ..............................................................................................................................................................

*** 

## (23) அரசியல் விஞ்ஞானம்

### வினாத்தாள் II

**அறிவுறுத்தல்கள்** :

* இவ் வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

**1.** "அரசியல் என்பது பிரசைகளது சமூக வாழ்வின் ஓர் அங்கமாகும்". ஆராய்க.

**2.** அரசியல் விஞ்ஞானத்துக்கான பின்வரும் அணுகுமுறைகளில் எவையேனும் **இரண்டினை** விபரிக்குக.
 (i) தத்துவார்த்த அணுகுமுறை
 (ii) ஒப்பீட்டு அணுகுமுறை
 (iii) பெண்ணிலைவாத அணுகுமுறை

**3.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க.
 (i) நவீன ஆள்புல அரசு
 (ii) நவ தாராளவாத அரசின் பண்புகள்
 (iii) சமதர்ம அரசு
 (iv) பூகோளமயமாக்கம் அரசுகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்

### பகுதி II

**4.** இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக.
 (i) காலனித்துவ இரட்டைப் பொருளாதாரம்
 (ii) சர்வஜன வாக்குரிமையின் அறிமுகத்தினால் ஏற்பட்ட சமூக, அரசியல் விளைவுகள்
 (iii) நவீன அரசுக்கான தளமிடப்படல்

**5.** சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றினதும் 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழமைந்த தேசிய அரசுப் பேரவையினதும் சட்டவாக்க அதிகாரங்களை ஒப்பிடுக.

**6.** 1978 யாப்பின் மீதான 18 மற்றும் 19 ஆம் திருத்தங்களின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒப்பிடுக.

**7.** 1978 அரசியல் யாப்பின் கீழ் பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க.
 (i) மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்குமிடையிலான தொடர்பு
 (ii) விகிதசமப் பிரதிநிதித்துவ முறைக்கு எதிரான விமர்சனங்கள்
 (iii) பிரதம மந்திரிப் பதவி
 (iv) நீதித்துறையின் சுதந்திரம்

### பகுதி III

**8.** பெரிய பிரித்தானியாவின் **அல்லது** இலங்கையின் அரசாங்க முறை ஒற்றையாட்சி அரசாங்க மாதிரியிலிருந்து மாற்றமுற்றுள்ள விதத்தை விபரிக்குக.

**9.** "மோதல் தீர்வு என்பது நீண்டதொரு செயன்முறையாகும்." விபரிக்குக.

**10.** பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்புகள் எழுதுக.
 (i) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அண்மைக்காலப் போக்குகள்
 (ii) அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக் குழுக்களுக்குமிடையிலான வேறுபாடுகள்
 (iii) சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரம்
 (iv) உலக அரசியலில் அரசு சார்பற்ற செயற்பாட்டாளர்கள்

* * *

# (24) அளவையியலும் விஞ்ஞானமுறையும்

## வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் I -** **நேரம் : 02 மணித்தியாலங்கள்**

**5** தெரிவுகளைக் கொண்ட **50** பல்தேர்வு வினாக்களைக் கொண்டது.
**எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு வினாவுக்கு **01** புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் **50** ஆகும்.

**வினாத்தாள் II -** **நேரம் : 03 மணித்தியாலங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)
இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது.

**பகுதி I** - இப்பகுதியின் வினாக்கள் **கட்டாயமானவை.** இப்பகுதி சுருக்கமான விடையளித்தல் வினாக்கள் **பத்தைக்** கொண்டது.ஒரு வினாவுக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் **20.**

II, III பகுதிகளில் ஒரு பகுதியிலிருந்து குறைந்தது **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒரு வினாவுக்கு 16 புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் 80 ஆகும்.

**பகுதி II** - கட்டுரை, அமைப்புக்கட்டுரை வகை வினாக்கள் **ஐந்தைக்** கொண்டது.

**பகுதி III** - கட்டுரை, அமைப்புக்கட்டுரை வகை வினாக்கள் **ஐந்தைக்** கொண்டது.

இறுதிப் புள்ளியைக் கணித்தல் : வினாத்தாள் I = 50
வினாத்தாள் II = 100 ÷ 2 = 50
இறுதிப் புள்ளி = 100

கவனிக்குக :

* இங்கு I, II வினாத்தாள்களில் பயன்படுத்தப்படும் தர்க்க ரீதியான விதிகள் மற்றும் குறியீடுகள் பின்வரும் வகையில் மட்டும் பயன்படுத்தப்படல் வேண்டும். மாணவர்கள் விடையளிக்கின்றபோது அவ்வாறான குறியீடுகளை பயன்படுத்தல் வேண்டும்.

எடுப்பு மற்றும் பயனிலைத் தர்க்கத்தின்போது

மறுப்பு மாறிலி: $\sim$, உட்கிடை: $\rightarrow$, இணைப்பு: $\wedge$, உறழ்வு: $\vee$, இருபால் நிபந்தனை: $\leftrightarrow$,
நிறைபொதுமையாக்கம்: $\Lambda$, குறைபொதுமையாக்கம்: V

வகுப்பு அளவையியலில்: A, B எனும் வகுப்பின் ஒன்றிப்பு: $A \cup B$, இடைவெட்டு: $A \cap B$ அல்லது AB, A இன் முழுமை: $\bar{A}$, உரையாடல் உலகு: U, வெற்று வகுப்பு: $\phi$, பூலியன் அட்சரகணிதத்தில்: கூட்டல் +, பெருக்கல் •, X இன் நிரப்பி $\bar{X}$, பெறுமானம் 1, 0

தர்க்கப் படலையில்: AND, OR, NOT, XOR என்பவை முறையே A, B எனும் உள்ளீடுகளுக்காக $A \cdot B$, $A+B$, $\bar{A}$, $A \oplus B$ எனும் வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

# (24) அளவையியலும் விஞ்ஞானமுறையும்
## வினாத்தாள் I

**அறிவுறுத்தல்கள் :**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க. பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிப்பதற்குரிய தாள் வழங்கப்படும்.

---

**1.** அளவையியல் என்பது

(1) வடிவ விஞ்ஞானம் (2) அளவீட்டு விஞ்ஞானம் (3) இயற்கை விஞ்ஞானம்
(4) சமூக விஞ்ஞானம் (5) அனுபவ விஞ்ஞானம்

**2.** உயிரியல் விஞ்ஞானத்தின் ஆய்வு விடயமாக அமைவது

(1) மிருக உலகம் மட்டும்
(2) தாவர உலகம் மட்டும்
(3) விலங்கு, தாவர உலகம்
(4) விலங்கு உலகமும் தாவர உலகமும் அல்ல
(5) பௌதீகம் அல்லாத உலகம்

**3.** பின்வரும் பதச் சோடிகளுள் முரணாக அமையும் சோடி எது?

(1) மகிழ்ச்சி - துயரம் (2) உயரம் - கட்டை (3) அழகு - அவலட்சணம்
(4) நேர்மை - நேர்மையின்மை (5) வெள்ளை - கறுப்பு

**4.** கருதுகோள் எளிமையானது என்பதற்கு மிகவும் பொருத்தமான விளக்கமாக அமைவது

(1) கோட்பாட்டு ரீதியான எண்ணக்கரு மூலம் உலகத்தினைத் தெளிவுபடுத்தல்
(2) அனுபவ ரீதியான சோதனைகளின் மூலம் பொய்ப்பிக்கக் கூடியதான நிலை
(3) எமக்கு பரிச்சயமான விடயங்கள் உள்ளிட்டவை கருதுகோளாக உள்ளமை
(4) நேரடி புலக்காட்சிக்கு இலகுவில் உட்படுத்திக் கொள்ளக் கூடியமை
(5) குறைந்த எண்ணக்கருக்களில் பிரதான துறை சார்ந்த கூடுதலான பண்புகளை வெளிப்படுத்தும் ஆற்றல்

**5.** "எல்லா மாணவர்களும் அறிவாளிகள் ஆயின் சில அறிவாளிகள் மாணவர்கள் ஆவர்" என்பது

(1) வாய்ப்பான எதிர்மாற்றம் (2) வாய்ப்பான மறுமாற்றம்
(3) வாய்ப்பான நேர்மாற்றம் (4) வாய்ப்பற்ற எதிர்மாற்றம்
(5) வாய்ப்பற்ற மறுமாற்றம்

**6.** நோக்கு கொள்கை விளக்கத்திற்கு உதாரணமாக அமைவது

(1) மேலே உள்ள பொருட்கள் கீழே வீழ்வது புவியீர்ப்பு கோட்பாட்டினாலாகும்.
(2) திரவம் ஒன்று அமிலத்தன்மை உடையதாயின் அது நீல நிற பாசிச் சாயத்தாளை சிவப்பு நிறமாக மாற்றக்கூடியது.
(3) கோதுமை மாவின் விற்பனை விலை அதிகரிப்பது எதிர்காலத்தில் மக்களை மூன்று வேளையும் சோறு உண்ண வைப்பதற்காகவாகும்.
(4) பெற்றோரின் பண்புகள் சந்ததியினருக்கு கிடைக்கப் பெறுவது 3 : 1 விகிதத்தின் அடிப்படையில் ஆகும்.
(5) சிறுநீரகம் சிறுநீரை சுத்திகரிப்பதற்காக உள்ளது.

**7.** எல்லா மனிதரும் இரு கால்களை உடையவர்.
இது இரு கால்களை உடையது.
ஆகவே இது மனிதன்.
என்பதனை பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட நியாயத்தொடை என எடுத்துக்கொண்டால் குறித்த நியாயத் தொடை

(1) வாய்ப்பானதாகும்.
(2) மத்திய பதம் வியாப்தியடையா போலியினை ஏற்படுத்தியுள்ளது.
(3) பெரும்பத சட்டவிரோத போலியினை ஏற்படுத்தியுள்ளது.
(4) சிறுபத சட்டவிரோத போலியினை ஏற்படுத்தியுள்ளது.
(5) நாற்பதப் போலியினை ஏற்படுத்தியுள்ளது.

**8.** சமூக விஞ்ஞான ரீதியான கருதுகோள் தொடர்பில் பேராசிரியர் ஜே. ரொபின்சனின் கூற்றில் மிகப் பொருத்தமான கூற்றாக அமைவது

(1) சமூக விஞ்ஞானக் கருதுகோள் விஞ்ஞான முறைக்கேற்ப பொய்ப்பிக்கக் கூடிய ஆற்றல் உடையது.
(2) சமூக விஞ்ஞானக் கருதுகோள் உண்மையானது என முடிவு செய்வதற்கு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையொன்று இல்லை.
(3) ஒவ்வொரு சமூகப் பின்னணி பொதுவாகத் தரவுகளை தேடிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.
(4) சமூக விஞ்ஞானத் தரவுகள் நிலையானவை.
(5) சமூக விஞ்ஞானத் தரவுகளை மீண்டும் மீண்டும் சோதனைக்குட்படுத்திக் கொள்ளும் ஆற்றலுடையன.

**9.** உண்மையென நிரூபிப்பது கடினமாகவும், பொய்யானது என நிரூபிப்பது மிகவும் இலகுவானதாகவும் பின்வரும் எந்த எடுப்பில் நிகழும்?

(1) தனிவிதி எடுப்பு (2) தனிமறை எடுப்பு (3) நிறைவிதி எடுப்பு
(4) குறைவிதி எடுப்பு (5) குறைமறை எடுப்பு

**10.** இருபதாம் நூற்றாண்டில் உயிரியல் விஞ்ஞான துறையில் பிரபல்யமான கண்டுபிடிப்பு எனக் கருதப்படக் கூடியது

(1) பென்சிலின் கண்டுபிடிப்பு
(2) என்த்ராக்ஸ் விசக்கிருமி கண்டுபிடிப்பு
(3) சின்னம்மை நோய்க்குரிய நீர்ப்பீடன கண்டுபிடிப்பு
(4) DNA அணுவின் காட்டுருவின் கண்டுபடிப்பு .
(5) டெங்கு நோய்க்குரிய எதிர் மருந்து கண்டுபிடிப்பு

**11.** “ A ” வகை எடுப்பு முடிவு கூற்றாகப் பெறக்கூடிய வாய்ப்பான பிரகாரங்களின் எண்ணிக்கை

(1) 1 (2) 2 (3) 4 (4) 6 (5) 7

**12.** நாணயமொன்று மற்றும் தாயக்கட்டை ஒன்றை மேலே சுண்டுகின்ற போது நாணயத்தில் தலையும் தாயக்கட்டையில் இரட்டை இலக்கமும் பெறக்கூடிய நிகழ்தகவு யாது?

(1) $\frac{1}{12}$ (2) $\frac{5}{12}$ (3) $\frac{1}{6}$ (4) $\frac{1}{4}$ (5) $\frac{1}{3}$

**13.** பரார்த்த அனுமானத்தின் ஒழுங்கு முறையாக அமைவது

(1) ஏது, பிரதிக்ஞை, உதாரணம், உபநயனம், முடிவு
(2) முடிவு, உபநயனம், உதாரணம், பிரதிக்ஞை, ஏது
(3) உபநயனம், பிரதிக்ஞை, ஏது, உதாரணம், முடிவு
(4) பிரதிக்ஞை, ஏது, உதாரணம், உபநயனம், முடிவு
(5) உதாரணம், பிரதிக்ஞை, ஏது, உபநயனம், முடிவு

**14.** சீட்டுக் கட்டிலிருந்து முறையே இரண்டு சீட்டுக்கள் எடுக்கப்படுகின்றன. முதலாவதாக எடுக்கப்பட்ட சீட்டு மீண்டும் சீட்டுக்கட்டில் வைக்கப்படுகின்றதாயின் இரண்டாவது தடவையும் அதே சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான நிகழ்தகவு யாது?

(1) $\left(\frac{52}{52} \times \frac{52}{52}\right)$ (2) $\left(\frac{52}{52} \times \frac{51}{52}\right)$ (3) $\left(\frac{52}{52} \times \frac{1}{52}\right)$
(4) $\left(\frac{1}{52} \times \frac{1}{52}\right)$ (5) $\left(\frac{1}{52} \times \frac{51}{52}\right)$

**15.** “பேராசையுடைய காகங்கள் உள்ளன” எனும் வாக்கியத்தின் வகுப்பு அளவையியலின் குறியீட்டாக்கமாக அமைவது


(1) $AB \neq \phi$ (2) $A\bar{B} = \phi$ (3) $\bar{A}B \neq \phi$
(4) $AB = \phi$ (5) $A\bar{B} \neq \phi$


**16.** எண் கணித அளவீட்டின்படி ஏறுவரிசைப்படுத்தப்பட்ட இரட்டை எண் வரிசையில் அவற்றின் நடு இலக்கங்களின் கூட்டுத்தொகையினை இரண்டால் வகுக்கின்ற போது கிடைக்கப்பெறுவது,


(1) ஆகாரம் (2) இடையம் (3) சராசரி விலகல்
(4) நியமவிலகல் (5) நிறையளிக்கப்பட்ட இடை


**17.** $(\bar{A} . \bar{B}) + (\bar{A} . B) + (\bar{B} . \bar{A}) + (A . \bar{B})$


எனும் பூலியன் வெளிப்பாட்டினை எளிமையான முறையில் வெளிப்படுத்தும் தர்க்கப்படலையாக அமைவது,

(1) 


(2) 


(3) 


(4) 


(5) 


**18.** பாரம்பரிய ஆக்கநிலையுறுத்தற் கோட்பாடு, புலக்காட்சிக் கோட்பாடு ஆகியவை முறையே எந்த உளவியல் பள்ளியுடன் தொடர்புடையன?

(1) கட்டமைப்பு வாதம் மற்றும் கெஸ்டால் கோட்பாடு
(2) தொழிற்பாட்டுக் கொள்கை , உளப்பகுப்பு கோட்பாடு
(3) நடத்தை கோட்பாடு, கொஸ்ட்டால்ட் கோட்பாடு
(4) உளப்பகுப்பு கோட்பாடு மற்றும் நடத்தை வாதம்
(5) கட்டமைப்பு வாதம் மற்றும் நடத்தை வாதம்

**19.** “மடையர்களைத் தவிர வேறு எவரும் கெக்கில்ல அரசாட்சியினை மேற்கொள்ள மாட்டார்கள்” எனும் வாக்கியத்தின் குறியீட்டாக்கத்தில்

F : a மடையர்கள்

G : a கெக்கில்ல அரசாட்சி

என்பவற்றை பயன்படுத்துமிடத்து குறித்த வாக்கியத்தின் குறியீட்டாக்க வடிவமாக அமைவது

(1) $\Lambda x\,(F\,x \rightarrow G\,x)$ (2) $V\,x\,(F\,x \rightarrow \sim G\,x)$
(3) $\Lambda\,x\,(G\,x \rightarrow F\,x)$ (4) $\Lambda x\,(\sim G\,x \wedge F\,x)$
(5) $\Lambda\,x\,(F\,x \rightarrow G\,x) \wedge \Lambda x\,(\sim G\,x \rightarrow \sim F\,x)$

**20.** செல்சியஸ் அளவீட்டில் வெப்பநிலை 100° என குறிப்பிடுகையில் பரனைட் அளவீட்டில் குறித்த வெப்பநிலை குறிப்பிடப்படுவது

(1) 32°F (2) 98.4°F (3) 100°F (4) 180°F (5) 212°F

**21.** ஒழுக்கவியல் கூற்றானது பின்வரும் எவ்வகை கூற்றாக வெளிப்படுத்தப்படும்

(1) உண்மை கூற்றாக (2) பொய்யான கூற்றாக
(3) உண்மையும் பொய்யும் கலந்த கூற்றாக (4) முரண்பாடான கூற்றாக
(5) விழுமியம் சார்ந்த கூற்றாக

**22.** “80% நோய் பீடிக்கப்படுகிறது புகை பிடித்தலினால் ஆகும். இது ஒரு

(1) நிறை பொதுமையாக்கம் ஆகும்.
(2) குறை பொதுமையாக்கம் ஆகும்.
(3) புள்ளியியல் பொதுமையாக்கம் ஆகும்.
(4) புள்ளியியல் பொதுமையாக்கம் என்பதுடன் காரண விளக்கம்
(5) புள்ளியியல் விளக்கம் என்பதுடன் காரண விளக்கமல்ல.

**23.** நீதி மன்றமொன்றில் எழுத்து மூலம் சாட்சியமாக அமைவது,

(1) வாய்மொழி மூலம் வெளிப்படும் சாட்சியமாகும்.
(2) எழுத்து மூலம் முன்வைக்கப்படும் சாட்சியமாகும்.
(3) நீதி மன்றத்தில் முன்வைக்கப்படும் சாட்சியமாகும்.
(4) சட்டத்தரணியினால் முன்வைக்கப்படும் சாட்சியமாகும்.
(5) பத்திரிகைகளின் மூலம் முன்வைக்கப்படும் சாட்சியமாகும்.

**24.** பொதுவான வெப்பம் மற்றும் அமுக்க நிலை இருக்கின்ற போது யாழ்ப்பாணத்தின் வளிமண்டல அமுக்கம்

(1) பிதுருதாலகாலையின் உச்சியின் அமுக்கத்திற்கு சமம்.
(2) பிதுருதாலகாலையின் உச்சியின் அமுக்கத்திற்கு கூடுதலானது.
(3) பிதுருதாலகாலையின் உச்சியின் அமுக்கத்திற்கு குறைவானது.
(4) மன்னாரின் அமுக்கத்திற்கு சமமானதாக முடியாது.
(5) வெப்பநிலை தாக்கத்திற்குட்படாது.

**25.** வகுப்பு அளவையியலில் $\bar{A} \neq \phi$ மற்றும் $\bar{B} = \phi$ என்பதில் இருந்து பெறக்கூடிய வாய்ப்பான முடிவாக அமைவது

(1) $A \cap \bar{B} \neq \phi$ (2) $A \cap B = \phi$ (3) $\bar{A} \cap \bar{B} \neq \phi$ (4) $\bar{A} \cap B \neq \phi$ (5) $A \cap B \neq \phi$

**26.** கருதுகோளொன்றினை பொய்ப்பிக்கக்கூடிய சந்தர்ப்பம் சாத்தியமற்றதொன்று என்பதனால் கருதப்படுவது,

(1) விஞ்ஞான சோதனைகளினால் கருதுகோள் பொய்யானதாகவில்லை.
(2) புதிய எதிர்வு கூறலை வெளிப்படுத்துகின்ற நிலை.
(3) பொய்ப்பிக்கப்பட்டதும் விஞ்ஞான கருதுகோள் எனும் நிலையினை இழக்கின்ற நிலை
(4) நிகழ்தகவு குறைந்த கருதுகோள் பொய்யானதாகுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் உள்ள நிலை
(5) நிகழ்தகவு கூடியதான கருதுகோள் பொய்யாவதற்கு மிகவும் இலகுவான இடமுண்டு எனும் நிலை

**27.** $(P \wedge Q) \therefore (Q \wedge P)$ எனும் வாதம் வாய்ப்பானதென நேர் பெறுகையில் காட்டுவதற்கு தேவையான பெறுகை விதிகள்

(1) எளிமை விதி மற்றும் இணைத்தல் விதி
(2) இணைத்தல் விதி மற்றும் கூட்டல் விதி
(3) இணைத்தல் விதி மற்றும் இரட்டை மறுப்பு விதி
(4) எளிமையாக்கல் விதி மற்றும சேர்த்தல் விதி
(5) இணைப்பு விதி மற்றும் மறுத்து மறுத்தல் விதி


**28.** நடத்தை விஞ்ஞானமாக அமைவது

(1) அளவையியல் (2) இறையியல் (3) உளவியல்
(4) பூகற்பவியல் (5) பௌதீகம்

**29.** "உமக்கு தண்டனை வழங்குவது செம்மறியாடுகளை திருடியதற்காக அல்ல செம்மறியாட்டு திருட்டினை நிறுத்துவதற்காகவே" இந்த வெளிப்பாட்டில் உள்ளடங்கியுள்ள தண்டனை தொடர்பான மெய்யியல் கோட்பாடாக அமைவது

(1) பழிக்குப்பழி கோட்பாடு (2) பயன்பாட்டு வாதம் (3) தடுதண்டனைக் கோட்பாடு
(4) மறுசீரமைப்பு வாதம் (5) புனர்வாழ்வு வாதம்

**30.**




மேற்படி வரைபினால் வெளிப்படுத்தப்படும் விதியாக அமைவது

(1) சார்ள்ஸின் விதி (2) பொயிலின் விதி (3) கெப்ளரின் விதி
(4) ஊக்சின் விதி (5) கலிலியோவின் விதி

**31.** எல்லா ஊர்வனவும் இறப்பவை என்பதனால் என்றாவது ஒருநாள் ஊர்வனங்கள் பூமியில் இல்லாமல் போய்விடும். இதில் இடம்பெற்றுள்ள போலியானது

(1) முடிவு மேற்கொள்ளல் போலி (2) அசித்தப் போலி (3) மாக்கள் நியாயப்போலி
(4) ஆள்நியாயப்போலி (5) சமுதாயப்போலி

**32.** 1, 2, 5, 8 எனும் எண் நிரலின் இடையம், சராசரி விலகல் மற்றும் நியம விலகல் என்பன முறையே,

(1) $4, 1.2, \sqrt{6.5}$ (2) $4, 1.2, \sqrt{7.5}$ (3) $4, 1.3, \sqrt{6.5}$
(4) $4, 1.5, \sqrt{6.5}$ (5) $4, 2.5, \sqrt{7.5}$

**33.** முரண்பாடுடைய சோடி சூத்திரமாக அமைவது எது?

(1) $(P \rightarrow \sim Q) ; \sim (P \wedge Q)$ (2) $(P \wedge Q) ; \sim (\sim P \vee \sim Q)$ (3) $(P \rightarrow Q) ; (\sim P \vee \sim Q)$
(4) $(P \wedge \sim Q) ; \sim (P \rightarrow Q)$ (5) $(P \vee Q) ; (\sim P \wedge \sim Q)$

**34.** “எதிர் தொகுத்தறி” என முறையியலில் பயராபாண்ட் போன்ற மெய்யியலாளர்கள் அடையாளப்படுத்துவது

(1) உய்த்தறி வாய்ப்பு பார்த்தல் முறையியலை
(2) உய்த்தறி பொய்ப்பித்தல் முறையியலை
(3) யாதேனும் ஓர் உய்த்தறி முறையியலை
(4) கொள்கையுடன் பொருந்துகின்ற அவதான வெளிப்பாட்டினை உருவாக்குகின்ற முறையியலை
(5) அவதானிக்கப்பட்ட சில தரவுகளை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு பொருந்தக்கூடிய வகையில் பொதுமையாக்கங்களை உருவாக்கிக் கொள்கின்ற முறையியலை

**35.** போதிய காரண விதியை முன்வைத்தவர்

(1) ரெனேடேக்கார்ட்ஸ் (2) சீனோ (3) டேவிட் ஹியூம்
(4) லைபினிட்ஸ் (5) ஸ்பினோசா

**36.** 12 அங்கத்தவர்களைக் கொண்ட சங்கமொன்றில் தலைவர், செயலாளர், பொருளாளர் எனும் பதவிகளை நிரப்பக்கூடிய வழிகளாக அமைவது

(1) 110 (2) 220 (3) 556 (4) 660 (5) 1320

**37.** நலிவு தொகுத்தறி போலி எனும் வகுதிக்குள் அடங்கும் போலி அல்லாதது,

(1) ஆப்த வாக்கிய போலி (2) அறியாமை நியாயப் போலி
(3) அசித்த போலி (4) காகதாலிய போலி
(5) மாக்கள் நியாயப் போலி

**38.** முறையே மெய்யியலாளராகவும், முறையியலாளராகவும், விஞ்ஞானியாகவும் பிரபல்யம் பெற்ற கீழ்வரும் மூவருள் விஞ்ஞானத்தின் முறையியலுடன் தொடர்புபட்ட கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. அம் மூவரையும் முறையே குறிப்பிடப்படும் ஒழுங்குவரிசையாக அமைவது,

(1) லூயி பாஸ்டர், கார்ள் பொப்பர், அரிஸ்டோட்டில்
(2) பைதகரஸ், நியூட்டன் மற்றும் தோமஸ் கூன்
(3) ஹிப்போகிரட்டிஸ், ஹெம்பல் மற்றும் ஐன்ஸ்ரைன்
(4) டேவிட் ஹியூம், பிரான்சிஸ் பேக்கன், கலிலியோ கலிலி
(5) லைப்பினிஸ்ட், லாவேசியர் மற்றும் பயரபாண்ட்

**39.** $((P \wedge Q) \rightarrow (Q \rightarrow R))$ என்பதில் பிரதான தர்க்க மாறிலி பொய்யாகின்ற போது $P, Q, R$ என்பதன் மதிப்பீடுகள் முறையே,

(1) FFT (2) FTF (3) FTT (4) TTF (5) TFT

**40.** ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் மிகவும் குறைவாக உள்ள சமகால விஞ்ஞானத் துறையாக அமைவது,

(1) பிறப்புரிமை பொறிமுறைத் தொழில்நுட்பம்
(2) செயற்கை நுண்ணறிவு
(3) சூழல் பாதுகாப்பு
(4) விவசாயத் தொழில்நுட்பம்
(5) நவீன சத்திர சிகிச்சை

**41.** 'மழை இடைவிடாது பெய்யுமாயின் வெள்ளம் ஏற்படும். பொல்கொல்லை கதவுகள் மூடப்பட்டிருந்தால் மட்டுமே'. மேற்படி வாதம் கவர்ப்பாடுடையது என கருதினால் அதற்குரிய இரண்டு குறியீட்டாக்கமாக அமைவது,

P - இடைவிடாது மழை பெய்யும்
$Q$ - வெள்ளம் ஏற்படும்
R - பொல்கொல்லை கதவுகள் மூடப்பட்டுள்ளது

(1) $((R \rightarrow (P \rightarrow Q))\ ;\ (P \rightarrow (R \rightarrow Q))$
(2) $((P \rightarrow (R \rightarrow Q))\ ;\ (P \rightarrow (Q \rightarrow R))$
(3) $((P \rightarrow (Q \rightarrow R))\ ;\ ((P \rightarrow Q) \rightarrow Q))$
(4) $((P \rightarrow (R \rightarrow Q))\ ;\ (P \rightarrow R) \rightarrow Q))$
(5) $((P \rightarrow Q) \rightarrow R)\ ;\ (P \rightarrow (Q \rightarrow R)$

**42.** ஸ்டிபன் ஹோக்கிங் என்பவரின் பிரதான விஞ்ஞானக் கண்டுபிடிப்பாக அமைவது,

(1) கதிர்சிகிச்சை
(2) கறுப்புத்துவார கதிர்வீச்சு
(3) செவ்வாய் கிரகத்தில் நீர்
(4) அமில மழை
(5) கறுப்பு மழை

**43.** "ஆறு பெருக்கெடுத்து கடல் நிரம்புமாயின் நதிமுகத்துவாரம் அழிந்துவிடும்" என்பதன் சரியான குறியீட்டாக்கமாக அமைவது,

(1) $((P \wedge (Q \rightarrow R))$
(2) $(P \rightarrow R)$
(3) $(P \rightarrow (Q \rightarrow R))$
(4) $(P \vee Q) \rightarrow R$
(5) $((P \wedge Q) \rightarrow R)$

**44.** "விண் கோள்களின் புரட்சி" எனும் நூலை எழுதியவர்

(1) கலிலியோ கலிலி
(2) தைக்கோ டி பிறாகே
(3) கொப்பனிக்கஸ்
(4) கெப்ளர்
(5) டேக்கார்ட்

**45.** $\sim (P \leftrightarrow Q)$ என்பதற்கு தர்க்க ரீதியாக பின்வரும் எச்சூத்திரம் சமமாக அமையும்?

(1) $(P \vee Q) \wedge \sim(\sim P \wedge \sim Q)$
(2) $(P \vee \sim Q) \wedge \sim(\sim P \wedge \sim Q)$
(3) $(P \vee Q) \wedge \sim(\sim P \wedge Q)$
(4) $(P \vee Q) \wedge \sim(P \wedge Q)$
(5) $(P \vee \sim Q) \wedge \sim(P \wedge Q)$

**46.** மாக்கிரட்மீட், மெலினோவஸ்கி மற்றும் ரேமன்ட் பர்ச் போன்ற மானிடவியலாளர்கள் பழங்குடி மக்களைப் பற்றி கற்றுக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொண்ட பிரதான சமூக விஞ்ஞான ஆய்வு முறையியலாக அமைந்தது,

(1) வினாக்கொத்து முறை
(2) நேர்முக விசாரணை முறை
(3) பங்குபற்றல் அவதான முறை
(4) சமூக ஆய்வு முறை
(5) உண்ணோக்குகை முறை


**47.** பின்வரும் குறியீட்டு வாக்கியங்களில் தேற்றமாக அமைவது,


(1) $\sim (P \rightarrow (Q \rightarrow P))$
(2) $((P \wedge Q) \rightarrow (Q \wedge R))$
(3) $((\sim P \vee Q) \rightarrow (Q \rightarrow R))$
(4) $(P \rightarrow (\sim P \rightarrow Q)$
(5) $((P \rightarrow \sim Q) \rightarrow (R \vee S))$


**48.** தொலைநோக்கி


(1) அளத்தலுக்குப் பயன்படுத்தக் கூடிய ஓர் கருவி அல்ல.
(2) உயிரற்ற பொருட்களை மட்டும் அவதானிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றதொன்றாகும்.
(3) அவதானிக்கப்படும் பொருட்களை மாற்றி காட்டும்.
(4) அவதானத்திற்குள்ளாகும் பொருட்களை விசாலமானதாக்கி காட்டும்.
(5) அவதானத்திற்குள்ளாகும் பொருளின் விசாலமானதாக்கப்பட்ட வடிவத்தின் பிரதிவிம்பத்தினைக் காட்டவல்லது.


**49.** பின்வரும் தர்க்கப்படலைகளுள் எந்தத் தர்க்கப்படலை மறுப்புத் தர்க்கப்படலை (Not Gate) என்பதுடன் பொருந்தும்?

a. 


b. 


c. 


d. 


e. 


(1) a மட்டும் (2) c மட்டும் (3) a, b மட்டும்
(4) a, e மட்டும் (5) b, d மட்டும்

**50.** பொதுவாக அளத்தலுக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற கருவியாக அமைவது,

(1) கலவையாக்கி (2) தராசு (3) தேக்கரண்டி
(4) பிரிஸ்மம் (5) கோப்பை

* * *

# (24) அளவையியலும் விஞ்ஞானமுறையும்

## வினாத்தாள் II

**அறிவுறுத்தல்கள் :**

* முதலாம் வினா **கட்டாய** வினாவாகும். இதில் பகுதி II பகுதி III ஆகியவற்றிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

**1.** (i) தர்க்க ரீதியான சிந்தனையில் பயன்படுத்தப்படும் பிரதான அனுமானங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

(ii) விஞ்ஞானத்தின் இரு பிரதான அறிவின் மூலங்கள் யாவை?

(iii) எடுப்பு முரண்பாட்டு சதுரத்தின்படி குறை எடுப்பின் எதிர் மறையாக அமைவது எந்த எடுப்பாகும் ?

(iv) தராசு ஒன்றில் பயன்படுத்தப்படும் அளவுத் திட்டம் என்ன?

(v) நியாயத் தொடையின் இரண்டாம் உருவில் மத்திய பதம் எவ்வாறு செயற்படுகின்றது?

(vi) அனைத்து நுகர்வுப் பொருட்களும் விலை கூடியதல்ல என்பதுடன் 40% உள்ளூராட்சி உறுப்பினர்கள் பெண்கள் ஆவர் எனும் இரு வாக்கியங்களுக்கும் முறையே எவ்வாறான பொதுமையாக்கமாகும்?

(vii) P : A தேர்தலில் வெல்வார்

Q : B தேர்தலில் வெல்வார்

எனும் சுருக்கத்திட்டத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியத்தினை குறியீட்டாக்கம் செய்க.
“A, B எனும் இருவருள் ஒருவர் மட்டுமே தேர்தலில் வெற்றி பெறுவார்.”

(viii) விஞ்ஞான வரலாற்றினை கற்றுக் கொள்வதில் தோமஸ்கூனின் முடிவின் படி விஞ்ஞானம் அவ்வப்போது எதன் அடிப்படையில் கட்டி எழுப்பப்படுகின்றது?

(ix) “எல்லா மாம்பழங்களும் இனிப்பானவை அல்ல” எனும் வாக்கியம் கவர்ப்பாடானதெனக் கருதி அதனைப் பயனிலைத் தர்க்கத்தின் வழியே இரு வழிகளில் குறியீடாக்கம் செய்க.

(F: a மாம்பழம்
G: a இனிப்பானது எனும் சுருக்கத்திட்டத்தினைப் பயன்படுத்துக.)

(x) சட்டத்தின் இரு பிரதான வகைகளைப் பெயரிடுக.

(02 × 10 புள்ளிகள்)

### பகுதி II

**2.** (அ) (i) எடுப்பு முரண்பாட்டு சதுரத்தின் படி பின்வரும் அனுமானங்கள் வாய்ப்பானதா/ வாய்ப்பற்றதா என கூறுக.

1. எல்லா அன்னங்களும் வெள்ளை நிறம் என்பது உண்மையாயின், சில அன்னங்கள் வெள்ளை நிறமானவை என்பது பொய்.
2. எந்தவொரு அன்னமும் வெள்ளை நிறமானவை அல்ல என்பது பொய்யாயின் எல்லா அன்னங்களும் வெள்ளை நிறமானவை என்பதனை தீர்மானிக்க முடியாது.
3. சில அன்னங்கள் வெள்ளை நிறமானவை எனின் சில அன்னங்கள் வெள்ளை நிறமானவை அல்ல என்பது பொய்யாகும்.
4. சில அன்னங்கள் வெள்ளை நிறமானவை அல்ல எனின் சில அன்னங்கள் வெள்ளை நிறமானவை என்பது உண்மையாகும்.

(01 × 4 புள்ளிகள்)

(ii) A வகை எடுப்பின் எதிர்மாற்றம் நிறை எடுப்பாக அமையாதது ஏன் என்பதனை எதிர்மாற்ற விதிகளின் வழியே விளக்குக. (04 புள்ளிகள்)

(ஆ) (i) பின்வரும் நியாயத்தொடை வாய்ப்பானதா/ வாய்ப்பற்றதா என்பதனை நியாயத்தொடை விதிகளின் வழியே தீர்மானிக்குக. வாதம் வலிதற்றதாயின் மீறப்பட்டுள்ள விதி/விதிகளைக் குறிப்பிட்டு எற்பட்டுள்ள போலி/ போலிகளைக் குறிப்பிடுக.

1. மன்னர்கள் மட்டுமே கிரீடம் அணிவர்.
   சில அழகு இராணிகள் கிரீடம் அணிவர்.
   ஆகவே, சில அழகு இராணிகள் மன்னர்கள் ஆவர்.

2. எல்லா மலர்களும் நறுமணமுடையவை.
   சில மலர்கள் விலை கூடியவை.
   ஆகவே, விலை கூடியவை சில நறுமணமுடையவை. (02 × 2 புள்ளிகள்)

(ii) உமது சுருக்கத்திட்டத்தினைக் குறிப்பிட்டு கீழ்வரும் வாதத்தினை குறியீட்டாக்கம் செய்து வென்வரிப்படம் மூலம் அவற்றின் வாய்ப்பு, வாய்ப்பின்மையைத் துணிக.

1. சிங்கங்கள் மட்டும் பயமற்றவை
   எல்லா சிங்கங்களும் இறைச்சியினை மட்டும் தமது உணவாக்கிக் கொள்ளும்.
   ஆகவே, இறைச்சியினை மட்டும் உணவாக்கிக் கொள்ளும் அனைவரும் பயமில்லாதவர்கள் ஆவர்.

2. அமல் கெட்டிக்காரன் ஆனால் நேர்மையானவன் அல்லன்.
   அமாலி கெட்டிக்காரி அல்ல ஆனால் நேர்மையானவள்.
   ஆகவே, நேர்மையானவர்கள் உள்ளனர். (02 × 2 புள்ளிகள்)

**3.** (அ) பின்வரும் உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள போலியினை அடையாளம் கண்டு அப்போலி நிகழ்ந்துள்ள விதத்தினை தெளிவுபடுத்துக.

1. நீர் யாதாயினும் ஓர் உறுதிமொழி கூறுவீர் ஆயின் அதனை நிறைவேற்ற வேண்டும். நேற்று பிரியாவிடைக்கு வருவதாக நீர் கூறியபோதிலும் கூட, அதற்கு சமுகமளிக்காமல் விட்டது நீர் செய்த தவறாகும். உமது தாயார் சுகயீனமடைந்துள்ளார் எனக் கூறுவது பொருத்தமானதல்ல.
2. இந்தப் பாடசாலை சிறந்த தேர்வுப் பெறுபேறுகளைக் கொண்ட பாடசாலையாகும். இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான சிறந்த தேர்வுப் பெறுபேறுகளைப் பெற்றுத்தரக்கூடிய வேறு எந்தப் பாடசாலையையும் இது தொடர்பில் கேள்விப்படவில்லை. ஆதலால் இந்தப் பிரதேசத்தில் சிறந்த தேர்வுப் பெறுபேறுகளைக் கொண்டுள்ள A எனும் மாணவன் இப்பாடசாலையின் மாணவராவார்.
3. வைத்தியர் சிகிச்சை அளித்தவுடன் நோயாளி இறந்துவிட்டார். அவர் சிகிச்சை அளிக்காவிட்டால் நோயாளி இன்றும் உயிருடன் இருந்திருப்பார்.

(02 × 3 புள்ளிகள்)

(ஆ) இந்திய அளவையியலில் அனுமானம் மற்றும் அரிஸ்டோட்டிலிய நியாயத்தொடைக்கும் இடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளை பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(இ) பின்வரும் தலைப்புக்களில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. வாய்ப்பும் உண்மையும்
2. நேர்வு வாக்கியங்கள் மற்றும் விழுமிய வாக்கியங்கள்
3. கண்ணால் கண்ட சாட்சி மற்றும் சந்தர்ப்ப சாட்சியம் (03 × 2 புள்ளிகள்)

**4.** (அ) பின்வரும் தேற்றங்களினை பெறுகைமுறையின் வழியே நிறுவுக.

1. $((\sim P \wedge \sim Q) \rightarrow (P \leftrightarrow Q))$
2. $((\sim P \rightarrow Q) \leftrightarrow \sim(\sim P \wedge \sim Q))$
3. $((\sim P \rightarrow \sim Q) \vee (\sim Q \rightarrow \sim R))$ (04 × 3 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் குறியீட்டு வெளிப்பாட்டினை பிரதான தர்க்க மாறிலியினை உறழ்வு மாறிலியாகவும் அவற்றின் இரு பக்கத்தினையும் இணைப்பு மாறிலி மற்றும் மறுப்பு மாறிலி உள்ளிட்ட வெளிப்பாடாகவும் மாற்றி தர்க்கப்படலையினை வரைக.

$((P \rightarrow \sim Q) \rightarrow (Q \rightarrow \sim R))$ (04 புள்ளிகள்)

**5.** (அ) உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து பின்வரும் வாதத்தினை குறியீட்டாக்கம் செய்து அதன் வாய்ப்பு வாய்ப்பின்மையை உண்மை அட்டவணை நேரல் முறை மூலம் துணிக.

அறுவடை நன்றாக இருக்கும் ஆயின் ஆயினே விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள் ஆயின் விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள் ஆயின் ஆயினே பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். ஆகவே அறுவடை நன்றாக இருக்கும் ஆயின் ஆயினே பொருளாதாரம் சிறப்பாக இருக்கும்.

(04 புள்ளிகள்)

(ஆ) உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து பின்வரும் வாதத்தினை குறியீட்டாக்கம் செய்து அதன் வாய்ப்பு வாய்ப்பின்மையை உண்மை அட்டவணை விருட்ச முறை மூலம் துணிக.

அவன் கெட்டிக்காரன் ஆயின் ஒன்றில் பரீட்சையில் சித்தி அடைவான் அல்லது வெளிநாடு செல்வான். ஆனால் அவன் வெளிநாடு செல்லவில்லை ஆயின் ஒன்றில் அவன் கெட்டிக்காரன் இல்லையாயின் குடும்ப வியாபாரத்துடன் சம்பந்தப்படுவான்.

(04 புள்ளிகள்)

(இ) உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து பின்வரும் வாதத்தினை குறியீட்டாக்கம் செய்து அதன் வாய்ப்பினை பெறுகை முறையின் வழியே துணிக.

1. குழந்தைகள் நற்குணம் உள்ளவர்களாயின் முதியோர்களும் நற்குணம் உள்ளவர்கள் எனத் தரப்படின் குழந்தைகள் மகிழ்ச்சி அடைவார்களாயின் முதியோரும் மகிழ்ச்சி அடைவர். குழந்தைகள் மகிழ்ச்சி அடையமாட்டார்கள் என்பது பொய் ஆகவே முதியோர்கள் நற்குணம் உள்ளவர்கள் ஆயினே முதியோர்கள் மகிழ்ச்சி அடைவர்.
2. அவன் ஒன்றில் வெளிநாடு செல்வான் ஆயின் ஒன்றில் தொழில் புரிவான் அல்லது கல்வி கற்பான். ஆனால் அவன் தொழில் செய்யவும் கல்வி கற்கவும் இல்லை ஆகவே ஒன்றில் அவன் வெளிநாடு செல்லமாட்டான் அல்லது அவன் திருமணம் புரிய மாட்டான்.

(04 × 2 புள்ளிகள்)

**6.** (அ) பின்வரும் சூத்திரங்கள் நற்சூத்திரங்களா அல்லாதவையா என்பதனை பயனிலை தர்க்கத்தின் வழியே துணிக.

1. $\Lambda x\, Fx \vee \Lambda\, yGy$
2. $(((\Lambda\, x\, (\mathrm{F}x \rightarrow Gx) \wedge FA\,) \rightarrow GA))$
3. $Fxy \rightarrow Gyx$
4. $\Lambda x\,(\,Hx \leftrightarrow Gy)$
5. $\sim(\sim Fx \vee Gy)$

(01 × 5 புள்ளிகள்)

(ஆ) உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து கீழ்வரும் வாக்கியத்திற்கு பயனிலை தர்க்கத்தின் வழியே குறியீட்டாக்கம் செய்க.

1. நகரங்கள் ஆயீன் ஆயீனே அழகானவை.
2. அழகானவர்கள் அனைவரும் திருமணம் புரிபவர்களாயின் ஒன்றில் இலங்கை ஓர் பாலைவனம் அல்லது வீனஸ் தெய்வம் திருமணம் புரியும் ஆற்றலுடையது.

(02 1/2 × 2 புள்ளிகள்)

(இ) உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து கீழ்வரும் வாக்கியங்களை பயனிலை தர்க்கத்தின் வழியே குறியீட்டாக்கம் செய்து அவற்றின் வாய்ப்பு வாய்பின்மையை பெறுகையின் வழியே நிரூபிக்குக.

1. எல்லா நாட்டு பிரஜைகளும் நாட்டடின் மீது அன்பு செலுத்துவர். நாட்டு மக்கள் இருக்கிறார்கள். ஆகவே நாட்டிற்கு அன்பு செலுத்துகின்ற சிலர் நாட்டுப் பிரஜைகள் ஆவர்.
2. எல்லா கம்யூனிஸ்ட்டுகளும் மார்க்ஸ் வாதிகள் ஆவர். சில கம்யூனிஸ்ட்டுகள் ரஷ்யர்கள் ஆவர். ஆகவே மார்க்ஸ் வாதிகள் சிலர் கம்யூனிஸ்ட்டுகள் ஆவர்.

(03 × 2 புள்ளிகள்)

## பகுதி III

**7.** (அ) தொகுத்தறி மற்றும் உய்த்தறி முறைகளுக்கிடையேயான வேறுபாட்டினை உதாரணம் தந்து விளக்குக. (04 புள்ளிகள்)

(ஆ) பிரான்சிஸ் பேக்கன் விஞ்ஞான முறையியலுக்கு ஆற்றிய பங்களிப்பினை தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

(இ) கலிலியோ அவரது பயணப்பாதை பரவளைவு வடிவானதாகும் என்ற விதியினை கண்டுபிடிப்பதற்காக உய்த்தறி முறையியலை பயன்படுத்திக் கொண்ட விதத்தினை தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

**8.** (அ) கண்ணால் பார்க்கும் அவதானத்திற்கும் இயற்கையான அவதானத்திற்கும் இடையேயான வேறுபாட்டினை உதாரணம் தந்து விளக்குக. (04 புள்ளிகள்)

(ஆ) விஞ்ஞானத்தில் தீர்ப்புப் பரிசோதனை என்றால் என்ன? விஞ்ஞான வரலாற்றிலிருந்து உதாரணம் தந்து தீர்ப்புப் பரிசோதனை அவதானமா அல்லது பரிசோதனையா எனப் பரிசீலனை செய்க.
(பொது சார்புவாத கோட்பாட்டிற்காக எடிண்டன் நிகழ்த்திய சோதனை மற்றும் ஒளி தொடர்பாக பூக்கோ நிகழ்த்திய சோதனை அல்லது விஞ்ஞான வரலாற்றில் யாதேனும் ஓர் சோதனையினை நீர் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.) (05 புள்ளிகள்)

(இ) இலட்சிய பரிசோதனை என்றால் என்ன என்பதனை உதாரணம் தந்து விளக்குக. (03 புள்ளிகள்)
இலட்சிய பரிசோதனை ஒன்றினை நிகழ்த்த முடியுமா என விளக்குக. (02 புள்ளிகள்)

(ஈ) அல்நோக்கல் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

**9.** (அ) “கருவிகள், அளத்தல், அளவுகள் என்பன பௌதீக விஞ்ஞானங்களின் தனித்துவமான பண்புகளாக உள்ளன” பௌதீக விஞ்ஞானங்களின் வழியே இப்பண்புகள் உயிரியல் விஞ்ஞானங்களுக்குள் ஊடுருவிக் கொண்டுள்ளன”. உதாரணம் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) “கருவிகளின் பரிசோதனையின் வழியே அளத்தலினை நிகழ்த்தாத போதிலும் கூட பொருளியல், கல்வியியல், உளவியல், சமூகவியல் போன்ற விஞ்ஞான எண்ணக்கருக்கள் மேன்மேலும் அளவீட்டு ரீதியான வெளிப்பாடுகளாக உள்ளன” உதாரணம் தந்து இவ் வெளிப்பாட்டினை விளக்குக. (06 புள்ளிகள்)

(இ) “கணினியும் சமகால விஞ்ஞானமும்” எனும் தலைப்பில் ஓர் கட்டுரை வரைக. (04 புள்ளிகள்)

**10.** (அ) எட்டு மாணவர்களின் நுண்ணறிவு மட்டம் (I.Q.) அளவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.
100, 105, 95, 95, 110, 100, 85, 95

1. மாணவர் தொகுதியின் சாதாரண நுண்ணறிவு மட்டத்தினை அண்மித்த எண்ணிக்கைக்கு கணிப்பிடுக.
2. நீர் இந்தத் தொகுதியின் சாதாரண அறிவு மட்டத்தில் காட்டிய எண்ணிற்கும் தரவாக உமக்கு தரப்பட்ட நுண்ணறிவு மட்டத்திற்கும் இடையே வேறுபாடு உண்டு எனின் அவ்வேறுபாடு யாது?
3. நுண்ணறிவு மட்டத்தினை அளவிடுவதில் உள்ள குறைபாடுகள், பிரச்சினைகள் மற்றும் அளவிட்டு காட்டல் எனும் பண்புகள் பற்றி குறிப்பெழுதுக. ($02 \times 3$ புள்ளிகள்)

(ஆ) சமூக விஞ்ஞான ஆய்வுகளில் மாதிரிகள் ஏன் அவசியமாகின்றன? இங்கு பயன்படுத்தப்படும் மாதிரி வகைகளை கலந்துரையாடுக. (04 புள்ளிகள்)

(இ) “பிழையற்ற எதிர்வுகூறலைக் கூறுவதில் உள்ள சிரமங்களும் சமூகவிஞ்ஞானங்களில் புறவயத்தன்மையும்” எனும் தலைப்பில் குறிப்பெழுதுக. (06 புள்ளிகள்)

**11.** (அ) “விஞ்ஞான வரலாற்றின் பின்புலத்தில் கூன் முன்வைக்கும் விளக்கங்கள் முறையியலாளர் ஒருவருக்கான பண்புகளையே வெளிக்காட்டுகின்றது. கூனின் “விஞ்ஞான புரட்சிகளின் கட்டமைப்பு” எனும் நூலில் இவ்வாறு எழுகின்ற முறையியல் பண்புகள் எவையென விளக்குக. (06 புள்ளிகள்)

(ஆ) “பொப்பர், பயராபாண்ட், மற்றும் லக்கட்டோஸ் போன்றோர் முறையியலை அறிவுமயமாக்கும் முயற்சியினைப் பகிர்ந்து கொண்டனர்” இக்கூற்றின் பொருத்தத்தைப் பற்றி உமது கருத்தினைக் கூறுக. (06 புள்ளிகள்)

(இ) பிரான்சிஸ் பேக்கன் மற்றும் கலிலியோ காலத்தில் இருந்தே விஞ்ஞானச் செயற்பாடுகள் சமயம் மற்றும் ஒழுக்க விழுமியங்களிலிருந்து விடுபட்டு வந்துள்ளது. இவ்வாறானதொரு கருத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியுமா?

(04 புள்ளிகள்)

* * *

# (25) வரலாறு

இப்பாடம் I மற்றும் II எனும் வினாத்தாள்களைக் கொண்டது.

வினாத்தாள் I : 25 இலங்கை வரலாறு

வினாத்தாள் II : 25A இந்திய வரலாறு
25B ஐரோப்பிய வரலாறு
25C நவீன உலக வரலாறு

இங்கு வரலாற்றுப் பாடத்தை தேர்ந்தெடுத்த எல்லாப் பரீட்சார்த்திகளும் வினாத்தாள் I - இலங்கை வரலாறு எனும் வினாத்தாளிற்கு கட்டாயம் விடையளித்தல் வேண்டும் என்பதோடு 25A, 25B மற்றும் 25C ஆகிய வினாத்தாள்களில் மூன்றில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்து விடையளிக்க வேண்டும்.

(25) இலங்கை வரலாறு (25A) இந்திய வரலாறு (25B) ஐரோப்பிய வரலாறு (25C) நவீன உலக வரலாறு

## வினாத்தாள் கட்டமைப்பு

காலம் : **03 மணித்தியாலங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்) இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி I : 5 தேர்வுகளைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 40 காணப்படும். **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி II : இது A, B, C எனும் **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
**A – கட்டாய** வினாவைக் கொண்டுள்ளது. (12 புள்ளிகள்)

B – மற்றும் C பகுதிகளில் ஒரு பகுதியிலிருந்து குறைந்த பட்சம் **ஒரு** வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 16 புள்ளிகள் வீதம் மூன்று வினாக்களுக்கு 48 மொத்தப் புள்ளிகள் வழங்கப்படும்.

**பகுதி B** - இப்பகுதி **கட்டுரை, அமைப்புக் கட்டுரை** வகையைச் சேர்ந்த வினாக்கள் **நான்கினைக்** கொண்டுள்ளது.

**பகுதி C** - இப்பகுதி **கட்டுரை, அமைப்புக் கட்டுரை** வகையைச் சேர்ந்த வினாக்கள் **நான்கினைக்** கொண்டுள்ளது.

பகுதி I, II இற்கான மொத்தப் புள்ளிகள்
பகுதி I = 40
பகுதி II = 60
இறுதிப் புள்ளி = 100

இறுதிப்புள்ளியைக் கணித்தல் :-
வினாத்தாள் I (25) = 100
வினாத்தாள் II (25A/25B/25C) = 100
இறுதிப்புள்ளி = 200 ÷ 2 = 100

## (25) இலங்கை வரலாறு

**(ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை)**

**வினாத்தாள் I**
**பகுதி I**

**கவனிக்க.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.**

---

- இலக்கம் **01** தொடக்கம் **10** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**1.** (1) பாஹியன்கல (2) பெலிலேன (3) பட்டதொம்பலேன
(4) தொறவக்க (5) பூந்தல (.......)

**2.** (1) மஹாதித்த (2) ஊராத்தோட்ட (3) ஜம்புக்கோளப்பட்டினம்
(4) சம்மாந்துறை (5) கோகண்ண (.......)

**3.** (1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) இரகுவம்சம்
(4) போதிவம்சம் (5) தூபவம்சம் (.......)

**4.** (1) சூரதிஸ்ஸன் (2) லஞ்சதிஸ்ஸன் (3) மகாசூளி மஹாதிஸ்ஸன்
(4) குப்பிக்கல மஹாதிஸ்ஸன் (5) குட்டகண்ணதிஸன் (.......)

**5.** (1) விஹாரமகாதேவி (2) இரத்னாவலி (3) கல்யாணவதி
(4) சுனேத்ரா தேவி (5) சமுத்திரா தேவி (.......)

**6.** (1) உபோஸதகர (2) சேத்தியகர (3) பிரத்திமாகர
(4) போதிகர (5) சூத்தியகர (.......)

**7.** (1) கொன்சாந்தினோ - டீ - பிரஹன்ஸா (2) பிட்றோ லொபஸ் - டீ - சூஸா
(3) ஜெரனிமோ - டீ - அசவிடோ (4) கொன்சாந்தினோ - டீசாடி - நொரன்ஞா
(5) டீகோ - டி - மெல்லோடி - கஸ்ரோ (.......)

**8.** (1) பூட்டாவே ரட்டேரால (2) ஹன்ங்குரன்கெற்ற டிங்கிரால
(3) கொடகெதர மொஹட்டால
(4) கிவுல்லே கெதர மொஹட்டால (5) கொகுகும்புரே ரட்டேரால (.......)

**9.** (1) ஹென்றி மொங் மேஸன்முவர் (2) சோல்பரி பிரபு (3) ஜோன் கொத்தலாவல
(4) ஒலிவர் குணதிலக (5) வில்லியம் கோபல்லவா (.......)

**10.** (1) கல்லோயா குடியேற்றம் (2) மின்னேரியாக் குடியேற்றம் (3) நாச்சதுவாக் குடியேற்றம்
(4) இரணைமடுக்குடியேற்றம் (5) பராக்கிரம சமுத்திரக் குடியேற்றம் (.......)

- இலக்கம் **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப் பெயர்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) தெதுறு ஓயா - மாஹல்ல வாவி
(2) மல்வத்து ஓயா - நாச்சதூவக்குளம்
(3) மகாவலி கங்கை - மின்னேரியாக் குளம்
(4) யான் ஓயா - குருளு வாவி
(5) கலா ஓயா - கலா வாவி (.......)

**12.** (1) விஜயன் - தம்பபண்ணி
(2) பண்டுவாசுதேவன் - ஊராத்தோட்ட
(3) பத்தகச்சானா - கோகர்ண
(4) சங்கமித்தை தேரி - ஜம்புகோளப்பட்டினம்
(5) ஹேமமாலாவும் இளவரசர் தந்தவும் - லங்காப்பட்டினம் (.......)

**13.** (1) சூரதிஸ்ஸ - எல்லாளன்
(2) முதலாம் சேனன் - ஸ்ரீமாறஸ்ரீவல்லபன்
(3) நான்காம் உதயன் - முதலாம் பராந்தகன்
(4) ஐந்தாம் மகிந்தன் - முதலாம் இராசராசன்
(5) பராக்கிரம பாண்டு - கலிங்க மாகன் (.......)

**14.** (1) பொன்னம்பலம் அருணாசலம் - இலங்கைத் தேசிய காங்கிரஸ்
(2) என்.எம். பெரேரா - இலங்கை சமசமாஜக்கட்சி
(3) டீ. எஸ். சேனனாயக்கா - ஐக்கிய தேசியக் கட்சி
(4) ஜீ. ஜீ. பொன்னம்பலம் - சமஷ்டிக் கட்சி
(5) எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (.......)

**15.** (1) 1833 கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் - சட்டசபை - சட்ட நிரூபண சபைகளின் ஸ்தாபிதம்
(2) 1910 குறூ - மக்கலம் சீர்திருத்தம் - மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின் அறிமுகம்
(3) 1920 மனிங் சீர்திருத்தம் - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தின் அறிமுகம்
(4) 1947 சோல்பரி சீர்திருத்தம் - நிறைவேற்று அதிகாரக்குழு முறைமையின் அறிமுகம்
(5) 1972 குடியரசு யாப்பு - பெயரளவிலான நிறைவேற்று அதிகார முறைமையின் அறிமுகம். (.......)

- இலக்கம் **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பெயர்/ கூற்று/ காலம் என்பவை **X, Y** நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் பெயர்/ கூற்று/ காலம் என்பவை **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதாவதொரு வகையில் பொருந்தக்கூடியதாகும். எனினும் அவை தரப்பட்டுள்ள வகையில் பொருந்தக் கூடிய முறையிலன்று. **X** நிரல் **Y** நிரலுடன் பொருந்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டால் கீழே தரப்பட்டுள்ள சேர்மானங்கள் ஐந்தில் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைக் கொண்ட **இலக்கத்தை** இனங்கண்டு அதனை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) தூபாராம | A மகாசேனன் |
| (ii) றுவான்வலிசாய | B முதலாம் பராக்கிரமபாகு |
| (iii) அபயகிரி | C துட்டகைமுனு |
| (iv) ஜெட்டவனராமய | D தேவநம்பியதீசன் |
| (v) யுதகனா விஹாரை | E வலகம்பா |

(1) D C E A B (2) D C A E B (3) D A B C E (4) E A C B D (5) E C A D B (.......)

**17.** X | Y

| X | Y |
|---|---|
| (i) வசபன் | A மானவர்ம வம்சம் |
| (ii) தாதுசேனன் | B நாயக்கர் வம்சம் |
| (iii) முதலாம் சேனன் | C கலிங்க வம்சம் |
| (iv) நிசங்கமல்லன் | D மோரிய வம்சம் |
| (v) ஸ்ரீவிஜயஇராசசிங்கன் | E இலம்பகர்ண வம்சம் |

(1) D A E B C (2) D A C E B (3) E C A B D (4) E D C A B (5) E D A C B (.......)

**18.**

| X | Y |
|---|---|
| (i) தோணிகலக் கல்வெட்டு | A நீதி நிர்வாகம் பற்றிய விதிகள் |
| (ii) மிகிந்தலை கற்பலகைச் சாசனம் | B வணிக நகரத்தின் முகாமை பற்றிய விதிகள் |
| (iii) வேவல்கட்டிச் சாசனம் | C வணிக நிறுவனமொன்றில் நெல் அல்லது பணத்தினை முதலீடு செய்வதற்கான விதிகள் |
| (iv) பதுளை தூண் கல்வெட்டு | D இரண்டு ஆட்சியாளர்களுக்கிடையே ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான விதிகள் |
| (v) சங்கமுவ விகாரைக்கல்வெட்டு | E விஹாரைகளுக்கான சொத்தினை நிர்வகிப்பது பற்றிய விதிகள் |

(1) B A E C D (2) C E A B D (3) C E A D B (4) D A E C D (5) E C D B A (.......)

**19.**

| X | Y |
|---|---|
| (i) கண்டகசேத்தியம் | A பொலனறுவை |
| (ii) கொட்ட விகாரை | B இரத்தினபுரி |
| (iii) திவங்க சிலைமனை | C கோகர்ணம் |
| (iv) திருக்கோணேஸ்வரம் | D டெடிகம |
| (v) மஹாசமன் தேவாலயம் | E மிகிந்தலை |

(1) A D C E B (2) D E B A C (3) E A C B D (4) E B A C D (5) E D A C B (.......)

**20.**

| X | Y |
|---|---|
| (i) ஜுஆவோ றிபைரோ | A இலங்கைத் தீவுடனான வரலாற்றுத் தொடர்புகள் (An Historical Relation of the Island of Ceylon) |
| (ii) பெர்னாவோ டி குவெய்ரோஸ் | B இலங்கை : தீவின் வழக்காறுகள் (Ceylon : An Account of the Island) |
| (iii) றொபட் நொக்ஸ் | C இலங்கைத் தீவின் வரலாற்றுத்துன்பியல் (Historical Tragedy of the Island of Celiao) |
| (iv) எமர்சன் ரெனன்ற் | D இலங்கையில் ஐம்பது வருடங்கள் (Fifty years in Ceylon) |
| (v) தோமஸ் ஸ்கின்னர். | E இலங்கையை ஆன்மீக, லௌகீகமார்க்கத்தில் வெற்றி கொள்ளல் (Temporal and Spiritual conquest of Ceylon) |

(1) B E A C D (2) C E A B D (3) C A E D B (4) D A EB D (5) E B C D A (.......)

- **21 - 25** வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து விடயங்கள்** வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**21. பொலன்னறுவையில் சோழர்களின் ஆட்சி**

(1) பொலன்றுவை, ஜனநாதமங்களம் எனப் பெயரிடப்பட்டது.
(2) இலங்கையின் வடபகுதி மும்முடிச் சோழமண்டலம் என அழைக்கப்பட்டது.
(3) தற்போது இரண்டாம் சிவதேவாலயம் என அழைக்கப்படுவது வானவன் மாதேவி ஈஸ்வரமாகும்.
(4) வெல்கம் விகாரை, இராஜராஜப் பெரும்பள்ளி என மறு பெயர் இடப்பட்டது.
(5) தெமழ மகாசாய என்று அழைக்கப்படும் ஸ்தூபி சோழர்களால் கட்டப்பட்டது. (.......)

**22. யாழ்ப்பாண இராச்சியம்**

(1) யாழ்ப்பாண இராச்சியம் பற்றி அறிந்துகொள்வதற்கு யாழ்ப்பாண வைபவமாலை பிரதான மூலநூலாகக் காணப்படுகிறது.
(2) யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆட்சியாளன் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி ஆவான்.
(3) யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லூர் விளங்கியது.
(4) மடவலச் சாசனத்தின் பிரகாரம் யாழ்ப்பாண அரசிடமிருந்து கம்பளை ஆட்சியாளன் கப்பம் கோரியதாக அறிய முடிகிறது.
(5) 1619 இல் போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண இராச்சியம் வெற்றி கொள்ளப்பட்டது. (.......)

**23. ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்**

(1) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் இரண்டாம் விமலதர்ம சூரியனின் மகனாவான்.
(2) இவன் பொறுப்பற்ற மன்னன் என அழைக்கப்பட்டான்.
(3) ராமான்ய தேசத்துப் பிக்குமார்களை வரவழைத்து உபசம்பதா நிகழ்வினை நடாத்தினான்.
(4) குண்டசாலையில் அரச மாளிகை ஒன்றினைக் கட்டுவித்தான்.
(5) இறுதிச் சிங்கள மன்னனாக இவன் விளங்கினான். (.......)

**24. கோப்பிப் பயிர்செய்கையின் பரம்பல்**

(1) ஒல்லாந்தர் கோப்பி பயிர்செய்கையை விஸ்தரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர்.
(2) கம்பளையில் முதன்முதலாக ஜோர்ஜ் பேட் என்பவன் கோப்பிப் பயிரை பெருந்தோட்டமுறையில் அறிமுகப்படுத்தினான்.
(3) பிரித்தானிய அரசு கோப்பி பயிரிடும் உரிமத்தை பெற்றுக் கொண்டது.
(4) தென்னிந்திய தொழிலாளர்கள் கோப்பிப் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்கு வரவழைக்கப்பட்டனர்.
(5) இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரைக்கும் காலனித்துவ ஆட்சியாளர்களின் வருவாயின் பிரதான மூலமாக கோப்பி விளங்கியது. (.......)

**25. இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி**

(1) 1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.
(2) ஆரம்பம் முதலே பல்கலைக்கழகக் கல்வியானது சுதேசிய மொழியூடாக மேற்கொள்ளப்பட்டது.
(3) 1945 இல் பல்கலைக்கழக கல்வியில் இலவசக் கல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
(4) 1959 இல் வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்கள் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு தரமுயர்த்தப்பட்டன.
(5) 1974 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம் நிறுவப்பட்டது. (.......)

- **26 - 30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு **மாற்று விடைகள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ....................................... **1** எனவும்,
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **2** எனவும்,
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ....................................... **3** எனவும்,
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **4** எனவும்,

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின்....... **5** எனவும், **அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**26. எல்லாளனது ஆட்சிக்காலம் பற்றிய குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை?**

(A) மகாவம்சத்தின்படி நேர்மைதவறாத, கடமை தவறாத மன்னனாக எல்லாளன் கருதப்படுகின்றான்.

(B) 44 ஆண்டுகள் இராசரட்டையை எல்லாளன் ஆட்சி புரிந்தான்.

(C) சேத்தியகிரியில் ஒரு தூபத்தினை எல்லாளன் கட்டினான்.

(D) எல்லாளனுடைய தளபதிகளில் ஒருவனாக பல்லுக விளங்கினான் (.......)

**27. அனுராதபுர கால வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை?**

(A) மகாதீர்த்த பிரதான துறைமுக நகராக விளங்கியது.

(B) இலங்கையிலிருந்து பருத்தித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

(C) தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் மிக நெருங்கிய வர்த்தக தொடர்பு காணப்பட்டது.

(D) வர்த்தக சமூகமானது செட்டிமார் என அழைக்கப்பட்டனர். (.......)

**28. கோட்டை அரசு தொடர்பான குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை?**

(A) கோட்டை அரசின் காலத்தில் பன்சிய - பனஸ்ஜாதக நூல் எழுதப்பட்டது.

(B) கோட்டை அரசின் சிறந்த ஆட்சியாளனாக ஆறாம் பராக்கிரமபாகு விளங்கினான்.

(C) 1521 இல் நிகழ்ந்த ‘விஜயபாகு கொல்லய’ வின் பின்னர் கோட்டை அரசு மூன்று அரசியல் பிரிவாக பிரிக்கப்பட்டது.

(D) ஏழாம் புவனேகபாகு போர்த்துக்கேயருக்கு கோட்டை அரசை ஒப்படைத்தான். (.......)

**29. கண்டி இராச்சியத்தின் நிர்வாக முறைமை தொடர்பான குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை?**

(A) அரசனை மையமாகக் கொண்ட நிர்வாக முறைமை காணப்பட்டது.

(B) அரசனே மரண தண்டனையை விதிப்பதற்கான முழு அதிகாரத்தையும் கொண்டிருந்தான்.

(C) பிரதான நிர்வாக அதிகாரியாக அதிகார் விளங்கினார்.

(D) கண்டி அரசினது நிர்வாகப் பிரிவுகள் அனைத்தும் திசாவைகள், ரட்டைகள் என வகுக்கப்பட்டிருந்தன. (.......)

**30. ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் நீதி பரிபாலன முறைமைகள் தொடர்பான குறிப்புக்களில் எது / எவை சரியானது/ சரியானவை?**

(A) உயர்நீதிமன்ற முறை ஒல்லாந்தரால் உருவாக்கப்பட்டது.

(B) வழக்குகளை விசாரிப்பதற்கு யூரி முறை பயன்படுத்தப்பட்டது,

(C) உரோமன் - டச்சுச் சட்டம் ஒல்லாந்தரால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

(D) ஒல்லாந்தரால் தொகுக்கப்பட்ட தமிழரது சட்டங்களும் வழக்காறுகளும் “தேசவழமை” எனப்பட்டது, (.......)

- **31 - 35** வரையுள்ள எல்லா வினாக்களினதும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை **அடைப்புப் புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**31. இலங்கையின் வரைபடத்தினை முதன்முதல் வரைந்த ஐரோப்பியர் யார்?**

(1) அரிஸ்ரோட்டல் (2) மெகஸ்தெனிஸ் (3) தொலமி
(4) பிளினி (5) ஸ்ராபோ (.......)

**32. சித்தனறுபிம் புதல்நாவன் பற்றிய குறிப்பு எச்சாசனத்தில் காணப்படுகின்றது?**

(1) வல்லிபுரம் பொற்சாசனம் (2) பனாகடுவச் செப்பேடு (3) அம்பகமுவக் கல்வெட்டு
(4) தெவனகல சாசனம் (5) குட்டாபிற்றிய செப்பேடு (.......)

**33. முல்லேரியப் போரில் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போர் புரிந்த மன்னன் யார்?**

(1) ரிகிறி பண்டார (2) விதிய பண்டார (3) நிக்கபிட்டிய பண்டார
(4) எதிரில்லே ரால (5) மகா அஸ்தான (.......)

**34. கண்டி இராச்சிய காலத்தில் காணப்பட்ட போக்குவரத்து அமைப்பு எவ்வாறு அழைக்கப்பட்டது?**

(1) கொட்டல் பத்த (2) குறுவே பத்த (3) மகா பத்த
(4) கின்னர பத்த (5) மடிகே பத்த (.......)

**35. எந்த ஆளுனரின் காலத்தில் கொழும்பில் தேசிய அரும்காட்சியகம் தாபிக்கப்பட்டது?**

(1) கென்றி வாட் (2) சாரள்ஸ் மக்காத்தி (3) ஹேர்கியூலிஸ் றொபின்ஸன்
(4) வில்லியம் கிரகறி (5) ஆத்தர் கோர்டன் (.......)

- **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவனையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும், முதலாவது கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும் |

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| **36.** | இப்பன் கட்டுவ மெகாலிதிக் (பெருங்கற்கால) மயானமாகும். | சீன யாத்திரிகரான பாகியன் கி.பி. 411 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் அபயகிரி விகாரையில் தங்கினார். | (.......) |
| **37.** | கிரித்தல வாவி மகாசேன மன்னனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. | சில அறிஞர்களின் கருத்துப்படி சந்திரவட்டக் கல் வாழ்க்கை வட்டம் என்பதனை அடையாளப்படுத்துகின்றது. | (.......) |
| **38.** | கோட்டை இராசதானியின் பிரதான அரச வருமானமாக இருந்தது வர்த்தகமல்ல. நிலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானமாகும். | கோட்டை மன்னன் நாட்டின் பெரும் நிலங்களின் உரிமையாளனாக இருந்ததுடன் அவன் அவற்றிலிருந்து வருடமொன்றிற்கு மூன்று மில்லியனுக்கும் மேலான வருமானத்தைப் பெற்றான். | (.......) |
| **39.** | போர்த்துக்கேயர் இலங்கையில் உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் போதித்தனர். | போர்த்துக்கேயர் இலங்கையில் அச்சியந்திரத்தை அறிமுகஞ் செய்தனர். | (.......) |
| **40.** | இலங்கையின் கரையோரப் பிரதேசம் 1796 ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் வந்தது. | இலங்கை 1948 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றது. | (.......) |

*** ***

# (25) இலங்கை வரலாறு

**(ஆதி காலம் முதல் கி.பி 1978 வரை)**

**வினாத்தாள் I**

**பகுதி II**

**அறிவுறுத்தல்கள் :**

* **முதலாம்** வினா கட்டாயமானது.
* அத்துடன் பகுதி B இலிருந்து **ஒரு** வினாவையேனும் பகுதி C இலிருந்து **ஒரு** வினாவையேனும் தெரிவு செய்து, **மூன்று** வினாக்களுக்கு விடை தருக. (**முதலாம்** வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை **நான்கு** ஆகும்.)
* (**முதலாம்** வினாவுக்கு விடை அளிப்பதற்கு **இலங்கையின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

---

## பகுதி A

**1.** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்ட **பன்னிரெண்டு அம்சங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | | |
|---|---|---|---|
| **(i)** ஜஜ்ஜர நதி | **(ii)** கப்பரகந்த நதி | **(iii)** பொம்பரிப்பு | **(iv)** லங்காபட்டினம் |
| **(v)** சித்துள்பவ்வ | **(vi)** யோதவாவி | **(vii)** பொலன்னறுவை | **(viii)** நல்லூர் |
| **(ix)** கோட்டை | **(x)** கண்டி | **(xi)** வடமத்திய மாகாணம் | **(xii)** சேனநாயக்க சமுத்திரம் |

(சரியாகக் குறித்துப் பெயரிடப்படும் ஒவ்வொன்றிற்கும் **01** புள்ளி வீதம் வழங்கப்படும்.)

## பகுதி B

**2.** மகாசேன மன்னனுடைய ஆட்சியின் இறுதிக்காலம் வரையுள்ள இலங்கை வரலாற்றினைக் கற்பதற்கு வரலாற்று மூலாதாரமாக விளங்கும் மகாவம்சத்தின் முக்கியத்துவம் பற்றிப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

**(i)** நூலாசிரியரும் தொகுக்கப்பட்ட காலமும் (02 புள்ளிகள்)

**(ii)** தொடர்ச்சியான வரன்முறையில் வரலாற்றைத் தடையின்றி வெளிப்படுத்தல். (07 புள்ளிகள்)

**(iii)** சாசனவியலினூடாக தகவல்களை உறுதிப்படுத்தல். (07 புள்ளிகள்)

**3.** இலங்கை வரலாற்றில் வலகம்பா மன்னனின் அரசியல் மற்றும் பண்பாட்டுச் சாதனைகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

**4.** "இராசரட்டை நாகரிகத்தின் பிரதான மூலங்களில் ஒன்றாக நீர்ப்பாசன முறைமை காணப்பட்டது".

**(i)** பண்டுகாபயனால் கட்டப்பட்ட குளம் ஒன்றின் பெயரைத் தருக. (1 புள்ளி)

**(ii)** மின்னேரியா மற்றும் கிரித்தலை குளங்களைக் கட்டுவித்த மன்னரின் பெயரைத் தருக. (02 புள்ளிகள்)

**(iii)** குளத்தின் பிரதான பகுதிகளையும் அவற்றால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளையும் சுருக்கமாகத் தருக. (04 புள்ளிகள்)

**(iv)** இராசரட்டை நாகரிகத்தின் பிரதான அம்சமாக நீர்ப்பாசனம் விளங்கிய விதத்தினைத் தெளிவு படுத்துக. (09 புள்ளிகள்)

**5.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டுக்கு** வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகக் குறிப்புக்களை எழுதுக.

**(i)** சீகிரியா

**(ii)** இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன்

**(iii)** யாழ்ப்பாண இராச்சியம்

**(iv)** கோட்டைக் காலப் பகுதியில் கல்வியும், இலக்கியமும் (8 x 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட தேசிய கலாசார மறுமலர்ச்சி தொடர்பாகப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் பகுத்து ஆராய்க.

**(i)** பௌத்த சமய மறுமலர்ச்சி

**(ii)** இந்து சமய மறுமலர்ச்சி

**(iii)** இஸ்லாம் சமய மறுமலர்ச்சி (16 புள்ளிகள்)

**7.** "இலங்கையின் அரசியல் அமைப்பு வளர்ச்சியில் டொனமூர் அரசியல் சீர்திருத்தம் திருப்பு முனையைக் குறித்து நின்றது,"

**(i)** டொனமூர் ஆணைக் குழுவின் வருகையின்போது இலங்கையில் இருந்த பிரித்தானிய ஆளுநரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

**(ii)** டொனமூர் ஆணைக்குழுவில் அங்கம் வகித்த இருவரது பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(iii)** டொனமூர் ஆணைக்குழுவை நியமித்தமைக்கான காரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

**(iv)** டொனமூர் அரசியல் சீர்திருத்தங்களின் இயல்புகள் இலங்கையின் அரசியலமைப்பு வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்தமையினைப் பரிசீலனை செய்க. (08 புள்ளிகள்)

**8.** சுதந்திரமடைந்ததிலிருந்து இலங்கையினுடைய பொருளாதார அபிவிருத்தி பற்றி பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

**(i)** விவசாயக் குடியேற்றத் திட்டங்கள்

**(ii)** தேசிய மயமாக்கல் திட்டம்

**(iii)** இறக்குமதிக்கான மானியக் கொள்கை (16 புள்ளிகள்)

**9.** பின்வரும் எவையேனும் **இரண்டிற்கு** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புக்களை எழுதுக.

**(i)** இலங்கையில் போர்த்துக்கேயரது ஆட்சிப் பரம்பல்

**(ii)** கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையிலான உறவுகள்

**(iii)** 1848 இல் பிரித்தானியருக்கெதிரான கிளர்ச்சி

**(iv)** சீ.டபிள்யு.டபிள்யு. கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தம்

(8 x 2 = 16 புள்ளிகள்)


* * *

# (25) இலங்கை வரலாறு

**(ஆதி காலம் முதல் கி.பி 1978 வரை)**

**பகுதி III**

**1.**



# (25 A) இந்திய வரலாறு

**(ஆதிகாலம் முதல் கி.பி. 1206 வரை)**

**வினாத்தாள் I**

**பகுதி I**

**அறிவுறுத்தல்.**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

- **01** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது**. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை** அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

**1.** (1) ஜம்புதீபம் (2) இந்திகா (3) இன்தோஸ்
(4) சின்தோஸ் (5) பாரத வர்ஸா (.......)

**2.** (1) கோசலம் (2) பாஞ்சாலம் (3) மகதம்
(4) அவந்தி (5) வெங்கி (.......)

**3.** (1) தப்தி (2) ஜேலம் (3) சேனாப்
(4) ராவி (5) பியஸ் (.......)

**4.** (1) ஆரவல்லி (2) சுலைமான் (3) கிர்தார்
(4) நீலகிரி (5) இந்துகுஷ் (.......)

**5.** (1) ரஜகஹ (2) பெல்கோலா (3) குசிநாரா
(4) வைசாலி (5) கபிலவஸ்து (.......)

**6.** (1) தொலவீரா (2) கலிபங்கன் (3) ரானாகுண்டாய்
(4) அஜ்மீர் (5) சங்குதாரோ (.......)

**7.** (1) சிலப்பதிகாரம் (2) மணிமேகலை (3) திருக்குறள்
(4) சாகுந்தலம் (5) கம்பராமாயணம் (.......)

**8.** (1) தாரநாத (2) பாகியன் (3) ஹியுங்சாங்
(4) இட்சிங் (5) சுங்யுங் (.......)

**9.** (1) கன்னடம் (2) மலையாளம் (3) தெலுங்கு
(4) உருது (5) துளு (.......)

**10.** (1) நந்திவர்மன் (2) கீர்த்திவர்மன் (3) மகேந்திரவர்மன்
(4) நரசிங்கவர்மன் (5) பரமேஸ்வரவர்மன் (.......)

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் **ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புப் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) வாக்பதி - கௌடவாஹோ
(2) பதஞ்சலி - மஹாபாஷ்ய
(3) பில்ஹணர் - இராஜதரங்கணி
(4) ஹர்ஷவர்த்தனர் - ரத்னாவலி
(5) மகேந்திரவர்மன் - மத்தவிலாச பிரஹாசன (.......)

**12.** (1) யசோவர்மன் - கானோஜ்
(2) புலிகேசி - வாதாபி
(3) பிரபாகரவர்த்தனன் - தானேஸ்வரம்
(4) வரகுணவர்மன் - மதுரை
(5) முதலாம் விக்ரமாதித்தன் - கல்யாணி (.......)

**13.** (1) சிசுநாகன் - காலாசோகன்
(2) குஷாணர் - ஹுவிஷ்கன்
(3) சாதவானர் - சிமுகன்
(4) நந்தர் - மகாபத்மநந்தன்
(5) சுங்கர் - குஜலகட்பைசிஸ் (.......)

**14.** (1) திருவாலங்காடு - மகேந்திரவர்மன்
(2) அலஹபாத் - சமுத்ரகுப்தன்
(3) கதிகும்பா - காரவேலன்
(4) ரும்மின்தை - அசோகன்
(5) ஜுனாகாட் - உருத்திரதாமன் (.......)

**15.** (1) ஹெரடோட்டஸ் - கிரேக்கர்
(2) சாணக்கியன் - சீனர்
(3) அல்பிரூணி - அரேபியர்
(4) கொஸ்மஸ் - பைசாந்தியர்
(5) ஸ்ராபோ - உரோமர் (.......)

- இலக்கம் **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பெயர் / கூற்று / காலம் என்பன **X,Y** நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் பெயர் / கூற்று / காலம் என்பவை **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதாவதொரு வகையில் பொருந்தக் கூடியதாகும். எனினும் அவை சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. **X** நிரல், **Y** நிரலுடன் பொருந்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டால் கீழே தரப்பட்டுள்ள சேர்மானங்கள் ஐந்தில் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைக் கொண்ட விடையை இனங்கண்டு அதற்குரிய இலக்கத்தை **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| X | | Y |
|---|---|---|
| (i) நர்மதா | A | தஞ்சாவூர் |
| (ii) சிந்து | B | பாருகச்ச |
| (iii) கங்கை | C | விஜயநகர் |
| (iv) துங்கபத்ரா | D | கனோஜ் |
| (v) காவேரி | E | தக்ஷிலா |

(1) A E C D A (2) B E D C A (3) C E B A D (4) D A E C B (5) E B D A C (.......)

**17.**

| X | | Y |
|---|---|---|
| (i) நாகார்ஜாணக்கொண்டா | A | ஸ்தூபி |
| (ii) சாஞ்சி | B | பல்லவரதம் |
| (iii) அஜந்தா | C | செதுக்கல் |
| (iv) மதுரா | D | புத்தர் சிலை |
| (v) மகாபலிபுரம் | E | பௌத்த ஓவியம் |

(1) A C E B D (2) B A E D B (3) C A E D B (4) C E A B D (5) D B C A E (.......)

**18.**

| X | | Y |
|---|---|---|
| (i) பிம்பிசாரன் | A | தேவபாலன் |
| (ii) சந்திரகுப்த மௌரியர் | B | இரண்டாம் சந்திரகுப்தன் |
| (iii) சமுத்ரகுப்தன் | C | பிந்துசாரன் |
| (iv) தர்மபாலன் | D | விடூடபன் |
| (v) பசேனதி கோசல | E | அஜாதசத்ரு |

(1) A B D E C (2) D E B A C (3) D E A B D (4) E C D A B (5) E C B A D (.......)

**19.**

| X | | Y |
|---|---|---|
| (i) நாகர்ஜீனர் | A | கதாசரித்சாகரய |
| (ii) சோமதேவன் | B | கிராதார்ஜீன |
| (iii) ஜயதேவன் | C | விபாஷா சாஸ்திரம் |
| (iv) பவபூதி | D | மகாவீர சரிதம் |
| (v) பாரவி | E | கீத கோவிந்தம் |

(1) A D E C B (2) B A D E C (3) C A E D B (4) D B E A C (5) D E A B C (.......)

**20.**

| X | | Y |
|---|---|---|
| (i) கஜீராஹோ ஆலயம் | A | சாளுக்கியர் |
| (ii) காஞ்சி கைலாசநாதர் ஆலயம் | B | பல்லவர் |
| (iii) பாதாமி ஆலயம் | C | சோழர் |
| (iv) ஶ்ரீரங்க ஆலயம் | D | சந்தெல்ல |
| (v) தஞ்சைப்பெரும் சிவன் கோயில் | E | பாண்டியர் |

(1) B D A C E (2) C B D A E (3) D A E C B (4) D B A E C (5) E D A B C (.......)

- **21 - 25** வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** அடைப்புப் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**21. இருக்கு வேதகால சமூகம்**

(1) தந்தையை முதன்மையாகக் கொண்டது.
(2) கோத்திரத் தலைவன் ராஜன் எனப்பட்டான்.
(3) பெண்கள் சமய நடவடிக்கையில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டது.
(4) இயற்கை கடவுளாகக் கருதப்பட்டது.
(5) சமய நடவடிக்கைகளுக்கு சோமபானம் பயன்படுத்தப்பட்டது. (.......)

**22. முதலாவது பாண்டியப் பேரரசு**

(1) கி.பி. 670 ற்கும் கி.பி. 920 ற்கும் இடைப்பட்டதாகும்.
(2) இக் காலத்தில் மதுரை தலைநகராக விளங்கியது.
(3) இப் பேரரசின் தலைசிறந்த மன்னனாக ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் விளங்கினார்.
(4) ஜடாவர்ம சுந்தரபாண்டியன் புதிய கட்டிடக் கலையை அறிமுகம் செய்தான்.
(5) முதலாம் சேன மன்னனின் காலத்தில் பாண்டியர்கள் இலங்கையை ஆக்கிரமித்தனர். (.......)

**23. இந்தோ - கிரேக்கர்**

(1) இந்திய மூலாதாரங்களில் இவர்கள் யவனர் எனப்படுகின்றனர்.
(2) சாகாலம் இவர்களின் தலைநகராகும்.
(3) மினான்டர் பௌத்த ஆட்சியாளனாகக் கருதப்படுகின்றான்.
(4) மிலிந்த பன்கா இவர்களது காலத்தில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
(5) மகதம் வரை ஆட்சியை இவர்களால் விரிவடையச் செய்யக் கூடியதாக இருந்தது. (.......)

**24. சுங்க அரசவம்சம்**

(1) கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவை ஆட்சி செய்த அரச வம்சமாகும்.
(2) சுங்கர்களுக்குப் பின்னர் மௌகாரிக அரச வம்சம் ஆட்சிக்கு வந்தது.
(3) சுங்க அரசின் வீழ்ச்சி வசுமித்திரருடன் ஆரம்பித்தது.
(4) புஷ்ய மித்திரர் இந்த அரச வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளனாவான்.
(5) இந்த அரச வம்சத்தின் இறுதி ஆட்சியாளன் தேவபூதியாவான் (.......)

**25. இந்தியா மீதான அராபிய துருக்கிய ஆக்கிரமிப்பு**

(1) முதலாவது அராபிய ஆக்கிரமிப்பு கி.பி 637 ஆம் ஆண்டு பம்பாய்க்கு அருகில் உள்ள தானா மீது நடாத்தப்பட்டது.
(2) கி.பி 712 ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பின் போது காபூல், சிந்து என்பவற்றைக் கைப்பற்றுதல் அவர்களது நோக்கமாக இருந்தது.
(3) செல்வத்தை சூறையாடுதல் இந்த ஆக்கிரமிப்பின் ஒரு நோக்கமாக இருந்தது.
(4) முதலாவது ஆக்கிரமிப்பிலேயே தில்லி சுல்தான் பேரரசை நிறுவுவதில் வெற்றி காணப்பட்டது.
(5) கி.பி 1025 இல் சோமநாத் ஆலயம் அழிக்கப்பட்டது. (.......)

- **26** - **30** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து,

  **(A)** யும் **(B)** மட்டும் சரியாயின் ............................................ **1** எனவும்,
  **(B)** யும் **(C)** மட்டும் சரியாயின் ............................................ **2** எனவும்,
  **(C)** யும் **(D)** மட்டும் சரியாயின் ............................................ **3** எனவும்,
  **(A)** யும் **(C)** மட்டும் சரியாயின் ............................................ **4** எனவும்,
  ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் ......... **5** எனவும்
  புள்ளிக் கோட்டில் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C), (D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

**26.** பசேனதி கோசல மன்னன் பற்றிய குறிப்புக்களில் எது / எவை சரியானது /சரியானவை
(A) இவன் ஜைன சமயத்தைச் சேர்ந்தவனாவான்.
(B) இவனது சகோதரி பிம்பிசார மன்னனை மணஞ்செய்தாள்.
(C) இவனது இராசதானியின் தலைநகரம் சிராவஸ்தியாகும்
(D) இம் மன்னனைக் கொலை செய்து அஜாதசத்ரு அரசனானான். (.......)

**27. காந்தாரக் கலை தொடர்பான குறிப்புகளில் எது / எவை சரியானது? / சரியானவை?**
(A) காந்தாரக் கலையின் உன்னத வளர்ச்சிக் காலம் குப்தர் காலமாகும்.
(B) காந்தாரத்தில் இக் கலை மரபு குஷாணர்களின் கீழ் வளர்ச்சி பெற்றது.
(C) காந்தாரச் சிலைகளில் கிரேக்க - உரோம செல்வாக்கினைக் காண முடிகிறது.
(D) காந்தாரக் சிளைகளில் பொது வாழ்வியல் தொடர்பான வடிவங்கள் எவற்றையும் காண முடியாது.(.......)

**28. குப்தர் ஆட்சி பற்றிய குறிப்புகளில் எது / எவை சரியானது? / சரியானவை?**
(A) அதிகாரம் அரசனை மையமாகக் கொண்டிருந்தமை.
(B) தந்தையின் பின் மகனுக்கு அரசு உரிமையானமை.
(C) அரசனின் உயர் அதிகாரிகள் தர்ம மஹாமாத்திரர்கள் எனப்பட்டனர்.
(D) குப்த பேரரசின் பிரதான பிரதேச நிர்வாக அலகு மண்டலம் எனப்பட்டது. (.......)

**29. வாதாபிச் சாளுக்கியர் பற்றிய குறிப்புக்களில் எது / எவை சரியானது? / சரியானவை?**
(A) வாதாபிச் சாளுக்கியர் பல்லவர்களின் சமகாலத்தவர் ஆவர்.
(B) வாதாபியைத் தலைநகராகத் தெரிவு செய்தவன் இரண்டாம் புலிகேசி ஆவான்.
(C) இந்த அரச வம்சத்தின் முதலாவது முக்கிய அரசன் முதலாம் புலிகேசி ஆவான்.
(D) இரண்டாம் புலிகேசியினால் அராபிய ஆக்கிரமிப்பாளர்கள் துரத்தப்பட்டனர். (.......)

**30. ஹர்சவர்த்தன மன்னனின் கன்னோசி மகாநாடு தொடர்பான குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை**
(A) கன்னோசியில் மாநாடு நடத்தப்பட்டமை ஹீயுங் சாங்கைக் கௌரவப்படுத்துவதற்காகவாகும்.
(B) இந்த மகாநாட்டில் இருபது அரசர்கள் பங்குபற்றினர்.
(C) மாநாட்டின் இறுதியில் ஹர்ச வர்த்தன மன்னனைக் கொலை செய்வதற்குப் பிராமணர்கள் முயன்றனர்.
(D) இவை தொடர்பான விரிவான விபரங்கள் ஹீயுங் சாங்கின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (.......)

- **31 - 35** வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் அதன் இலக்கத்தை எழுதுக.

**31.** மகாயான பௌத்த நூல் எழுதப்பட்ட மொழி எது?

(1) பிராகிருதம் (2) சமஸ்கிருதம் (3) பாளி

(4) மலையாளம் (5) தெலுங்கு (.......)

**32.** அசோகப் பேரரசரால் கரோஷ்டி மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு எது?

(1) கிர்ணார் (2) பராபர் (3) டௌலி

(4) மஸ்கி (5) பிரஹ்மகிரி (.......)

**33.** இராஷ்டிரகூட அரச வம்சத்தின் முதல் மன்னன் யார்?

(1) இந்திரராஜன் (2) கிருஷ்ணன் (3) தந்திவர்மன்

(4) தந்திதுர்க்கன் (5) முதலாம் இந்திரன் (.......)

**34.** காந்தாரத்தின் மீதான ஹுனர்களின் ஆக்கிரமிப்பை முதன் முதல் அடக்கிய குப்த மன்னன் யார்?

(1) ஸ்கந்த குப்தன் (2) புரு குப்தன் (3) பானு குப்தன்

(4) புத குப்தன் (5) விஷ்ணு குப்தன். (.......)

**35.** கஸ்னி முகமதுவின் ஆக்கிரமிப்பு இறுதியாக இடம் பெற்ற இடம் எது?

(1) பெசாவர் (2) முல்தான் (3) சோம்நாத்

(4) தானேஸ்வரம் (5) இராஜபுதனம் (.......)

- **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது. | சரியானது. |
| **2** | சரியானது. | பிழையானது |
| **3** | பிழையானது | சரியானது. |
| **4** | பிழையானது | பிழையானது |
| **5** | சரியானது. | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | சிந்து நதி நாகரிகம் தொடர்பாக அண்மைக் கால அகழ்வுகளின் படி ரக்கிகார் நகர் வணிக நிர்வாக மத்திய நிலையமாகும். | ஹரப்பா மக்கள் மெசப்பத்தேமியாவுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். | (.......) |
| **37.** | பிந்திய வேத காலத்தில் தக்கண அரசர்கள் விராட் எனும் பட்டப் பெயரால் அறிமுகமாகினர். | பிந்திய வேத காலத்தில் கீழைத்தேய அரசர்கள் சாம்ராட் எனும் பட்டப் பெயரால் அறிமுகமாகினர். | (.......) |
| **38.** | பிந்திய மௌரியர் காலத்தில் மேற்கிலிருந்து வந்த சில குழுக்கள் வடமேற்கு இந்தியாவில் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டனர். | இந்தோ - கிரேக்கர், சாகர், பார்த்தியர், குஷாணர் எனும் மக்கள் குழுவினர் முறையே வடமேற்கு இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தினர். | (.......) |
| **39.** | மத்திய ஆசியாவின் நாடோடிக் கோத்திரத்தைச் சேர்ந்த சாகர்கள் சீத்தியர் எனவும் அழைக்கப்பட்டனர். | சாகர்களின் வலிமை வாய்ந்த மன்னனாக பினான்டர் கருதப்படுகின்றார். | (.......) |
| **40.** | இராஷ்டிரகூடர்களின் தலைநகர் பரதிஷ்டான் ஆகும். | இராஷ்டிரகூடர் கிழக்கு மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். | (.......) |

* *

# (25 A) இந்திய வரலாறு

**(ஆதிகாலம் முதல் கி.பி. 1206 வரை)**

**வினாத்தாள் II**
**பகுதி II**

**அறிவுறுத்தல்கள்**

* **முதலாம்** வினா கட்டாயமானது.
* அத்துடன் பகுதி B மற்றும் பகுதி C என்பனவற்றிலிருந்து **ஒரு** வினாவையேனும் தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.
(**முதலாம்** வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்.)
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு இந்தியப் புறவுருவப்படம் வழங்கப்படும்.)

---

## பகுதி A

**1.** உமக்குத் தரப்பட்டுள்ள இந்தியப் புறவுருவப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| **(i)** கைபர் கணவாய் | **(ii)** விந்திய மலைத்தொடர் | **(iii)** ஹரப்பா | **(iv)** தாமரலிப்தி |
| **(v)** கோதாவரி நதி | **(vi)** கன்னோசி | **(vii)** தஞ்சாவூர் | **(viii)** சௌராஷ்டிரம் |
| **(ix)** பாடலிபுத்திரம் | **(x)** வாதாபி | **(xi)** உஜ்ஜயினி | **(xii)** தக்ஷீலா |

(01 x 12= 12 புள்ளிகள்)

## பகுதி B

**2.** “ஹரப்பா நாகரிகம் நகர நாகரிகமாகும்”.

**(i)** ஹரப்பா நாகரிக அகழ்வுகளில் வெளிப்பட்ட பழைய நகரமொன்றின் பெயரைத் தருக. (01 புள்ளி)

**(ii)** இந்நாகரிகத்தை அகழ்வு செய்த தொல்பொருளியலாளர்கள் இருவரின் பெயரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(iii)** ஹரப்பா நாகரிகத்தின் பொருளாதார நிலையினை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

**(iv)** “ஹரப்பா நாகரிகம் நகர நாகரிகமாகும்” எனும் கூற்று தொடர்பாக உமது கருத்தினை தெளிவுபடுத்துக. (09 புள்ளிகள்)

**3.** பிந்திய வேத காலத்தின் சமூக கட்டமைப்பைப் பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

**4.** “மௌரிய வம்சத்தின் தலைசிறந்த ஆட்சியாளன் அசோகப் பேரரசனாவான்” இக்கூற்றை நுணுக்கமாக ஆராய்க. (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

**(i)** கிருஷ்ணா - துங்கபத்ரா நதிகளுக்கு இடைப்பட்ட பகுதி

**(ii)** கண இராச்சியம்

**(iii)** நந்த அரச வம்சம்

**(iv)** சங்க இலக்கியம் (8 x 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** தக்கணத்தின் அரசியல், பண்பாட்டு வளர்ச்சியில் சாதவாகனர்களின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(16 புள்ளிகள்)

**7.** "இரண்டாம் சந்ரகுப்த மன்னன் குப்த அரச வம்சத்தின் தலை சிறந்தவனாவான்."

**(i)** குப்த யுகத்தின் ஆரம்ப ஆட்சியாளனின் பெயரைத் தருக. (01 புள்ளி)

**(ii)** குப்த யுகம் தொடர்பாகத் தகவல்களைப் பெறக் கூடிய பிரதான மூலாதாரங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

**(iii)** இரண்டாம் சந்ரகுப்தனுக்கு முன்னர் ஆட்சி செய்த குப்த ஆட்சியாளர்கள் பேரரசின் வளர்ச்சியின் பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** இரண்டாம் சந்ரகுப்த மன்னன் குப்த பேரரசின் சிறந்த ஆட்சியாளனாகக் கருதப்படுவதற்கான காரணங்களை அவனது அரசியல் பண்பாட்டு சாதனைகளின் அடிப்படையில் முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

**8.** தென்னிந்தியாவில் சோழர் ஆட்சியின் கீழ் ஏற்பட்ட பண்பாட்டு எழுச்சியினைப் பின்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் முன்வைக்குக.

**(i)** இந்துசமய வளர்ச்சி

**(ii)** கலை, கட்டிடக் கலை (16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் **எவையேனும்** இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

**(ii)** மேலைச் சாளுக்கிய அரச வம்சம்

**(ii)** ஹர்ஷ மன்னனின் அரசியல் வெற்றிகள்

**(iii)** பல்லவர்களது பண்பாடு

**(iv)** பால அரச வம்சம்

(8 x 2 = 16 புள்ளிகள்)


* * *

# (25 A) இந்திய வரலாறு

**(ஆதிகாலம் முதல் கி.பி. 1206 வரை)**

பகுதி **II**

**1.**



# (25 B) ஐரோப்பிய வரலாறு

**(கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. 1989 வரை)**

**வினாத்தாள் I**

**பகுதி I**

**அறிவுறுத்தல்**

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக. சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

---

- **1- 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப் பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் அடைப்பினுள் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**1.** (1) ஸ்பாட்டா (2) தீப்ஸ் (3) கிரிமியா
(4) கொரிந்த் (5) மிலேடஸ் (.......)

**2.** (1) ஈஸ்கிலஸ் (2) சொபோக்லீஸ் (3) யுரிபிடீஸ்
(4) அரிஸ்டோபனீஸ் (5) வேர்ஜில் (.......)

**3.** (1) சோலோன் (2) ஒகஸ்டஸ் (3) குளோடியஸ்
(4) டிராஜன் (5) மாக்கஸ் அவுரேலியஸ் (.......)

**4.** (1) விசிகொத் (2) தாத்தர் (3) வண்டல்
(4) லொம்பாடியர் (5) அங்லோ - சாக்சன் (.......)

**5.** (1) பொலஞ்ஞோ (2) பாரிஸ் (3) ஒக்ஸ்போர்ட்
(4) அபெலார்டி (5) கேம்பிரிட்ஜ் (.......)

**6.** (1) கஸ்ரீல் (2) அரகன் (3) நோமண்டி
(4) கிரனடா (5) நவார் (.........)

**7.** (1) ஸ்பொர்சா (2) மெடிசி (3) எஸ்தெ
(4) கொன்சாகா (5) யோர்க் (.........)

**8.** (1) மக்கியவல்லி (2) இக்னேஷியஸ் லோயலா (3) தோமஸ் ஹொப்ஸ்
(4) ஜோன் லொக் (5) ஜீன் ஜக் ரூசோ (.........)

**9.** (1) மசாரின் (2) அபேசியெஸ் (3) மீராபோ
(4) லபாயட் (5) றொபீஸ்பியர் (........)

**10.** (1) வார்சோ (2) புனித ஜேர்மேன் (3) டிரியனொன்
(4) நியுலி (5) லண்டன் (........)

- **11-15** வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடனொன்று **தொடர்பில்லாதவை,** தொடர்பில்லாத சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தைப்** அடைப்பினுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

**11.** (1) ரைபர் நதி - மத்திய தரைக்கடல்
(2) சேன் நதி - ஆங்கிலக் கால்வாய்
(3) றைன் நதி - வட கடல்
(4) தேம்ஸ் நதி - பால்டிக் கடல்
(5) டான்யுப் நதி - கருங்கடல் (.......)

**12.** (1) ஜோன் வைக்ளிப் - இங்கிலாந்து
(2) ஜோன் ஹஸ் - ஆஸ்திரியா
(3) மாட்டின் லூதர் - ஜேர்மனி
(4) உல்ரிச் சுவிங்ளி - சுவிற்சலாந்து
(5) ஜோன் கல்வின் - பிரான்ஸ் (.......)

**13.** (1) பர்த்தலோமியு டயஸ் - ஆபிரிக்காவின் தென் முனை வரை பயணம் செய்தல்
(2) கிறிஸ்டோபர் கொலம்பஸ் - மேற்கிந்திய தீவுகளுக்குச் செல்லுதல்
(3) கடலோடி ஹென்றி - புதிய உலகைக் கண்டு பிடித்தல்
(4) வாஸ்கொட காமா - கள்ளிக் கோட்டைக்கு வருதல்
(5) பேர்டினன்ட் மகலன் - உலகைச் சுற்றி வருதல் (.......)

**14.** (1) டெலிரான்ட் - பிரான்ஸ்
(2) மெட்டர்னிக் - ஆஸ்திரியா
(3) காசல்றி - பிரித்தானியா
(4) முதலாம் சார் அலெக்சாண்டர் - ரஷ்யா
(5) ஜோர்ஜ் கனிங் - பிரஷ்யா (.......)

**15.** (1) டிரிக்விலீ - நோர்வே
(2) டேக் ஹமர்ஷல் - சுவீடன்
(3) யூதான்ட் - தாய்லாந்து
(4) குர்ட் வோல்டஹயிம் - ஆஸ்திரியா
(5) பேரேஸ் டி குவேலார் - பேரு (.......)

- **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள்/ ஆண்டுகள்/ சொற்றொடர்கள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன, **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ ஆண்டுகள்/ சொற்றொடர்கள்/ **X** நிரலில் தரப்பட்டுள்ள வற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை, ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை, **X** நிரலில் உள்ளவற்றை **Y** நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும், சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) மானிட வாதம் | A ஓர் இனம், பண்பாடு, மொழி என்பனவற்றை உடமையாகக் கொண்ட மக்களின் சுயாதீன நாட்டை நிர்மாணிப்பதில் காட்டும் விருப்பம் |
| (ii) தெய்வீக வழியுரிமை வாதம் | B மனித சுய கௌரவம், திறமை என்பவற்றை உறுதிப்படுத்த அவனிடம் காணப்படும் ஆற்றல். |
| (iii) தேசிய வாதம் | C அரசின் கட்டுப்பாடின்றி பொருளாதார விருத்திக்கு இடமளித்தல் தொடர்பான கொள்கை. |
| (iv) தலையிடாக் கொள்கை | D பெரும்பாலான மக்களின் உயர்ந்தபட்சம் மகிழ்ச்சியைக் கொண்ட நம்பிக்கை தொடர்பானது |
| (v) பயன்பாட்டு வாதம் | E மன்னனுக்கு நாட்டை நிருவகிப்பதற்கான உரிமை கடவுளிடமிருந்து கிடைக்கிறது என்ற நம்பிக்கை |

(1) A B E C D (2) A E D C B (3) B A C D E (4) B E A C D (5) D E A B C (.......)

**17.**

| X | Y |
|---|---|
| (i) மகா பட்டயம் | A ரொபட் வால்போல் |
| (ii) மன்னன் இங்கிலாந்து திருச்சபையின் தலைவன் எனப் பிரகடனம் செய்தல் | B இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் |
| (iii) மரண தண்டனை வழங்கப்பட்ட இங்கிலாந்து மன்னன் | C எட்டாம் ஹென்றி மன்னன் |
| (iv) இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரி | D ஜோன் மன்னன் |
| (iv) மகோன்னத புரட்சியின் போது இங்கிலாந்தின் அரசன் | E முதலாம் சாள்ஸ் மன்னன் |

(1) D C E A B (2) D C E B A (3) D E A B C (4) E A C D B (5) E C A B D (.......)

**18.**

| X | Y |
|---|---|
| (i) கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்படல். | A பிரான்சியப் புரட்சி |
| (ii) பொஸ்டன் தேநீர் விருந்து | B மறுமலர்ச்சி |
| (iii) ஸ்டேட் ஜெனரல் சபை கூட்டப்பட்டமை | C முதலாம் உலகப்போர் |
| (iv) சரஜீவோ படுகொலை | D ஐக்கிய அமெரிக்கா இரண்டாம் உலக யுத்தத்தில் இணைதல் |
| (iv) ஜப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்குதல் | E அமெரிக்க சுதந்திரப் போர். |

(1) A B D E C (2) B A C D E (3) B A E D C (4) B E A C D (5) C D A E B (.......)

**19.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | "ஆட்சியாளனின் சமயம் குடிமக்களின் சமயமாக வேண்டும்" | A. | மனித உரிமை தொடர்பான பிரகடனம் |
| (ii) | பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னனால் வரி விதிக்க முடியாது. | B. | வார்சோ உடன்படிக்கை |
| (iii) | சுதந்திரமாகப் பிறந்த மனிதனுக்கு சமமான உரிமை உண்டு | C | வியன்னா மகாநாடு |
| (iv) | சட்டபூர்வ உரிமை தொடர்பான கோட்பாடு | D | 1689 உரிமைச் சட்டம் |
| (v) | தேசிய சுய நிர்ணய உரிமைக் கோட்பாடு | E | ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கை |

(1) A C E D B (2) A E C D E (3) D E C A B (4) E A D B C (5) E D A C B (.......)

**20.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | 1688 ஆங்கிலப் புரட்சி | A. | அரசனதும், பிரபுக்களினதும் ஆதிக்கம் முடிவுறல் |
| (ii) | கைத்தொழில் புரட்சி | B. | அறிவாளிகளின் புரட்சி |
| (iii) | பிரான்சியப் புரட்சி | C | பாராளுமன்றம் வலிமை பெறுதலும், சட்ட ரீதியான அரசாங்கம் ஏற்படுத்தப்படலும் |
| (iv) | 1848 ஆம் ஆண்டு புரட்சி | D | பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் |
| (v) | போல்ஷெவிக் புரட்சி | E | புதிய பேரரசுவாதம் தோன்றுவதற்கு வழி வகுத்தல் |

(1) B A E D B (2) C E A B D (3) C A B D E (4) D E C B A (5) E D A B C (.......)

- **21 - 25** வரையிலான ஒவ்வொரு வினாவுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் **ஒன்று தலைப்புடன் பொருந்தாது.** பொருந்தாத விடையைத் தெரிந்து அதன் **இலக்கத்தைப் அடைப்பினுள் உள்ள புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**21. புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம்**

(1) ஜேர்மனியில் ஆரம்பமாகியது
(2) கத்தோலிக்க திருச்சபையின் ஊழல்களுக்கு எதிராக எழுந்தது.
(3) மாட்டின் லூதர் தலைமை தாங்கினார்
(4) ரெட்சல் புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்கு முக்கிய பங்களிப்புச் செய்தார்
(5) புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும் பரவியது. (.......)

**22. 1848 ஆம் ஆண்டு புரட்சி**

(1) தேசியவாத, தாரண்மைவாத புரட்சிகள் ஏற்படக் காரணமாகின.
(2) புரட்சி பாரிசில் ஆரம்பமானது.
(3) ஐரோப்பாவில் பல நகரங்களில் புரட்சி பரவியது.
(4) லூயி நெப்போலியனின் தலைமையில் பிரான்சில் இரண்டாவது குடியரசு அமைக்கப்பட்டது.
(5) பிராங்போட் மகாநாடு மெட்டனிக்கின் தலைமையில் நடைபெற்றது. (.......)

**23. இத்தாலிய ஜக்கியம்**

(1) பீட்மன்ட் - சாடினியா அரசு தலைமை வகித்தது.
(2) பாப்பரசரின் இணக்கத்துடன் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்டது.
(3) கவூர் இத்தாலிய ஐக்கியத்தின் காரணகர்த்தா ஆவார்.
(4) கரிபால்டி தென் இத்தாலியைக் கைப்பற்றினார்.
(5) உரோம் ஐக்கிய இத்தாலியின் தலைநகராகியது. (.......)

**24. முதலாம் உலகப்போர்**

(1) ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிந்தமை முதலாம் உலக யுத்தத்திற்கு வழிவகுத்தது
(2) இத்தாலி நேச நாடுகளுடன் இணைந்து யுத்தத்தில் ஈடுபட்டது
(3) நேசநாடுகளின் வெற்றியில் அமெரிக்காவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது
(4) போரின் தோல்வியை ஏற்றுக் கொண்ட பிஸ்மார்க் ஜேர்மனியின் சான்சலர் பதவியிலிருந்து விலகினார்.
(5) உலக சமாதானத்தைப் பேணும் பொருட்டு சர்வதேச சங்கம் நிறுவப்பட்டது. (.......)

**25. இரண்டாம் உலகப் போரின் பின்னர் சோவியத் நாடு**

(1) ஜோசப் ஸ்டாலினால் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது
(2) மேற்கு நாடுகளுடன் சமாதானத்துடன் செயற்பட வேண்டும் என நிகிதா குருஷேவ் கூறினார்
(3) பிரஷ்னெவ், அந்த்ரபோவ் சோவியத் தேசத்தில் இருந்த இரு ஆட்சியாளர்களாவர்
(4) மிகாயேல் கொர்பசேவ் பெரெஸ்துரோயிக்கா எனும் பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்தார்.
(5) சோவியத் தேசத்தின் வீழ்ச்சி பனிப் போரின் முடிவுக்குக் காரணமாகியது. (.......)

- **26 - 30** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று அல்லது பல** சரியான விடைகளாகும், சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து

  **(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின்......... **1** எனவும்,
  **(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின்......... **2** எனவும்,
  **(C)** யும் (D) யும் மட்டும் சரியாயின்......... **3** எனவும்.
  **(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின்......... **4** எனவும்

  ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் .............. 5 எனவும் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரி |

**26. ஐரோப்பாவில் தேசிய அரசு தொடர்பாகப் பின்வரும் எக் கூற்று / கூற்றுக்கள் சரியானது?**

(A) பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற முக்கிய அரசியல் அமைப்பு தேசிய அரசு எனப்பட்டது.
(B) பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன.
(C) பலம் வாய்ந்த மத்திய அரசாங்கம் தேசிய அரசுகளில் காணப்பட்டன
(D) தேசிய அரசுகளில் நிலையான புவியியல் எல்லைகள் காணப்பட்டன. (.......)

**27. பிரித்தானியப் பாராளுமன்ற முறையின் வளர்ச்சி தொடர்பாகப் பின்வரும் எக் கூற்று / கூற்றுகள் சரியானவை?**

(A) ஸ்ருவட் அரச வம்ச ஆட்சிக் காலத்தில் மன்னனுக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது.

(B) 1688 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது

(C) ஆரம்ப ஹனோவர் அரசர்களின் கீழ் பிரதம மந்திரி முறை ஏற்பட்டது.

(D) 1911 ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்டத்தினால் பிரபுக்கள் சபையின் அதிகாரம் குறைக்கப்பட்டது. (.......)

**28. பின்வரும் விடயங்களில் அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகள் யாவை?**

(A) ஐக்கிய அமெரிக்கக் குடியேற்ற அரசு தோற்றம் பெறுதல்

(B) சமஷ்டி அரசாங்கம் அமைக்கப்படல்

(C) வடக்கு, தெற்கு என இரு பிரிவாகப் பிரிதல்

(D) அடிமைகளுக்கு சுதந்திரம் அளிக்கப்படல் (.......)

**29. பின்வருவனவற்றுள் இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை?**

(A) உலகில் மிகப் பயங்கரமான அழிவு ஏற்பட்டமை.

(B) சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டமை.

(C) ஐரோப்பிய குடியேற்றவாத பேரரசுகள் வீழ்ச்சி அடைந்தமை.

(D) ஜேர்மனியிலும், யப்பானிலும் இராணுவவாதம் எழுச்சி பெற்றமை. (.......)

**30. ஐக்கிய நாடுகள் சபை தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை எவை?**

(A) ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

(B) 1945 சான் பிரன்சிஸ்கோ பிரகடனத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் அமைப்பு நிறுவப்பட்டது

(C) சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் முன்னெடுத்துச் செல்லுதல் அதன் முக்கிய நோக்கமாகும்

(D) கொன்ரட் அடிநோர் ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுச் செயலாளராவார் (.......)

- **31 - 35** வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறியிலுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

**31. பண்டைய உரோமைப் பேரரசன் யார்?**

(1) கிளிஸ்தீனீஸ் (2) பெரிக்ளீஸ் (3) ஹனிபல்

(4) சிசரோ (5) கெலேரியஸ் (.......)

**32. பண்டைய உரோம விளையாட்டரங்கம் (Amphitheatre) எது?**

(1) பார்த்தினன் (2) சியுஸ் தேவாலயம் (3) கொலோசியம்

(4) பசீலிக்கா (5) வத்திக்கான் (.......)

**33. சிலுவை யுத்தம் எந்த இனத்தவருக்கிடையே ஏற்பட்டது?**

(1) உரோமர்களுக்கும், கார்தேஜியர்களுக்கும் இடையில்

(2) உரோமர்களுக்கும், கோத் இனங்களுக்கு இடையில்

(3) வைக்கிங்குக்கும் மகியார்களுக்கும் இடையில்

(4) கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியருக்கும் இடையில்

(5) ரியூட்டானியருக்கும் சிலாவியருக்கும் இடையில் (.......)

**34. மைக்கல் ஆஞ்சலோவின் சித்திரம் காணப்படும் ஆலயம் எது?**

(1) நோட்டடாம் ஆலயம் (2) மொன்டி கசீனோ ஆலயம்

(3) செலிஸ்பரி ஆலயம் (4) விற்றன்பர்க் ஆலயம்

(5) சிஸ்டையின் ஆலயம் (.......)

**35.** சூரிய மையக் கொள்கையை முன்வைத்த விஞ்ஞானி யார்?

(1) தொலமி (2) நிக்கலஸ் கொப்பர்னிகஸ் (3) ஜொஹனஸ் கெப்லர்

(4) கலிலியோ கலிலி (5) ஐசக் நியூற்றன்

- **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பனவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் அடைப்புக்குறியிலுள்ள **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | சரியானது |
| **2** | சரியானது | பிழையானது |
| **3** | பிழையானது | சரியானது |
| **4** | பிழையானது | பிழையானது |
| **5** | சரியானது | சரியானதும், முதலாவது கூற்றினைநன்றாக விளக்குவதுமாகும் |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | கிரேக்க அரசைக் கைப்பற்றியதன் விளைவாக உரோமர் கிரேக்க நாகரிகத்தின் செல்வாக்கிற்கு உள்ளாகினர் | கிரேக்கரிடமிருந்த விஞ்ஞானம், இலக்கியம், மெய்யியல், புவியியல் முதலான அறிவைப் பெற்ற உரோமர், அதன் விளைவாக மானிட அறிவை மதிக்கத் தொடங்கினர். | (.......) |
| **37.** | "Gold, God and Glory" என்ற பொன், தெய்வம், கீர்த்தி எனும் வெளிப்பாட்டிலிருந்து ஸ்பானிய நாடுகாண் பயணத்தின் பிரதான நோக்கம் தெளிவாகப் புலப்படுகிறது. | ஸ்பானிய இனத்தவரான பேத்ரோ அல்வாரிஸ் கப்ரால் மெச்சிக்கோவைக் கைப்பற்றினார். | (.......) |
| **38.** | கி.பி.1763 இல் கைச்சாத்திடப்பட்ட பாரிஸ் உடன் படிக்கையால் ஏழாண்டுப் போர் முடிவுக்கு வந்தது | வியன்னா மகாநாட்டின் பின்னர் சர்வதேச சமாதானத்தை நோக்கமாகக் கொண்டு குறுகிய காலம் நடைமுறையில் இருந்த ஐரோப்பிய ஒற்றுமை ஐரோப்பிய மகாநாட்டு முறை எனப்படும். | (.......) |
| **39.** | கிரான்டின் தலைவர் ஒலிவர் குரோம்வெல்லால் பதினாறாம் லூயி மன்னனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. | கி.பி.1917 மார்ச் மாதம் ரஷ்யாவில் ஆட்சிக்கு வந்த தற்காலிக அரசாங்கத்தால் இரண்டாம் நிக்கலஸ் பேரரசன் பகிரங்கமாகக் கொலை செய்யப்பட்டான். | (.......) |
| **40.** | லியோன் டிரொஸ்கி ஒரே நாட்டில் சமவுடைமை எனும் எண்ணக் கருவை முன் வைத்தார் | கி.பி.1929 லாத்தரன் உடன்படிக்கையில் முசோலினி பாப்பரசருடன் அரசியல் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். | (.......) |

* *

## (25 B) ஐரோப்பிய வரலாறு

**(கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. 1989 வரை)**

**வினாத்தாள் II**

**பகுதி II**

**அறிவுறுத்தல்கள்**

* **முதலாம்** வினா கட்டாயமானது,
* அத்துடன் பகுதி B மற்றும் C என்பனவற்றிலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக, முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை **நான்கு** ஆகும்.

(**முதலாம்** வினாவுக்கு விடை அளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்).

---

**பகுதி A**

**1.** தரப்பட்டுள்ள ஐரோப்பிய புறவுருவப்படத்தில் பின்வரும் **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | | |
|---|---|---|---|
| **(i)** டான்யூப் நதி | **(ii)** யூரல் மலைத்தொடர் | **(iii)** போல்டிக் கடல் | **(iv)** ஜிப்ரோல்டர் நீரிணை |
| **(v)** அதென்ஸ் | **(vi)** கொன்ஸ்தாந்திநோபிள் | **(vii)** பரீஸ் | **(viii)** புளோரன்ஸ் |
| **(ix)** போலாந்து | **(x)** சென்ற் பீற்றர்ஸ்பேர்க் | **(xi)** லிவர்பூல் | **(xii)** கீல் கால்வாய் |

(1 x 12 = 12 புள்ளிகள்)

**பகுதி B**

**2.** பின்வருவன தொடர்பாகப் பண்டைய கிரேக்க நாகரிகத்தின் பிரதான இயல்புகளைக் குறிப்பிடுக.

**(i)** நகர ஆட்சி முறை

**(ii)** கலையும், இலக்கியமும் (16 புள்ளிகள்)

**3.** ''மறுமலர்ச்சி ஐரோப்பிய நாகரிகத்தினதும், அறிவு வளர்ச்சியினதும் திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.''

**(i)** "மறுமலர்ச்சி" ஆரம்பமான நாட்டின் பெயரைத் தருக (01 புள்ளி)

**(ii)** "மறுமலர்ச்சி" என்றால் என்ன என்பதனைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(iii)** மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் யாவை? (05 புள்ளிகள்)

**(iv)** மறுமலர்ச்சி ஐரோப்பிய நாகரிகத்தினதும், அறிவு வளர்ச்சியினதும் திருப்புமுனையாகும் விதத்தினைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

**4.** "கைத்தொழில் புரட்சி ஐரோப்பாவின் தொழில்நுட்பம், பொருளாதாரம், சமூகம் என்பனவற்றில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியது" ஆராய்க. (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

**(i)** போர்த்துக்கல் மேற்கொண்ட நாடுகாண் பயணங்கள்

**(ii)** முப்பதாண்டுப் போர்

**(iii)** அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்கள்

**(iv)** பிரான்சின் "பண்டைய ஆட்சி"

(8 x 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** "நெப்போலியன் பொனபாட் பிரான்சிய சமுதாயத்தின் அனைத்துத் துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தினான்"

**(i)** நெப்போலியன் பொனபாட் பிறந்த இடம் எது? (01 புள்ளிகள்)

**(ii)** நெப்போலியன் பொனபாட் ஆக்கிரமித்த **இரு** நாடுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(iii)** நெப்போலியன் பிரான்சில் ஆட்சியை ஏற்படுத்திய விதத்தினைத் தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

**(iv)** நெப்போலியனின் உள்நாட்டுக் கொள்கையை முன்வைத்து அவன் பிரான்சிய சமுதாயத்தில் ஏற்படுத்திய செல்வாக்கினை விபரிக்குக. (09 புள்ளிகள்)

**7.** ஜேர்மனியை ஒன்றிணைக்கும் செயற்பாடு தொடர்பாகப் பின்வரும் தலைப்புக்களில் பரிசீலனை செய்க.

**(i)** கி.பி.1815-1848 வரையிலான காலப்பகுதியில் ஜேர்மனியை ஒன்றிணைப்பதில் நிலவிய தடைகள்

**(ii)** பிஸ்மார்க்கினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (16 புள்ளிகள்)

**8.** இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கான காரணங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாக **சிறுகுறிப்பு** எழுதுக.

**(i)** வியன்னா மகாநாடு

**(ii)** இத்தாலிய ஐக்கியத்தில் கவூரின் பங்கு

**(iii)** போல்ஷெவிக் புரட்சி

**(iv)** பனிப்போர்


(8 x 2 = 16 புள்ளிகள்)

* * *

## (25 B) ஐரோப்பிய வரலாறு

**(கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. 1989 வரை)**

**பகுதி II**



# (25 C) நவீன உலக வரலாறு

**(கி.பி. 1500 முதல் 1989 வரை)**

**வினாத்தாள் I**

**பகுதி I**

**கவனிக்குக.**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

---

**பகுதி I**

- **01 - 10** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐவைந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் அடைப்பினுள்ள **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**1.** (1) மிசிசிப்பி (2) கியூபா (3) தேம்ஸ்
(4) நைகர் (5) இரவட் (.......)

**2.** (1) பெற்றாக் (2) மக்கியவல்லி (3) பிரகர்ஸ்
(4) தோமஸ் மூர் (5) இராஸ்மஸ் (.......)

**3.** (1) ஜோன் வைக்ளிப் (2) ஜோன் ஹஸ் (3) மாட்டின் லூதர்
(4) ஜோன் கல்வின் (5) பிரான்சிஸ் சேவியர் (.......)

**4.** (1) பெரஸ்டர் ஜோன் (2) காட்டியர் (3) ஜொலியட்
(4) லா சலே (5) மாக்வெடே (.......)

**5.** (1) உரிமைச் சட்டம்
(2) மனித உரிமை தொடர்பான பிரகடனம்
(3) மனித உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனம்
(4) அபார்தீட்
(5) சிவில் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனம் (.......)

**6.** (1) வெனிசுவெல (2) ஆர்ஜன்டீனா (3) கொலம்பியா
(4) பேரு (5) நைஜீரியா (.......)

**7.** (1) வூட்ரோ வில்சன் (2) லொயிட் ஜோர்ஜ் (3) பிராங்லின் ரூஸ்வெல்ட்
(4) ஜோன் கெனடி (5) ஜிம்மி காட்டர் (.......)

**8.** (1) ஜவஹர்லால் நேரு (2) லால் பகதூர் சாஸ்திரி (3) மகாத்மா காந்தி
(4) இந்திரா காந்தி (5) ரஜீவ் காந்தி (.......)

**9.** (1) உலக சுகாராதார நிறுவனம் (WHO)
(2) வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO)
(3) வோர்சோ உடன்படிக்கை
(4) தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை அமைப்பு (SEATO)
(5) சென்டோ உடன்படிக்கை அமைப்பு (CENTO) (.......)

**10.** (1) நிகிதா குருஷேவ் (2) அலெக்செய் கொசிஹின் (3) லியோனிட்ஸ் பிரெஷ்னெவ்
(4) லெச் வலேசா (5) மிஹாயல் கொபர்சேவ் (.......)

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) இந்து மதம் - நேபாளம்
(2) பௌத்த மதம் - தாய்லாந்து
(3) இஸ்லாம் மதம் - ஈரான்
(4) யூத மதம் - லெபனன்
(5) கத்தோலிக்க மதம் - பிலிப்பின் தீவு (.......)

**12.** (1) நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(2) ஏழாண்டுப் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(3) நைல் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(4) டிரபல்கார் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(5) கிரிமியன் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் (.......)

**13.** (1) ஸ்பொர்சா - மிலான்
(2) வலோய் - வெனிஸ்
(3) மெடிசி - புளோரன்ஸ்
(4) எஸ்தெ - பெராரா
(5) கொன்சாகா - மன்டுவா (.......)

**14.** (1) பதினான்காம் லூயி - "நானே அரசு
(2) நெப்போலியன் பொனபாட் - "புரட்சி என்பது நான்"
(3) கெமிலோ கவூர் - "இத்தாலி தனியாக எழுச்சி பெற முடியும்"
(4) காள்மார்க்ஸ் - "உலகத் தொழிலாளர்களே ஒன்றிணையுங்கள்"
(5) வின்ஸ்டன் சேர்ச்சில் - "பால்டிக் கடல் தொடங்கி எரித்திரையான் கடல் வரையான இரும்புத்திரை (.......)

**15.** (1) தாய்வான் - தாய்லாந்து
(2) மெசபத்தேமியா - ஈராக்
(3) பாரசீகம் - ஈரான்
(4) பர்மா - மியன்மார்
(5) கிழக்குப் பாக்கிஸ்தான் - பங்களாதேஷ் (.......)

- **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள்/ திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. **X** நிரலில் உள்ளவற்றை **Y** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைச் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

**16.**

| **X** | | **Y** |
|---|---|---|
| (i) நன்னம்பிக்கை முனை | A | சீனா |
| (ii) புதிய உலகம் | B | பெரிய பிரித்தானியா |
| (iii) தூங்கும் இராட்சதன் | C | ஆபிரிக்காக் கண்டம் |
| (iv) இருண்ட கண்டம் | D | அமெரிக்காக் கண்டம் |
| (v) சூரியன் மறையாத பேரரசு | E | ஆபிரிக்காவின் தென்முனை |

(1) A D C B E (2) B A D C E (3) C D A E B (4) E C D B A (5) E D A C B (.......)

**17.** **X** **Y**

(i) மொகலாயர் — A வியட்னாம்

(ii) மஞ்சு — B சியம்

(iii) இன்குயென் — C பர்மா

(iv) கொன்பவுங் — D இந்தியா

(v) சக்ரி — E சீனா

(1) D A C B E (2) D B A E C (3) D E A C B (4) E C D A B (5) E D B C A (.......)

**18.** **X** **Y**

(i) புளோரன்ஸ் நைட்டிங்கேல் — A விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்

(ii) மாரி கியூரி — B தாதியர் சேவையின் முன்னோடி

(iii) வெலன்டினா தெரெஸ்கோவா — C இஸ்ரேலின் முதல் பெண் பிரதமர்

(iv) கோல்டா மேயர் — D பிரித்தானியாவின் முதல் பெண் பிரதமர்

(v) மாக்ரட் தச்சர் — E ரேடியத்தைக் கண்டுபிடித்த போலந்து விஞ்ஞானி

(1) A B D E C (2) A C E D B (3) B E D A C (4) B E A C D (5) D A E C B (.......)

**19.** **X** **Y**

(i) அமெரிக்கப் புரட்சி — A "செல்வந்த நாடு", "வலிமைவாய்ந்த படை"

(ii) பிரெஞ்சுப் புரட்சி — B "அமைதி, நிலம், உணவு"

(iii) மெய்ஜி சீர்திருத்தம் — C பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பில்லை.

(iv) ரஷ்யப்புரட்சி — D "விவசாயிக்கு நிலம்", முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்

(v) சீனப் புரட்சி — E சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

(1) B C A E D (2) C E A B D (3) C E B A D (4) D A E B C (5) E C A D B (.......)

**20.** **X** **Y**

(i) டிரக்வி லீ — A பர்மா

(ii) டேக் ஹெமர்ஷல் — B பேரு

(iii) யூத்தான்ட் — C ஒஸ்ரியா

(iv) வோல்ட் ஹய்ம் — D சுவீடன்

(v) பெரேஸ் த குவேலார் — E நோர்வே

(1) A C B E D (2) B D A E C (3) C A D B E (4) E B A C D (5) E D A C B (.......)

- **21 - 25** வரையிலான அனைத்து வினாக்களுக்கும் ஒரே தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவைகளில் **ஒன்று தலைப்புக்குப் பொருந்தாது.** அதனைத் தெரிவு செய்து **அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

**21. மறுமலர்ச்சி**

(1) இத்தாலியில் ஆரம்பமாகியது.

(2) கடலோடி ஹென்றி மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய முக்கிய நபராவார்.

(3) மறுமலர்ச்சி மேற்கு ஐரோப்பாவில் பல நாடுகளில் பரவியது.

(4) மக்கியவலி "இளவரசன்" எனும் நூலை எழுதினார்.

(5) பாப்பரசர் இரண்டாம் ஜூலியஸ், மைக்கல் ஆஞ்சலோவின் சேவையைப் பெற்றுக் கொண்டார். (.......)

**22. கீழைத்தேய ஒல்லாந்தப் பேரரசு**

(1) பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒல்லாந்தர் கிழக்கு நாடுகளுக்கு வந்தனர்.

(2) கி.பி.1602 ஆம் ஆண்டு ஐக்கிய ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

(3) யான் பீட்டர்சோ கூன் கிழக்கு ஒல்லாந்த பேரரசின் தாபகராகக் கருதப்படுகிறார்.

(4) ஒல்லாந்த கீழைப் பேரரசின் தலைமையகம் பத்தேவியாவில் அமைக்கப்பட்டிருந்தது.

(5) கி.பி.1591 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றினர். (.......)

**23. பிரான்சியப் புரட்சியின் பிரதான கட்டங்கள்.**

(1) பொஸ்டன் தேனீர் விருந்து

(2) தேசிய சபை அமைக்கப்பட்டது.

(3) பஸ்டீல் சிறைச்சாலை தகர்க்கப்பட்டது.

(4) பயங்கர ஆட்சி

(5) தேசிய சட்டமன்றத்தின் நிருவாகம் (.......)

**24. ஆபிரிக்கா தொடர்பான போராட்டம்**

(1) ஆபிரிக்கக் கண்டத்தில் ஆட்சியை நிறுவுதல் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பகைமையும் அதிகாரப் போட்டியும் ஆபிரிக்கா தொடர்பான போராட்டம் எனப்படுகிறது.

(2) மிஷனரிகளும் நாடுகாண் பயணிகளும் ஆபிரிக்காக் கண்டத்தை ஐரோப்பியர்களுக்குத் திறந்தனர்.

(3) பெல்ஜியத்தின் லியோபோல்ட் மன்னனால் கொங்கோவில் சுதந்திர அரசு நிறுவப்பட்டது.

(4) எகிப்து ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டது.

(5) அல்ஜீரியா பிரான்சியரின் கீழ் இருந்தது. (.......)

**25. ஐக்கிய நாடுகளின் பிரதான அமைப்பு**

(1) பொதுநலவாயம்

(2) பொதுச்சபை

(3) பாதுகாப்புச் சபை

(4) தலைமைச் செயலகம்

(5) பன்னாட்டு நீதிமன்றம் (.......)

- **26 - 30** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் **(A), (B), (C), (D)** எனும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ....................................... **1** எனவும்,
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **2** எனவும்,
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ....................................... **3** எனவும்,
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **4** எனவும்,
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் ................**5** எனவும்
**புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்கள் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

**26. பின்வருவனவற்றுள் தேசிய அரசின் இயல்புகள் யாவை?**

(A) அதிகாரம் மிக்க மானிய பிரபுக்கள் வகுப்பு

(B) பிரபுக்களிடமிருந்த தனிப்பட்ட படை

(C) பலம் வாய்ந்த மத்திய அரசு

(D) நிலையான தேச எல்லை (.......)

**27. கைத்தொழில் புரட்சி தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுக்களில் சரியானது? / சரியானவை எவை?**

(A) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பித்தது.

(B) கைத்தொழில் புரட்சியால் தொழிற்சாலை முறை ஆரம்பிக்கப்பட்டது.

(C) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பெரும்பாலான நாடுகளில் கைத்தொழில் விரைவாக முன்னேற்றம் அடைந்தது.

(D) கைத்தொழில் புரட்சி புதிய பேரரசுவாதம் தோன்றுவதற்கு வழிவகுத்தது. (.......)

**28. ஜேர்மனியின் ஐக்கியம் தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுக்களில் சரியானது? / சரியானவை?**

(A) பிரஷ்யாவின் தலைமையில் ஜேர்மனி ஐக்கியமடைந்தது.

(B) சொல்வரையின் சுங்க வரி சங்கம் ஜேர்மன் அரசுகள் இடையே வர்த்தகத் தடையை நீக்கியது.

(C) லூயி நெப்போலியனின் ஆதரவுடன் ஜேர்மனி ஒன்றிணைக்கப்பட்டது.

(D) கரிபால்டி ஐக்கிய ஜேர்மனியின் முதலாவது சான்சலாராக நியமிக்கப்பட்டார். (.......)

**29. பனிப்போர் தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுக்களில் சரியானது? / சரியானவை?**

(A) இரண்டாம் உலகப்போரின் பின்னர் முதலாளித்துவ, சமவுடமை எனும் இரு அணிகளுக்கிடையிலான அரசியல், இராசதந்திர மோதல்கள் பனிப்போர் எனப்படும்.

(B) ஜோசப் ஸ்ராலினின் கொள்கைகள் பனிப்போர் தளர்வடையக் காரணமாகியது.

(C) சோவியட் தேசத்தின் வீழ்ச்சியின் பின்னர் பனிப்போர் முடிவுற்றது.

(D) பனிப்போர் காலத்தில் மேற்கு, கிழக்கு ஜேர்மனி இணைக்கப்பட்டது. (.......)

**30. பின்வரும் தலைவர்களுள் இந்தோனேசியாவின் ஜனாதிபதி ஜனாதிபதிகள் யார்? / யாவர்?**

(A) அவுங்சான்

(B) சுகர்ணோ

(C) சுகர்டோ

(D) ரமோன் மெக்சேசே (.......)

- **31 - 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் அதன் இலக்கத்தை எழுதுக.**

**31. "இறுதி இரவு உணவு" சித்திரத்தை வரைந்த பிரபல ஓவியர் யார்?**

(1) ஜிவோட்டோ (2) பொட்டிஷெலி (3) லியனாடோ டாவின்சி

(4) மைக்கல் ஆஞ்சலோ (5) டிடியன் (.......)

**32. இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரி யார்?**

(1) ஒலிவர் குரொம்வெல் (2) ரொபர்ட் வோல்போல் (3) சாள்ஸ் டவுன்ஷென்ட்

(4) பிரடரிக் நோர்த் (5) வில்லியம் பிட் (.......)

**33. பரிணாமவாதக் கோட்பாட்டை முன்வைத்த விஞ்ஞானி யார்?**

(1) சாள்ஸ் டார்வின் (2) லுயி பாஸ்டர் (3) ஹர்பர்ட் ஸ்பென்சர்

(4) சிக்மன்ட் பிரொயிட் (5) அல்பட் அயின்ஸ்டயின் (.......)

**34. "முடிவில்லா புரட்சி" எனும் எண்ணக்கருவை முன்வைத்த போல்ஷெவிக் தலைவர் யார்?**

(1) பிலெக்கனொப் (2) வீ. ஐ. லெனின் (3) புக்கரின்

(4) ஜோசப் ஸ்டாலின் (5) லியோன் ட்ரொட்ஸ்கி (.......)

**35. சீன மக்கள் குடியரசின் முதலாவது பிரதம மந்திரி யார்?**

(1) சுன் யற் சென் (2) சியாங் காய் ஷெக் (3) மா-ஓ-சே-துங்

(4) சௌ என் லாய் (5) லின் பியாவோ (.......)

- **36 - 40** வரையுள்ள வினாக்களின் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எது என்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் முதலாவது கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | கி.பி.1649 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் சாள்ஸ் மன்னன் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டான். | தோமஸ் ஹொம்ஸ் என்பவரால் "வெவியதான்" எனும் நூல் எழுதப்பட்டது. | (.......) |
| **37.** | பிரான்சிய மன்னனின் ஆதிபத்தியம் தொடர்பாக இருந்த தடைகளை நீக்குவதும் பிரான்சை ஐரோப்பாவின் பலம் வாய்ந்த அரசாக மாற்றுவதும் ரிச்சலியுவின் பிரதான நோக்கமாகும். | புரட்சியின் பின்னர் லூயி நெப்போலியன் பிரான்சில் ஆட்சிக்கு வந்தான் | (.......) |
| **38.** | 1868 சீர்திருத்ததத்தினால் யப்பானில் டொக்குகாவா அரச வம்சம் தாபிக்கப்பட்டது. | பெட்டிஸ்டா எனும் ஏகாதிபத்திய ஆட்சியாளனை அகற்றி 1959 ஆம் ஆண்டு பிடோல் கஸ்ரோ கியுபா-வின் ஆட்சியைக் கைப்பற்றினான். | (.......) |
| **39.** | இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாவற்கு அண்மிய காலப்பகுதியில் சர்வதேச சங்கம் செயலிழந்து காணப்பட்டது. | மஞ்சூரியப் பிரச்சினை, அபீசினியப் பிரச்சினை என்பனவற்றிற்குத் தீர்வு காணத்தவறிய சர்வதேச சங்கம் ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்த போது அதனைத் தடுப்பதற்கும் முற்படவில்லை. | (.......) |
| **40.** | மோதிலால் நேரு இந்தியாவின் முதலாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். | சுல்பிகார் அலி பூட்டோ வங்காளதேசத்தின் முதலாவது பிரதம மந்திரியாவார். | (.......) |

* *

# (25 C) நவீன உலக வரலாறு

**(கி.பி. 1500 முதல் 1989 வரை)**

**வினாத்தாள் II**

**பகுதி II**

**அறிவுறுத்தல்கள்**

* **முதலாம்** வினா கட்டாயமானது.
* அது தவிர பகுதி B மற்றும் C என்பனவற்றிலிருந்து **ஒரு** வினாவையேனும் தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை **நான்கு** ஆகும்.

( **முதலாம்** வினாவுக்கு விடை அளிப்பதற்கு **உலகப் புறவுருவப் படம்** வழங்கப்படும்)

---

**பகுதி A**

**1.** உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் படத்தில் பின்வரும் அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| **(i)** செங்கடல் | **(ii)** நைல்நதி | **(iii)** பிரனீஸ் |
| **(iv)** பேர்லின் | **(v)** மொஸ்கோ | **(vi)** போர்த்துக்கல் |
| **(vii)** பனாமாக் கால்வாய் | **(viii)** மலாக்காத் தொடுகடல் | **(ix)** பிலிப்பீன் தீவுகள் |
| **(x)** நியூயோர்க் | **(xi)** கேப் ரவுன் | **(xii)** கல்கத்தா |

(1 x 12 = 12 புள்ளிகள்)

**பகுதி B**

**2.** "கி.பி.1453 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்திநோபிளின் வீழ்ச்சி நவீன உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்." ஆராய்க. (16 புள்ளிகள்)

**3.** "அமெரிக்க சுதந்திரப்போர் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது வெற்றிகரமான சுதந்திரப் போராட்டமாகும்"

**(i)** அமெரிக்க சுதந்திரப் போரின் தலைவரின் பெயரினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

**(ii)** வட அமெரிக்காவில் காணப்பட்ட **நான்கு** ஆங்கிலக் குடியேற்றங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

**(iii)** அமெரிக்க சுதந்திரப் போருக்கு வழிவகுத்த பொருளாதாரக் காரணிகளை சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iv)** அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவு, அதன் தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் அதன் முக்கியத்துத்தைப் பரிசீலனை செய்க. (09 புள்ளிகள்)

**4.** முதலாம் உலகப் போர் ஏற்படுவதற்கான காரணங்களைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

**(i)** புதிய பேரரசுவாதம்

**(ii)** ஐரோப்பா இரு அணிகளாகப் பிளவுற்றமை (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகச் சிறு குறிப்பு எழுதுக.

**(i)** இங்கிலாந்தின் பாராளுமன்ற முறையின் வளர்ச்சி

**(ii)** பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்

**(iii)** இத்தாலிய ஐக்கியத்தின் பிரதான கட்டங்கள்

**(iv)** வி.ஐ லெனின்

(8 x 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** "ஐரோப்பாவில் பாசிசவாதத்தினதும் நாசிசவாதத்தினதும் எழுச்சி இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்கான பிரதான காரணமாகும்"

**(i)** ஐரோப்பாவில் பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சி பெற்ற **இரு** நாடுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(ii)** அந்நாடுகளிலிருந்த பாசிசவாத, நாசிசவாதத் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

**(iii)** அந்நாடுகளில் பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சி பெறுவதில் தாக்கம் செலுத்திய பொதுவான காரணிகளை முன்வைக்குக. (04 புள்ளிகள்)

**(iv)** பாசிசவாதத்தினதும் நாசிசவாதத்தினதும் எழுச்சி இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு எந்த அளவில் காரணமாக அமைந்தது என்பதை சுருக்கமாக எழுதுக. (08 புள்ளிகள்)

**7.** பின்வரும் தலைப்புக்களின் கீழ் சீன பொதுவுடமைப் புரட்சி தொடர்பாக விமர்சிக்க.

**(i)** மா-ஓ-சேதுங்கின் தலைமைத்துவம்

**(ii)** மக்கள் சீனக் குடியரசு அமைக்கப்பட்டமை (16 புள்ளிகள்)

**8. (i)** ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நோக்கங்களை விபரிக்குக. (06 புள்ளிகள்)

**(ii)** கி.பி.1980 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபை அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளது என்பதனைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைவர்களில் எவரேனும் **இருவரின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக

**(i)** மகாத்மா காந்தி

**(ii)** ஜோசப் ஸ்டாலின்

**(iii)** ஹோ-சி-மிங்

**(iv)** சுகர்ணோ

(8 x 2 = 16 புள்ளிகள்)


* * *

# (25 C) நவீன உலக வரலாறு

**(கி.பி. 1500 முதல் 1989 வரை)**

**பகுதி II**

**1.**



# (28) மனைப் பொருளியல்

## வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் I** - **நேரம் : 02 மணித்தியாலங்கள்.**
5 தெரிவுகளுடனான 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் **மொத்தப்புள்ளிகள் 50.**

**வினாத்தாள் II** - **நேரம் : 03 மணித்தியாலங்கள்.** (அதற்கு மேலதிகமாக வாசிப்பு நேரம் 10 நிமிடங்களாகும்.)
இவ்வினாத்தாள் **எட்டு** வினாக்களை உள்ளடக்கியது. முதலாம் வினா **கட்டாயமானது.**
முதலாம் வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

முதலாம் வினா : பத்து பகுதிகளை உள்ளடக்கிய கட்டாயமான வினா.
$2 \times 10 = 20$ புள்ளிகள்
2 - 7 வினாக்கள் : கட்டமைப்பு வினாக்கள்/அரைக் கட்டமைப்பு வினாக்கள்
$16 \times 5 = 80$ புள்ளிகள்

II ஆம் வினாத்தாளிற்கு மொத்தப்புள்ளிகள் = 100

**செய்முறைப் பரீட்சை** : **நேரம் : 03 மணித்தியாலங்கள்.**
இப்பரீட்சை **A, B** என இரண்டு பகுதிகளைக் கொண்டிருப்பதோடு 12, 13 தரங்களுக்குரிய செய்முறைச் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளது.
செய்முறைப் பரீட்சைக்கான மொத்தப்புள்ளிகள் 200 ஆகும்.

பகுதி A - நிலையச் சோதனை (Spot test)
15 வினாக்கள். இதற்கான நேரம் 30 நிமிடங்கள் ஆகும்.
ஒரு வினாவிற்கு விடையளிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 2 நிமிடங்கள்.
$4 \times 15 = 60$ புள்ளிகள்

பகுதி B - செய்முறைச் செயற்பாடுகள் இரண்டினை உள்ளடக்கியது. இதற்கான நேரம் 2 மணித்தியாலமும் 30 நிமிடங்களுமாகும்.
140 புள்ளிகள்

**இறுதி புள்ளியைக் கணித்தல் :**

| | | | |
|---|---|---|---|
| வினாத்தாள் **I** | = | $50 \times 2$ | = 100 |
| வினாத்தாள் **II** | | | = 100 |
| செய்முறைப் பரீட்சை | | | = 200 |
| இறுதிப் புள்ளிகள் | = | $400 \div 4$ | = 100 |

# (28) மனைப் பொருளியல்

## பகுதி I

**கவனிக்குக.**

★ **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்குக.
★ **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(பரீட்சையின் போது விடையளிப்பதற்கு ஒரு பல் தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்)

---

**1.** மனிதத் தேவைகளுக்கமைய முகாமை செய்யப்பட்ட சூழல்,
(1) சிறந்த வாழ்க்கைச் சூழல். (2) பௌதீக வாழ்க்கைச் சூழல்.
(3) சமூக வாழ்க்கைச் சூழல். (4) மகிழ்ச்சிகரமான வாழ்க்கைச் சூழல்
(5) சமூக பொருளாதாரச் சூழல்

**2.** நடைமுறைப்படுத்தக்கூடிய இயற்கைசூழலை நுண் முறையில் மாற்றியமைப்பதன் மூலம் நிர்மாணிப்பு எது?
(1) வன் நிலத்தோற்றம் (2) பௌதீக அச்சுகள்
(3) புறவெளி அமைப்பு (4) வடிவ வடிவமைப்பு
(5) மென் நிலத்தோற்றம்

**3.** புதிய ஆக்கமொன்றின் போது வடிவமைப்பாளரின் மனதில் உருவெடுக்கும் புதிய ஆக்கம் தொடர்பான கருத்து இனங்காணப்படுவது,
(1) பொருத்தப்பாடாகும். (2) எண்ணக்கருவாகும்.
(3) பெறுமானமாகும். (4) எண்ணக்கரு அணுகுமுறையாகும்.
(5) சூழலமைவு ஆகும்.


**4.** வர்ணச் சக்கரத்தில் **காணப்படாத** இரு வர்ணங்களும்,
(1) சாம்பல் மற்றும் வெள்ளை. (2) சாம்பல் மற்றும் ஊதா.
(3) சிவப்பு மற்றும் கபிலம். (4) வெள்ளை மற்றும் செம்மஞ்சள்.
(5) கறுப்பு மற்றும் பச்சை.

**5.** கீழ் காணப்படும் வாக்கியங்களில் தானியங்களில் காணப்படும் காபோவைதரேற்று வகை இரண்டும்,
(1) மோல்ற்றோசு மறறும் பெக்டின். (2) அமைலேசு மற்றும் அமைலோ பெக்டின்.
(3) அமைலேசு மற்றும் மோல்ற்றோசு. (4) பெக்டின் மற்றும் சுக்குரோசு.
(5) அமைலோ பெக்டின் மற்றும் சுக்குரோசு.

**6.** பயறு கலந்த பாற்சோறில் நிறைபுரதம் காணப்படுகிறது. அந் நிறைபுரதத்தில் காணப்படுகின்ற அத்தியாவசியமான அமினோ அமிலம் இரண்டும்,
(1) லைசின் மற்றும் திரிப்தொபென். (2) திரிப்தொபென் மற்றும் லியூசின்.
(3) லைசின் மற்றும் மெதியோனின். (4) லியூசின் மற்றும் வெலைன்.
(5) வெலைன் மற்றும் மெதியோனின்.

**7.** இலிப்பிட்டு உடலினுள் நிகழ்த்தும் பிரதான தொழிற்பாடு,
(1) மலச்சிக்கலை தடுக்கும். (2) நொதியங்களின் உற்பத்திக்கு.
(3) குருதியில் ஒரு பகுதியாக செயற்படல். (4) உள்ளுறுப்புக்களை பாதுகாத்தல்.
(5) நிர்ப்பீடனத்தொகுதியின் தொழிற்பாட்டுக்கு.

**8.** கீழே அமினோ அமிலமின் கட்டமைப்பு சூத்திரம் காணப்படுகின்றது.



இவ் அமினோஅமிலமானது,

(1) மெதியோனின். (2) கிளைசீன். (3) அனலின். (4) ஆர்ஜினீன். (5) திரிப்தொபென்.

**9.** மீன் எண்ணெய் தொடர்பான விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அதில் **பிழையான** விடயம்,

(1) விற்றமின் A யும் மற்றும் D யும் அடங்கியது.
(2) இதய நோயாளிகளுக்கு மிகவும் உகந்தது.
(3) ஒமேகா 3 கொழுப்பமிலம் அதிகளவில் காணப்படும்.
(4) உயர்ச்சக்தியை தரக்கூடியது.
(5) அறையில் வெப்பநிலைக்கு திண்மத் தன்மையாகும்.

**10.** உணவு உட்கொண்ட பின், குருதியில் நேரடியாக அகத்துறிஞ்சப்படுவதும், எஞ்சியவை சிறுநீருடன் வெளியேற்றப்படுவதுமான விற்றமின்,

(1) விற்றமின் A. (2) விற்றமின் C. (3) விற்றமின் D (4) விற்றமின் E. (5) விற்றமின் K.

**11.** கீழே தரப்பட்டுள்ள உணவுகளில் ஹீம் இரும்பு மட்டும் அடங்கியுள்ள உணவு,

(1) இறைச்சி, பால், பசளி கீரை (2) இறைச்சி, மீன், முட்டை
(3) மீன், பால், வல்லாரை கீரை. (4) முட்டை, பால், சிறகவரை.
(5) பசளி கீரை, பால், சாரனை கீரை.

**12.** புரதச் சமிபாட்டிற்கு இடை விளைபொருளான புரோட்டியோசு, பெப்டோன் ஆகியன டைபெப்டைட் ஆகவும் பின்பு அமினோ அமிலமாகவும் மாற்றும் நொதியங்கள் இரண்டும் முறையே,

(1) திரிப்சின் மற்றும் ரெனின். (2) பெப்சின் மற்றும் திரிப்சின்.
(3) பெப்சின் மற்றும் பெப்டிடெசு. (4) ரெனின் மற்றும் பெப்டிடேசு.
(5) திரிப்சின் மற்றும் பெப்டிடேசு.

**13.** பழங்களின் போஷணை பெறுமானம் தொடர்பாக மாணவர்கள் எழுதிய கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - குறைந்தளவு கலோரி பெறுமானங்களை உடலுக்கு வழங்குகின்றன.
B - ஒட்சி எதிரிகள் அடங்கியுள்ளன.
C - விற்றமின் B மற்றும் விற்றமின் D யை அதிகமாகக் கொண்டது.
D - மக்னீசியம் மற்றும் இரும்பையும் வழங்குகின்றது.
E - நார்த்தன்மை அதிகம் அடங்கியுள்ளது.

இவற்றுள் சரியான கூற்றுக்களாகக் கருதக்கூடியது.

(1) A, B , C (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**14.** மந்தபோஷணையில் காணக்கூடிய "தேய்வுநிலை" தொடர்பில் எதிர்பார்க்க **முடியாதது**,

(1) உயரத்திற்கேற்ற நிறை. (2) வயதுக்கேற்ற உயரம்.
(3) வயதுக்கேற்ற நிறை. (4) நிறைக்கேற்ற உயரம்.
(5) வயதுக்கேற்ற உயரம் மற்றும் நிறை.

**15.** 150 சென்ரிமீற்றர் உயரமும் 62 கிலோகிராமும் நிறையுமுடைய ஒருவரின் உடற்திணிவுச் சுட்டி,

(1) 18.5 (2) 20.5 (3) 22.5 (4) 27.5 (5) 30.5

**16.** உடலுக்கு கல்சியம் அதிகளவு அகத்துறிஞ்சலுக்கு ஏற்புடைய கீழ்வருவனவற்றுள் எது,

(1) பால் (2) முட்டை (3) மீன் (4) நெத்தலி (5) பசளி

**17.** பின்வருவனவற்றுள் ஆழமான எண்ணெயில் பொரித்தல் தொடர்பான **பிழையான** கூற்று எவ்வுணவை உட்கொள்வதன் மூலமாகும்?

(1) அதிகூடிய வெப்பத்தில் சமைத்தல்
(2) வெப்ப இடமாற்றுகையில் மேற்காவுகை முறை
(3) விற்றமின் சிறிதளவு அழிக்கக்கூடியதாதல்
(4) சமைக்கும் போது கபிலநிறத்துக்கு தோன்றுதல்
(5) சமைக்கும் போது நிரம்பாத கொழுப்பமிலம் பொருத்தமற்றது

**18. பின்வருவனவற்றுள் இல்லத் துணியணிகள்** உள்ளடங்கிய தொகுதி எது?

(1) துவட்டி, கைக்குட்டை, இரவு உடை.
(2) மேசைவிரிப்பு, கட்டில் விரிப்பு, கைத்துடைப்பம்.
(3) கைத்துடைப்பம், தலையணை, ஏப்பிரன்.
(4) இரவுஉடை, கையுறை, தலையணையுறை.
(5) தலையணையுறை, ஏப்பிரன், போர்வை.

**19.** துணி மேற்பரப்பில் அலங்கார முறைகளில் எதிர்ப்பு அச்சுப்பதித்தல் முறை என்பது,

(1) அச்சுப்பதித்தல் முறை மற்றும் பதிக்முறை.
(2) முடிச்சிடலும் திரை அச்சிடலும்.
(3) பதிக் முறையும், முடிச்சிடலும்.
(4) உருவரை தகட்டுமுறையும், அச்சுப்பதித்தல் முறை
(5) திரை அச்சிடலும், முடிச்சிடலும்.


**20.** மனிதனால் உற்பத்தி செய்யப்படும் நார்களில், மீளப்பிறப்பித்தல், செயற்கை நார்கள், விசேடமான நார்கள் ஆகியன முறையே.


(1) விசுகோசு, கேசீன், பொலிஎதலின்.
(2) பருத்தி, பிட்டு மற்றும் எஸ்பஸ்டோஸ் (கன்னார்)
(3) எரமிட், ரெயோன், பட்டு.
(4) பொலிபுரொபலின், கேசின் மற்றும் விசுகோசு.
(5) ரெயோன், பொலிபுரொபலின், எரமிட்.


**21.** நார்களை இனங்காண்பதற்கு எரிக்கும் போது, எக்லிக் நார்,


(1) எரியும் போது உருகும்.
(2) மந்தகதியில் எரிந்து கரி போன்ற சாம்பல் எஞ்சுதல்.
(3) உருகுவதில்லை.
(4) எரியாது, உருகும் மற்றும் சுருங்கும்.
(5) எரிதல், சாம்பல் திரலை போன்று.


**22.** பொலியஸ்டர் நாரின் குறுக்குவெட்டுத் தோற்றமும் நுனுக்குக் காட்டியின் தோற்றத்தையும் காட்டும் படம் யாது?


(1)


(2)


(3)


(4)


(5)

**23.** காரிக்கன் துணியினை முற்பரிகரிப்புச் செய்யும் முறையை ஒழுங்குமுறையில் குறிப்பிடுவது,

(1) வெளிற்றல், பசை நீக்கல், கழுவல் மற்றும் பொசுக்கல்.


(2) கழுவல், வெளிற்றல், பொசுக்கல் மற்றும் பசை நீக்கல்.

(3) வெளிற்றல், பொசுக்கல், கழுவல் மற்றும் பசை நீக்கல்.


(4) பொசுக்கல், பசைநீக்கல், கழுவல் மற்றும் வெளிற்றல்.

(5) பசைநீக்கல், வெளிற்றல், பொசுக்கல் மற்றும் கழுவல்.

**24.**



**A**



**B**

மேலே உள்ள **A** மற்றும் **B** படங்களில் நெசவு முறையினை ஒழுங்கு முறையில் குறிப்பிடுவது,

(1) சாதா நெசவு, பாவு நெசவு.

(2) ஊடைவிலா நெசவு, சாதா நெசவு.

(3) பாவு நெசவு, சரிவுக் கோட்டு நெசவு

(4) ஊடைவிலா நெசவு, பாவுவிலா நெசவு.

(5) பாவுவிலா நெசவு, சரிவுக் கோட்டு நெசவு.

**25.** நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி துணியிற்கு வெள்ளிப்பூச்சுப் பூசி நேர்த்தியாக்குவது,

(1) வெளிற்றல்.

(2) சுருங்காமற் செய்தல்.

(3) நீர்காப்பு நேர்த்தியாக்கல்.

(4) சௌகரிமாக்கற் பரிகரிப்பு.

(5) பற்றீரியா எதிர்ப்பு நேர்த்தி.

**26.** மனிதனோடு அடிப்படைத் தொடர்பாடலை கட்டியெழுப்புவதற்கான மிகப் பொருத்தமான தலைப்பை தெரிவு செய்க,

(1) அரசியல் (2) ஆன்மீகம் (3) அழகியற்கலைகள்

(4) கலாசாரம் (5) சுயவிபரம்

**27.** தொடர்பாடல் தொடர்பான மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்க,

(1) தொடர்பாடலின் பிரதான வகைகளாக வாய்மொழித் தெடர்பாடல், வாய்மொழியல்லாத தொடர்பாடல் என இரு வகைப்படும்.

(2) திருமணம் தொடர்பான விளம்பரங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதான வழிமுறைகள் பத்திரிகை மற்றும் சமூக வளையமைப்புகள்.

(3) விரல்களில் ‘V’ அடையாளத்தை காட்டக்கூடியது ˙ஒன்றிணைதல்˙ தொடர்பான கருத்தாகும்.

(4) உரையாடலை புரிந்து உடனே பதிலளிப்பது வாய்மொழி மூல தொர்பாடலில் ஒரு அனுகூலமாகும்.

(5) நவீன தொழிநுட்பம் மூலம் அனைத்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வது இலகுவாகும்.

**28.** வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமாக நடந்து கொள்ளுதல் தொடர்பான கீழ்வரும் கருத்துக்களை கவனத்திற் கொள்க.

A- பொருத்தமானவாறு நடந்து கொள்ளுதலின் மூலம் ஆளிடைத் தொடர்புகள் விருத்தியாகும்.

B- நவீன பாங்குகளுக்கு ஏற்ப நடந்து கொள்வதினால் மற்றவர்களின் வரவேற்புக் கிடைக்கும்.

C- சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமானவாறு நடந்து கொள்வதினால் ஆளுமை தொடர்பான நேர்மறையான மனப்பாங்குகளை உருவாக்கலாம்.

மேற்குறித்த கூற்றுகளில் சரியானது/சரியானவை.

(1) A மட்டும். (2) B மட்டும். (3) A, B மட்டும். (4) A , C மட்டும். (5) B, C மட்டும்.

**29.** கீழ்வருவனவற்றுள் நல் ஒழுக்க வெளிப்படைத்தன்மைகளில் சமூக ஒழுக்க கூட்டத்தில் உள்ளடக்கப்படுவன,
(1) கொடுக்கல் வாங்கலில் பெரியோர்களை மதித்தல்.
(2) நல்லொழுக்க ரீதியில் உரையாடல்களைக் கட்டியெழுப்புதல், குழந்தைகளுக்கு முதலுணவு பரிமாறல்.
(3) சத்தமின்றி சாப்பிடுதல் மற்றும் தகவல்களின் இரகசியம் பேணல்.
(4) கொடுக்கல் வாங்கலில் தகவல்களின் இரகசியம் பேணல்.
(5) பெரியோர்களை மதித்தல், நல்லொழுக்க வெளிப்படைத்தன்மை ரீதியில் உரையாடலைக் கட்டியெழுப்புதல்.

**30.** தயிரைத் தயாரிக்கும் போது உருவாகும் சேர்வை எது?
(1) குளுக்கோசு. (2)காபோடையொக்சைட். (3) இலக்டோஸ்.
(4) இலக்டிக் அமிலம். (5)எதைல் அற்ககோல்.

**31.** உடற்கொழுமையினால் அவதியுறுவோருக்கு பொருத்தமான உணவுக்கூட்டம்,
(1) சோறு, பருப்புக்கறி, கோழி இறைச்சிக்கறி, பொன்னாங்கன்னி சுண்டல், கரட் சம்பல்.
(2) சோறு, கிழங்குக்கறி, பொரித்த மீன், கத்தரிக்காய் மோஜு, பப்படம்.
(3) சோறு, பிஞ்சுபிலாக்காய்க்கறி, பொரித்த கருவாடு, பீட்றூட் கறி, வெள்ளரிக்காய்ச் சம்பல்.
(4) சோறு, பூசணிக்காய்கறி, சோயாமீட் கறி, போஞ்சி வதக்கல், தேங்காய்ச்சம்பல்.
(5) சோறு, வாழைக்காய்கறி, கறிமிளகாய், லீக்ஸ் கறி, வல்லாரைச்சம்பல்.

**32.** பின்வருவனவற்றுள் பொப் பேஸ்ட்ரி தயாரிக்கும் போது பின்வற்றும் செயல் முறை எது?
(1) மாவையும் கொழுப்பையும் கலந்து நீர், ஊற்றி நன்றாக பிசைய வேண்டும்.
(2) மாவையும் கொழுப்பையும் சேர்த்து பிசைந்த மாக்கலவையை குளிரூட்டியில் சிலவாரங்கள் வைத்து இறுதியாக மீண்டும் ஒருட்டி எடுத்தல்.
(3) மாவுக்கு நீர் சேர்ந்து பிசைந்த மாக்கலவையை கொழுப்பு சேர்த்து பிசைதல்.
(4) நீரைச் சூடாக்கி கொழுப்பை சேர்த்துபின் மாவை சேர்த்தல், இறுதியாக முட்டை சேர்த்தல்.
(5) மாவையும் கொழுப்பையும் கலத்தல், நீர் சேர்த்து பிசைந்த மாக்கலவையை குறுகிய நேரத்தில் வைத்து பொங்கிய பின் உருட்டவும்.

**33.** இலங்கையில் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய வகையில் யுனெஸ்கோ (UNESCO) மரபு உரிமை எண்ணிக்கை,
(1) 6. (2) 7. (3) 8. (4) 9. (5) 10.

**34.** பயணம் செய்வதன் மூலம் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள்,
(1) சுற்றுலா வழிகாட்டிகளும், சுற்றுலா பயணிகளும் சுயஅபிப்பிராயத்தை வளர்த்துக் கொள்ளுதல்.
(2) நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி மூலம் அரசாங்கத்திற்கு இலாபத்தை ஈட்ட முடியுமாக இருத்தல்.
(3) உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் செலவுகள் அதிகரித்தல்.
(4) சுற்றுலா பயணிகளினால் உள்நாட்டுக்கு அதிக ஆதாயத்தை ஈட்டல்.
(5) நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி மூலம் வேலைவாய்ப்பு அதிகரித்தல்.

**35.** "ரூ தெஸ் பயணிகள்" என்பதால் இனங்காணப்படுவது,
(1) சுத்தமான / புனித யாத்திரைக்காக பக்தியோடு செல்லல்.
(2) புதுமையான இடங்களை கண்டுகழிப்பதற்காக பயணிகள் செல்லல்.
(3) நீர்வீழ்ச்சிகள் மற்றும் வனவிலங்குகளை பார்வையிட்டு படம் பிடிப்பதற்காக பயணிகள் செல்லல்.
(4) சுற்றாடலை தூய்மைப்படுத்தி சுத்தப்படுத்துவதற்காக பயணிகள் செல்லல்.
(5) வைத்திய ஆலோசனைகளை பெறுவதற்காக பயணங்களை மேற்கொள்ளல்.

**36.** கீழ்வரும் இடங்களில் பயணிகளின் மனங்கவர்ந்த இலங்கையிலுள்ள மனிதனால் உருவாக்கப்படாத பிரசித்திபெற்ற இடம்,
(1) சிங்கராஜ வனக்காடு. (2) ஹூம்மானய. (3) வெண்ணீரூற்று.
(4) சுண்ணாம்பு கற்குகை. (5)காலிக் கோட்டை.

**37.** வீட்டு மின் உபகரணங்களின் பயன்பாட்டு சம்பந்தமான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - இழை மின்குமிழை விட வெளிச்சத்துக்காக ஒளிகாலும் இருவாயி (LED) மின்குமிழை பாவித்தல்.

B - நீரை சூடாக்கும் போது நேரடியாக கடத்தல் முறைக்கு பதில் மேற்காவுகை முறையை பயன்படுத்தல்.

C - பாவு மின்விசிறிக்கு பதிலாக மேசை மின்விசிறியை பயன்படுத்தல்.

மேற்கூறப்பட்டுள்ளவற்றுள் வீட்டு உபயோகத்திற்கு மிகவும் உகந்தது,

(1) A மட்டும். (2)B மட்டும். (3) C மட்டும்.
(4) A, C மட்டும். (5)B, C மட்டும்.

**38.** வீட்டு நீர் பாவனை தொடர்பான மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்க.

(1) குடிநீரில் காணப்பட வேண்டிய pH பெறுமானம் 3.5-5.5 இடைப்பட்டதாகும்.
(2) மழைநீரில் துணி துவைக்கும் போது சலவைத்தூள் கூடுதலாக தேவைப்படும்.
(3) சமையலறையை சுத்தம் செய்யும் போது பயன்படுத்தும் நீரில் பற்றீரியா அதிகமாக காணப்படும்.
(4) நோயை ஏற்படுத்தக்கூடிய நுண்ணங்கிகள் நீரில் அடங்கியுள்ளதா என்பதை அறிய ஈ-கொலஸ் பற்றீரியா எண்ணிக்கையினால் கணிக்கப்படும்.
(5) வீட்டிற்கு நீர் வழங்கும் முறைமையில், நீர்தாங்கியிற்கு நீர் வழங்கும் குழாய் கீழாகவும் நீரை நீர் தாங்கியிலிருந்து வெளியிடும் குழாய் மேலாகவும் இருக்கும்.

**39.** கீழ் தரப்பட்டுள்ள உபகரணங்களில் வீட்டுப் பாவனைக்கு கூடிய மின் சக்தியை பெற்றுக்கொள்ளும் உபகரணம்,

(1) இழைமின்குமிழ். (2) புளோரோ ஒளிர்வு மின்குமிழ் (CFL)
(3) அரைக்கும் கருவி. (4) தொலைக்காட்சி.
(5) மின்னழுத்தி.

**40.** மின்சார சபையில் வீட்டிற்கு வழங்கப்படும் மின் முதலில் பயணம் செய்வது பின்வருவனவற்றுள் எச்துணைச்சாதனத்தின் ஊடாக,

(1) மின் மானி (Electric meter)
(2) எச்ச ஓட்டச் சுற்றுடைப்பான் (Residual currrent circuit braker)
(3) நுண் சுற்றுடைப்பான் (Miniature circuit braker)
(4) மிகை சுமத்துச் சுற்றுடைப்பான் ( Overload circuit braker)
(5) தலைமை ஆளி (Main switch)

**41.** கீழுள்ள இயற்கை வளங்களில் மீளப்புதுப்பிக்க **முடியாத** வளம் எது?

(1) சூரிய ஒளி. (2) உயிர்த் திணிவுகள். (3) காற்று.
(4) நீர். (5) உயிர்ச்சுவட்டு எரிபொருள்கள்.

**42.** கீழே தரப்பட்டுள்ள உணவுகளின் குறைந்தளவு பாதச் சுவடு (Food Foot Print) கொண்ட உணவு,

(1) மரக்கறி. (2) சொசெஜஸ். (3) கோழியிறைச்சி.
(4) பட்டர். (5) பேகன்.

**43.** கீழே காணப்படுகின்ற தானியங்களில் பரம்பரையலகுத் தொழிநுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட தானிய வகை எது?

(1) பச்சபெருமாள். (2) சுவந்தெல் (3) ரன் சஹல்.
(4) களு ஹுனட். (5) குருளு துட.

**44.** "சேதன விவசாயம்" தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

**A** - தேவையான நேரங்களில் உயிர் கொல்லிகள் பயன்படுத்தல்.

**B** - சுற்றுச்சூழலில் உயிர் கொல்லிகள் பாதிப்படைதல்.

**C** - நீண்ட காலமாக நன்றாக அறுவடை செய்ய முடியும்.

இதில் சரியான கூற்று/கூற்றுக்கள் எது?

(1) A மட்டும். (2) B மட்டும். (3) C மட்டும்.
(4) A, B மட்டும். (5) A, C மட்டும்.

**45.** ஒருவர் உள அமைதியின்மை காரணமாக வெளிக்காட்டும் உடல் அறிகுறி **அல்லாதது** எது?

(1) உண்டி விருப்பமின்மை. (2) தலைவலி. (3) கோபம்.
(4) நடுக்கம். (5) தூக்கமின்மை.

**46.** 'ஹேர்லொக்' குறிப்பிடுவதற்கு அமைய கட்டிளமைப்பருவத்தின் நிலைமாறு பருவம் என அறிமுகம் செய்யும் வயதெல்லை,

(1) 10 - 12 வயது (2) 11 - 13 வயது (3) 15 - 16 வயது
(4) 16 - 18 வயது (5) 18 - 20 வயது

**47.** கட்டிளமைப்பருவத்தினரின் வளர்ச்சி தொடர்பான மிகச் சரியான கூற்று எது?

(1) மனவெழுச்சியை முழுமையாக கட்டுப்படுத்திக் கொள்ளும் தன்மை.
(2) முன்பிள்ளைப்பருவத்தில் ஆண்பிள்ளைகளை விட பெண் பிள்ளைகள் விரைவாக வளர்ச்சி.
(3) தர்க்கரீதியான சிந்தித்து விவாதிக்க விரும்புவர்.
(4) எப்போதும் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிப்பர்.
(5) பழமைவாத சிந்தனையை பின்பற்றுவர்.

**48.** ஒருவருடைய தனிப்பட்ட ஆளுமை தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளது,

A - ஆளுமையினால் ஒருவரை அடையாளப்படுத்த முடியும்.
B - ஆளுமை விருத்தியில் நேர்மை வெளிப்படுத்த முடியும்.
C - மனிதனுக்கு மனிதன் தனித்துவம் வேறுபடும்.
D - சிறந்த ஆளுமையுடையவர்கள் சமுதாயத்தில் நடுநிலைமையை பேணுவர்.
E - தனிப்பட்ட வெளிப்படுத்தல் உடல் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

இவற்றுள் சரியான கூற்று/கூற்றுக்கள்,

(1) A,B,C. (2) A,C,D. (3) A,C,E. (4) B,C,D. (5) C,D,E.

**49.** முயற்சியாண்மை தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - முயற்சியாண்மை விருத்தி நாட்டிற்கு சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் என்பவற்றை தீர்மானிக்கும்.
. B - எதிர்கால முடிவுகளுக்கு முயற்சியாண்மை உதவியாக இருக்கும்.
C - முயற்சியாண்மை மனிதனின் பிறப்பிலிருந்தே உருவாகக்கூடிய இலட்சணங்களாகும்.

இவற்றுள் சரியான கூற்று/கூற்றுக்கள்,

(1) A. (2) B. (3) A மற்றும் B.
(4) A மற்றும் C. (5) B மற்றும் C.

**50.** வணிகமொன்றை திட்டமிடுவதற்கான சில படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான ஒழுங்கு முறையை கூறும் விடை யாது?

(1) முதல் திட்டமிடல், விற்பனையைத் திட்டமிடல், உற்பத்தியை திட்டமிடல், நிர்வாகம் தொடர்பாக திட்டமிடல்.
(2) உற்பத்தியை திட்டமிடல், விற்பனைத் திட்டமிடல், மனித வளத் திட்டமிடல், முதல் திட்டமிடல்.
(3) முதல் திட்டமிடல், உற்பத்தியை திட்டமிடல், மனித வளத் திட்டமிடல், விற்பனைத் திட்டமிடல்.
(4) முதல் திட்டமிடல், விற்பனை திட்டமிடல், உற்பத்தி திட்டமிடல், மனித வளத் திட்டமிடல்.
(5) விற்பனைத் திட்டமிடல், முதல் திட்டமிடல், மனித வளத் திட்டமிடல், உற்பத்தியைத் திட்டமிடல்.

* * *

# (28) மனைப் பொருளியல்
## பகுதி II

**கவனிக்க வேண்டியவை :**

★ முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

**1)** (i) "உட்புற வெளியமைப்பு" என்றால் என்ன?

(ii) சில வீடுகளில் மின் உபகரணங்களுக்கு இரு ஊசி செருகிகளும் சில மின் உபகரணங்களுக்கு மூவூசு செருகிகளும் பயன்படுத்துவதன் காரணம் யாது?

(iii) 'குறை போசணை' என்றால் என்ன?

(iv) விற்றமின் A குறைபாட்டினை வெளிக்காட்டும் நோய் அறிகுறிகள் 2 ஐ குறிப்பிடுக.

(v) தைக்கப்பட்ட ஆடை கைத்தொழிற்சாலையில் உபயோகிக்கப்படும் வெட்டு உபகரணங்கள் **இரண்டின்** பெயரை குறிப்பிடுக.

(vi) நார்களின் இயல்புகளுக்கேற்ப நீர் குறைவாக உறிஞ்சும் நார் வகைகள் **இரண்டையும்** நீர் கூடுதலாக உறிஞ்சும் நார் வகைகள் **இரண்டினையும்** குறிப்பிடுக.

(vii) பயணம் செய்தல் என்றால் என்ன?

(viii) கழிவு முகாமைத்துவத்தில் உபயோகிக்கப்படும் 3R முறையை தெளிவுபடுத்துக.

(ix) தகவலொன்றை சிறப்பாக தொடர்பாடல் (பரிமாற்றம்) செய்யும் முக்கியமான இரு படிமுறைகளை குறிப்பிடுக.

(x) பிள்ளைகளிடையே சுய எண்ணக்கருவை கட்டியெழுப்புவதற்காக செயற்படுத்தும் செயற்பாடுகள் **இரண்டினை** குறிப்பிடுக.

(2x10 புள்ளி)

(மொத்த புள்ளிகள் 20)

**2)** (i) கட்டிடம் மற்றும் மனிதனால் கட்டப்பட்ட சூழல் வடிவமைப்பின் போது பயன்படுத்தப்படும் பயன்பாட்டு காரணிகள் **மூன்றின்** பெயரை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) மனை அல்லது காரியாலப் பிரதேசத்தினுள் சக்தி பரிமாற்றத்தை குறைப்பதற்கு உபயோகிக்கப்படும் **மூன்றின்** உபாயங்களை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மனையின் நீர் பாதுகாப்பிற்காக உபயோகிக்கப்படும் சிறந்த நற்பழக்கங்கள் **ஐந்தை** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) வீட்டின் மின் உபகரணங்களை பாதுகாப்பாக உபயோகிப்பதற்கு நடைமுறைப் படுத்தக்கூடிய செயற்பாடுகள் **ஐந்து** தருக.

(05 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 16)

**3)** (i) புரதத்தின் "உயிரியற் பெறுமானம்" எனக் கருதப்படுவது யாது? (03 புள்ளிகள்)

(ii) மனையியற் கூடத்தில் உங்களுக்கு சிறிதளவு குளுக்கோசு மாதிரியும் பால் மாதிரியும் தரப்படுகின்றது. இதில் அடங்கும் குளுக்கோசையும் புரதத்தினையும் இனங்காண மேற்கொள்ளும் இரசாயனப் பரிசோதனைகள் ஒவ்வொன்று விபரிக்க. (04 புள்ளிகள்)

(iii) சாதாரண வயது வந்த ஒரு பெண்ணுக்கும் கர்ப்பிணிப் பெண்ணுக்கும் இடையிலான போசணைத் தேவைகள் நான்கினை ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) குழந்தைக்கு ஒரு வயது பூரணமாகும் போது குடும்பத்தினுள் சாதாரண உணவு வேளையை அறிமுகப்படுத்துவது முக்கியமாகும். இதனை செயற்படுத்தும் முறையினை விவரிக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 16)

4) (i) 'உணவு நொதித்தல்' ஐ விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) பாலினை திரளச் வெய்வதற்காக பயன்படுத்தப்படும் பற்றீரியாவைப் பெயரிடுக. அப்பற்றீரியா மூலம் தயிர் உற்பத்தி செய்யும் முறையை பாய்ச்சற் கோட்டுப் படத்தில் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஜாம் தயார் செய்வதற்குரிய உணவு நற்காப்பு உபாயங்களையும் அதற்குரிய கொள்கைகளையும் விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) சிறு கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக ஜாம் உற்பத்தி செய்ய நீர் கருதினால் இதனை சந்தைப்படுத்தலுக்கு முயற்சியாளர்கள் சந்தையை வெற்றி கொள்ள செயற்படுத்தும் திட்டங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 16)

5) (i) தைக்கப்பட்ட ஆடைத் தொழில் உற்பத்திக்கு வணிகக் கைத்தொழில் முறை **மூன்றைக்** ஐ குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) தைக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலையொன்றில் நடைபெறும் உற்பத்தி செயன்முறையின் வேறுபட்ட படிமுறைகள் **ஆறைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) குறும் பாவாடையின் மாதிரியுருவை நிர்மாணிப்பதற்கு தேவையான அளவீடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

இடையின் சுற்றளவு செ.மீ. 93
இடை முதல் இடுப்பு வரை செ.மீ. 21.5
பாவாடையின் உயரம் செ.மீ. 55

மேலே வழங்கப்பட்டுள்ள அளவீடுகளைப் பயன்படுத்தி நிர்மாணிப்பதற்குத் தேவையான சட்டகத்தை தயாரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) குறும்பாவாடையை தைக்கும் படிமுறையினை தொடரொழுங்கில் தருக. (05 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 16)

6) (i) "பச்சைவீட்டு விளைவுகள்" என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பச்சை வீட்டு விளைவுகளை துரிதப்படுத்தக் காரணமாக அமையும் மனித செயற்பாடுகள் எவை? (04 புள்ளிகள்)

(iii) சுற்றுலாத்துறை சுற்றாடலுக்கு ஏற்படுத்தும் பாதக விளைவுகளை விபரிக்குக. (04 புள்ளிகள்)

iv) பச்சைவீட்டு நுகர்வோன், சூழலுக்கு ஏற்படும் ஆபத்தைக் குறைக்கும் முகமாக செயற்படுபவர். பச்சைவீட்டு நுகர்வோரில் காணக்கூடிய இயல்புகள் மூன்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 16)

7) (i) கட்டிளமைப்பருவ பிள்ளைகள் முகம் கொடுக்கும் கல்வி, தொழில் சார்ந்த பிரச்சினைகள் **இவ்விரண்டை** உதாரணங்களுடன் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கட்டிளமைப்பருவ பிள்ளைகள் முகம் கொடுக்கும் பிரச்சினைக்கான சிறந்த தீர்வினை பெற்றுக் கொடுக்க தனிமனித தொடர்பு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) கட்டிளமைப்பருவத்தினரின் சிறந்த ஆளுமை விருத்திக்காக மனவெழுச்சி சமநிலை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 16)

8) கீழ் தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் **நான்கிற்கு** மட்டும் சிறுகுறிப்பு எழுதுக.

(i) புறவெளி நிர்மாணிப்பின் போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்.
(ii) நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கான உணவு வேளையைத் திட்டமிடுக.
(iii) செயற்கை நார் உற்பத்தியில் உருக்கி நுற்றல்.
(iv) சுற்றுலாத் துறையில் நடைபெறும் அன்றாட வளர்ச்சி.
(v) ஆளுமை விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் சூழற் காரணிகள்.

(04 புள்ளிகள் வீதம்
மொத்தப் புள்ளிகள் 16)

* * *

## (28) மனைப் பொருளியல்
## செய்முறைப் பரீட்சை

இப்பரீட்சை **A, B** என இரண்டு பகுதிகளைக் கொண்டிருப்பதோடு 12, 13 தரங்களிற்கு பொருத்தமான செய்முறைச் செயற்பாடுகளினூடாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

### பகுதி A - நிலையச் சோதனை

நிலையத் தயாரிப்புகள் 15 இனை உள்ளடக்கிய நிலையச் சோதனையாகும். நிலையச் சோதனைக்காக உத்தேசிக்கப்பட்ட மாதிரியை / மாதிரிகளை 15 நிலையங்களில் திட்டமிட்டப்படி ஒழுங்கு முறையாக வைத்து அந்த 15 நிலையங்கள் தொடர்பான 15 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு நிலைய வினாவிற்கு இரண்டு நிமிடங்கள் வீதம் 30 நிமிடங்கள் வழங்கப்படும். நிலைய வினாவொன்றுக்கு **நான்கு** புள்ளிகள் வீதம் பகுதி **A** இற்கு 60 புள்ளிகள் உரித்தாகும்.

- **வழங்கப்பட்டுள்ள நிலைய மாதிரி/ மாதிரிகளின் துணையுடன் பின்வரும் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளின் மீது விடையளிக்குக.**

**நிலையம் 1**

(i) உயரமான, கௌரவமான உணர்வு ஏற்படுகின்ற வகையில் இப்பட்டிகள் அமையக்கூடிய முறையினை ஒரு வரிப்படம் மூலம் காட்டுக.

(04 புள்ளிகள்)

**நிலையம் 2**

(a) தரப்பட்டுள்ள மாதிரிகளில் குளியலறையில் தளம் அமைப்பதற்கு பொருத்தமான மாதிரியின் எழுத்தினை எழுதுக.

........................................................................................................................................ (02 புள்ளிகள்)

(b) அவ்வாறு தெரிவு செய்தமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.

........................................................................................................................................ (02 புள்ளிகள்)

**நிலையம் 3**

(a) A, B, C மாதிரிகளைப் பெயரிடுக.

A ................................ B ................................... C ...................................... (02 புள்ளிகள்)

(b) வாசனைச் சரக்குத்தூள் கலவையினைத் தயாரிப்பதற்காக இதற்கு மேலதிகமாக சேர்க்கக் கூடிய பொருட்கள் **இரண்டினை** எழுதுக.

(i) ........................................................ (ii) ...................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 4**

(a) சமைக்கப்பட்ட உணவு மாதிரியை இனங்கண்டு பெயரிடுக.

........................................................................................................................................ (02 புள்ளிகள்)

(b) சமைக்கும்போது இவ்வுணவில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றங்கள் **இரண்டினை** எழுதுக.

(i) ........................................................ (ii) ...................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 5**

(a) இவ்வுணவின் மேற்பரப்பின் மினுங்கும் தன்மைக்கும் பொன் நிறத்திற்கும் காரணமான செயற்பாடு எப்பெயரால் இனங்காணப்படும்?

.................................................................................................................................... (02 புள்ளிகள்)

(b) இத்தன்மையை ஏற்படுத்துவதற்கு தயாரிப்பின்போது தடவப்பட்ட பொருள் யாது?

.................................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 6**

(a) தரப்பட்டுள்ள A, B, C, D ஆகிய மாதிரிகள், துணி உற்பத்திற்கேற்ப உரித்தாகும் இரண்டு கூட்டங்களைப் பெயரிடுக.

(i) ........................................................ (ii) ...................................................... (02 புள்ளிகள்)

(b) A, B, C, D துணி மாதிரிகளை மேற்குறிப்பிட்ட இரு கூட்டங்களிற்கு வகைப்படுத்துக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................ (02 புள்ளிகள்)

**நிலையம் 7**

(a) மாதிரியில் குறிப்பிட்ட நெசவு யாது?

.................................................................................................................................... (02 புள்ளிகள்)

(b) இந் நெசவில் நெய்யப்பட்ட துணியினை இனங்காணக்கூடிய விஷேட பண்பு யாது?

.................................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 8**

(a) துணி மாதிரிகளில் அப்பிளிக் முறைக்கு மிகவும் பொருத்தமான துணி வகையின் பெயரையும் எழுத்தையும் எழுதுக.

.................................................................................................................................... (02 புள்ளிகள்)

(b) துணி மாதிரிகளில் செயற்கை நார்களினால் உற்பத்தி செய்யப்படும் துணி வகையின் பெயரையும் எழுத்தையும் எழுதுக.

.................................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 9**

(a) இத்துணித் துண்டில் சங்கிலித் தையல் மூன்று தைத்து முடிக்கவும்.

**நிலையம் 10**

(a) மாதிரியில் பயன்படுத்தப்பட்டுள்ள அலங்காரத்தை மேற்கொள்ளும் முறை யாது?

.................................................................................................................................... (02 புள்ளிகள்)

(b) இம்முறையின் பிரதான படிமுறைகள் **இரண்டை** எழுதுக.

(i) ........................................................ (ii) ...................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 11**

(a) A, B ஆகியவற்றைப் பெயரிடுக.

A ......................................................... B ..................................................... (02 புள்ளிகள்)

(b) B இன் தொழிற்பாட்டை எழுதுக.

......................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 12**

(a) A, B என்பவற்றின் மூலம் காட்டப்படுகின்ற பகுதிகளைப் பெயரிடுக.

A ......................................................... B ..................................................... (02 புள்ளிகள்)

(b) B யின் மூலம் செயற்படுத்தப்படும் பிரதான செயற்பாடு யாது?

......................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 13**

(a) தரப்பட்டுள்ள மாதிரியினைப் பெயரிடுக.

......................................................................................................................... (02 புள்ளிகள்)

(b) அதன் ஒரு மூலிகைப் பெறுமதியைக் குறிப்பிடுக.

......................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 14**

(a) தரப்பட்டுள்ள மாதிரிகளை இனங்கண்டு பெயரிடுக.

A ......................................................... B ..................................................... (02 புள்ளிகள்)

(b) A , B ஆகியவற்றிலுள்ள போசணை முக்கியத்துவத்தை வெவ்வேறாக குறிப்பிடுக.

A .........................................................................................................................

B ......................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையம் 15**

(a) மாதிரியில் காட்டப்படுவது உணவுகளில் அடங்கியுள்ள போசணைப் பதார்த்தமொன்றை இனங்காண்பதற்காகச் செய்யப்படும் ஒரு சோதனையின் பெறுபேறாகும். இச்சோதனை மூலம் இனங்காணக் கூடிய போசணைப் பதார்த்தம் யாது?

......................................................................................................................... (02 புள்ளிகள்)

(b) சோதனைக்காகப் பயன்படுத்தப்பட்ட சோதனைப் பொருளைப் பெயரிடுக.

......................................................................................................................... (02 புள்ளிகள்)

**நிலையப் பரீட்சைக்கான உத்தேச மாதிரிகள்**

1. நீளம் 8 அங்குலமும் அகலம் 1 அங்குலமும் உடைய 6 கறுப்பு நிறப்பட்டிகளை வழங்குக.
2. அலங்காரம் வெட்டப்பட்ட ரையில் (Tile), மெருகிடப்படாத ரையில், மினுங்கும் ரையில் ஆகியவற்றை முறையே **A, B, C** எனப் பெயரிட்டு வைக்க.
3. கொத்தமல்லி, சீரகம், சோம்பு (பெருஞ்சீரகம்) ஆகியவற்றை முறையே A, B, C எனப் பெயரிட்டு வைக்க.
4. சமைக்கப்பட்ட சவ்வரிசி மாதிரியை வழங்குக.
5. நன்றாக பொன் நிறமான மாலுபான் (மீன் பனிஸ்) ஒன்றை வைக்க.
6. ஒன்றுக்கொன்று வித்தியாசமாக நெசவு செய்த துணி மாதிரிகள் இரண்டையும் பின்னப்பட்ட துணி மாதிரிகள் இரண்டையும் A, B, C, D எனப் பெயரிட்டு வைக்க.
7. சரிவுக்கோட்டு நெசவுடை துணி மாதிரி, எளிய நுணுக்குக் காட்டி கைவில்லை ஆகியவற்றை வழங்குக.
8. பொப்லின், நைலோன், ரெயோன் வொயில் துணி மாதிரிகளை முறையே A, B, C, D எனப் பெயரிட்டு வைக்க.
9. ஊசி, நூல், துணித்துண்டு, கத்தரிக்கோல் ஆகியவற்றை வைக்க.
10. முடிச்சிட்டு சாயமிடல் மூலம் அலங்கரித்த கைக்குட்டையொன்றை வைக்க.
11. குதை (plain Socket), குறைக்கும் குதை (Reducing Socket) ஆகியவற்றை முறையே A, B என பெயரிட்டு வைக்க.
12. நுண்சுற்றுடைப்பான், எச்ச ஓட்டச் சுற்றுடைப்பான் ஆகியவற்றை A, B எனப் பெயரிட்டு வைக்க.
13. கற்றாளைத் தண்டு ஒன்றை வைக்க.
14. சிவப்பு பச்சை அரிசி, அவித்த (புழுங்கல் அரிசி) நாட்டரிசி ஆகியவற்றை முறையே A, B எனப் பெயரிட்டு வைக்க.
15. சிறிதளவு தேங்காய் எண்ணையை பரிசோதனைக் குழாயில் சேர்த்து அதனுள் சூடான் III கரைசலை இட்டு நன்றாகக் குலுக்கி வைக்க.

## பகுதி B : உணவும் போசணையும்

இப்பகுதி செய்முறைச் செயற்பாடுகள் **இரண்டினைக்** கொண்டிருக்கும். இதற்கான **நேரம் இரண்டு மணித்தியாலங்களும் 30 நிமிடங்களுமாகும்.** இச்செயற்பாட்டுகள் இரண்டிற்கும் 140 புள்ளிகள் வழங்கப்படும்.

இப்பகுதியில் I, II ஆகிய தொகுதிகளிலிருந்து ஒன்று வீதம் இரு செய்முறைச் செயற்பாடுகளை எழுமாறாகத் தெரிவு செய்தல் வேண்டும். தெரிவு செய்த இரு செய்முறைச் செயற்பாடுகளிலுமுள்ள இரு உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒருவருக்குப் போதுமானளவு தயாரித்து பொருத்தமான முறையில் பரிமாறல், இடத்தை மீளவொழுங்கமைத்தல் ஆகியவற்றைச் செய்தல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

* இரு உணவு வகைகளுக்கும்

- தேவையான பொருட்களைத் தெரிவு செய்தல் — 10 புள்ளிகள்
- உபகரணங்களைத் தெரிவு செய்தல் — 10 புள்ளிகள்

* தொகுதி I இற்குரிய உணவு வகையைத் தயாரித்தல்

- சரியான தயாரிப்பு நுட்ப முறைகளைச் சரியாகப் பின்பற்றல் / சமையல் — 40 புள்ளிகள்
- சுவையும் இழையவமைப்பும் — 20 புள்ளிகள்

* தொகுதி II இற்குரிய உணவு வகையைத் தயாரித்தல்

- சரியான தயாரிப்பு நுட்ப முறைகளைச் சரியாகப் பின்பற்றல் / சமையல் — 20 புள்ளிகள்
- சுவையும் இழையவமைப்பும் — 20 புள்ளிகள்

* இரு உணவு வகைகளுக்கும்

- பரிமாறல் — 10 புள்ளிகள்
- இடத்தை மீளவொழுங்கமைத்தல் — 10 புள்ளிகள்

பகுதி B இற்கான மொத்தப் புள்ளிகள் 140

தொகுதி I, II ஆகியவற்றுக்கான உணவு வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| தொகுதி I | தொகுதி II |
|---|---|
| ஒரு விஷேட வகை சோறு | ஒரு ரொட்டி வகை |
| ஒரு பாற்சோறு வகை | ஒரு சம்பல் வகை |
| பொங்கற்சோறு | முட்டை சமையல் |
| தோசை | கீரை சுண்டல் (வறை) |
| இடியப்பம் | சலாது வகை |
| சுவையூண் (சேவரி) பிட்டு | மயோனிஸ் சலாது கூட்டு |
| உப்பு மா | பழச் சலாது |
| ஒரு பேஸ்ரி வகை | சூப் வகை |
| திண்ம குழையல் மாவினால் தயாரிக்கப்படும் ஓர் உணவு | ரயிதா |
| திரவ குழையல் மாவினால் தயாரிக்கப்படும் ஓர் உணவு | இலைக்கஞ்சி வகை |
| சன்விச் வகை | பழ மெல்லவியல் |
| கட்லட் | பழப்பானம் |
| (இறால்/ மீன்/ இறைச்சி) கறி | சூடான பான வகை |
| ஒரு ஸ்ரு வகை (மெல்லவியல்) | ஜெலி |
| ஒரு மோஜு வகை | ஐஸ் கோப்பி |
| ஓர் அச்சாறு வகை | மில்க் சேக் |
| ஒரு சட்னி வகை | பலூடா |
| சொப்சி | லசி |
| லட்டு | |
| கேசரி | |
| முறுக்கு | |
| ஒரு கேக் வகை | |
| ஒரு தேசிய இனிப்புவகை | |
| ஒரு ரொபி வகை | |
| ஒரு புடிங் வகை | |
| ஒரு ஜேம் வகை | |

குறிப்பு

* சோறு வகை - நாசிகுரா, பிரைட் ரையிஸ், மஞ்சள் சோறு

* ரொட்டி வகை - மரக்கறி ரொட்டி, முட்டை ரொட்டி

போன்ற உணவு வகைகள் கொடுக்கப்படும்.

* * *

# (29) தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

## வினாத்தாள்களின் கட்டமைப்பு

**வினாத்தாள் I** - **நேரம் : இரண்டு மணித்தியாலங்கள்.**
ஐந்து தெரிவுகளைக் கொண்ட **50** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு **01** புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் **50** ஆகும்.

**வினாத்தாள் II** - **நேரம் : மூன்று மணித்தியாலங்கள்.** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)
**ஏழு அமைப்புக் கட்டுரை வகை** வினாக்களைக் கொண்டது.
அவற்றுள் எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுதல் வேண்டும்.
ஒரு வினாவுக்கு **20** புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் **100**.

**வினாத்தாள் II** இற்கு மொத்தப் புள்ளிகள் **100** ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| இறுதிப் புள்ளியைக் கணித்தல் : | வினாத்தாள் I | | = 50 |
| | வினாத்தாள் II | = 100 ÷ 2 | = 50 |
| | இறுதிப் புள்ளி | | = 100 |

குறிப்பு :

இப்பாடத்தின் புதிய பாடத்திட்டமானது, பாடசாலை முறைமையில் 2018 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதோடு 2019 ஆம் ஆண்டின் வினாத்தாள் மேற்குறித்த வினாத்தாள் கட்டமைப்புக்கு ஏற்ப தயாரிக்கப்படும். புதிய பாடத்திட்டத்திற்காக தயாரிக்கப்படும் வினாத்தாள் கட்டமைப்புக்கு ஏற்ப வினாக்கள் தயாரிக்கப்படுவது 2020 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறும் பரீட்சைகளுக்காகவாகும்.

இணைப்பு **01**

சுற்றுநிருப இலக்கம் **2016/13**

# க.பொ.த. (உயர்தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானம்

கல்வி அமைச்சு

"இசுறுபாய", பத்தரமுல்லை

சுற்றறிக்கை இலக்கம் : 2016/13

எனது இலக்கம்:- ஈடீ/01/12/02/06/02–(I)
பாடசாலை செயற்பாடுகள் கிளை,
கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பத்தரமுல்லை,
2016.04.26.

மாகாண பிரதம செயலாளர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கல்விக் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்.

## க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும்

க.பொ.த. (உயர் தர) பாடச் சேர்மானங்களும் பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பான பாடச் சேர்மானங்களும் எனும் தலைப்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2009.05.18 ஆந் திகதிய 2009/16 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2010.04.21ஆந் திகதிய 2009/16 (I) சுற்றறிக்கையின் திருத்தமும் இதற்கு ஏற்புடையதாகும் வகையில் வெளியிடப்பட்டுள்ள 2013.06.11ஆந் திகதிய சுற்றறிக்கைக் கடிதத்தினதும் சகல ஏற்புடைமைகளையும் விஞ்சியதாக 2016 இலும் அதன் பின்பும் 12 ஆம் தரத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு இச்சுற்று நிருப அறிவுறுத்தல்கள் அமுலில் இருக்கும்.

**2.0** க.பொ.த. (சாதாரண தரம்) சித்தியெய்தும் மாணவர்கள் க.பொ.த. (உயர் தர) வகுப்பில் தாம் பயில்வதற்கு எதிர்பார்க்கும் பாடத்துறையைத் தெரிவு செய்கையில், பாடங்கள் மற்றும் பாடச்சேர்மானங்கள் தொடர்பில் காணப்படும் சரியான தெளிவின்மை காரணமாக, சிக்கலான ஒரு நிலைமைக்கு முகம் கொடுக்கின்றார்கள். மேலும், பல்கலைக்கழகங்களில் தற்போது நடைமுறையில் உள்ள இளமாணிப் பட்டக் கற்கைநெறிகளுக்குத் தேவையான பாடச்சேர்மானங்கள் குறித்து மாணவர்களிடையே காணப்படும் தெளிவின்மை காரணமாகவும் பல்கலைக்கழக அனுமதியின்போது பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். எனவே, இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவும் மாணவர்களுக்கான ஒரு வழிகாட்டியாகவும் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது. ஆகவே, இந்த சுற்றிக்கையில் குறிப்பிடப்படும் க.பொ.த. (உயர் தர) பாடச்சேர்மானங்களும் பல்கலைக்கழக இளமாணிப் பட்டக் கற்கைநெறிக்கான பாடச்சேர்மானங்களும் குறித்து 12ஆம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் சகல மாணவர்களையும் அறிவுறுத்துவது அதிபர்களின் பொறுப்பாகும்.

**3.0** க.பொ.த (உயர் தர) வகுப்புக்களில் மூன்று பிரதான பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன், ஒரு பாடத்துக்கென ஒரு வாரத்தில் 10 பாடவேளைகள் ஒதுக்கப்படும். இதற்கமைய, குறிப்பிட்ட விதப்புரை செய்யப்பட்ட 03 பிரதான பாடங்களுக்கும் 30 பாடவேளைகள் ஒதுக்கப்படும். எஞ்சிய 10 பாடவேளைகளில் 06 பாடவேளைகள் பொது ஆங்கிலப் பாடத்துக்காக ஒதுக்கப்பட வேண்டியதுடன், பொது தகவல் தொழில்நுட்பம் (GIT) பாடத்துக்காக 12ஆம் தரத்தில் மாத்திரம் 02 பாடவேளைகளை ஒதுக்குதல் வேண்டும். 12ஆம் தரத்தில் எஞ்சிய 02 பாடவேளைகளையும் 13ஆம் தரத்தில் எஞ்சிய 04 பாடவேளைகளையும் பாடசாலை முகாமைத்துவக் குழுவின் விருப்பத்தின் பிரகாரம் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

**4.0** விதிக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் 13ஆம் தரத்தின் இறுதியில் பிரதான 03 பாடங்களுடன் பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கில பாடப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பொது ஆங்கில பாடத்தில் பெறப்படும் புள்ளியோ அல்லது சித்தியோ பல்கலைக்கழக அனுமதியின்போது கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் குறித்த பாடத்தில் பெறப்படும் பெறுபேறு க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழில் குறிப்பிடப்படும்.

## 5.0 க.பொ.த.(உயர் தர) பாடத்துறைகளுக்கான பாடச்சேர்மானங்கள்

பாடசாலைகளில் தற்போது க.பொ.த. (உயர் தர) வகுப்புகளுக்காக மூன்று பிரிவுகளின் கீழ் (கலை/ வணிகவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல்) ஆறு (6) பாடத்துறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### 5.1 கலைப் பாடத்துறை

மாணவர்கள் கலைப் பாடத்துறையின் கீழ் கல்வி பயில்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இசைவாகப் பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

**5.1.1** கீழே காட்டப்பட்டுள்ள சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கைகள் பாடத் தொகுதியிலிருந்து (5.1.6 அ) குறைந்தது ஒரு பாடத்தையேனும் தெரிவு செய்தல் வேண்டும். (மொழிப் பாடங்கள் 02இனை அல்லது மொழிப் பாடங்கள் மூன்றினையும் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு இது ஏற்புடையதாகாது) மாணவரது விருப்பத்தின் பிரகாரம், இத் தொகுதியிலிருந்து இரண்டு பாடங்களையோ அல்லது மூன்று பாடங்களையுமோ தெரிவு செய்ய முடியும்.

**5.1.2** கீழே காட்டப்பட்டுள்ள சமயங்களுக்கும் நாகரீகங்களுக்குமான பாடங்களிலிருந்து (5.1.6 ஆ) யாதேனும் சமயமொன்றைத் தெரிவு செய்வதாயின், அதனுடன் தொடர்புடைய நாகரீக பாடத்தை தெரிவு செய்ய முடியாது.

**5.1.3** கீழே காட்டப்பட்டுள்ள அழகியற் கல்விப் பாடங்களிலிருந்து (5.1.6 இ) ஒரு பாடத்தை அல்லது இரண்டு பாடங்களைத் தெரிவு செய்ய முடியும்.

**5.1.4** கீழே காட்டப்பட்டுள்ள மொழிகள் பாடத் தொகுதியிலிருந்து (5.1.6 ஈ) எந்தவொரு மொழிப் பாடத்தையும் அல்லது பாடங்கள் இரண்டினையும் தெரிவு செய்ய முடியும். ஆனால், மூன்று பாடங்களையும் மொழிப் பாடங்களிலிருந்து தெரிவு செய்வதாயின், அது பின்வரும் விதத்தில் மாத்திரம் அமைதல் வேண்டும்.

- 5.1.6 (ஈ) (1) இல் குறிப்பிடப்படும் 03 பாடங்களும்
- 5.1.6 (ஈ) இல் (1) மற்றும் (2) ஆகிய இரண்டு உபதொகுதிகளிலிருந்தும் மாத்திரம் தெரிவுசெய்யப்படும் மூன்று பாடங்கள்

**5.1.5** மொழிப் பாடங்கள் இரண்டினைத் தெரிவு செய்யும் ஒரு மாணவன் தனது மூன்றாவது பாடமாக சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூகக் கற்கைகள், சமயங்கள் மற்றும் நாகரீகம், அழகியற் கல்வி ஆகிய பாடத் தொகுதிகளிலிருந்து தாம் விரும்பிய ஒரு பாடத்தைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

### 5.1.6 கலைப் பாடத்துறைக்கான பாடத்தொகுதிகள்

**(அ) சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூக கற்கைப் பாடங்கள்**

1. பொருளியல்
2. புவியியல்
3. வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது நவீன உலக வரலாறு)
4. மனைப் பொருளியல்
5. அரசியல் விஞ்ஞானம்
6. அளவையியலும் விஞ்ஞான முறையும்
7. கணக்கீடு அல்லது வணிகப் புள்ளிவிபரவியல்
8. விவசாய விஞ்ஞானம் அல்லது கணிதம் அல்லது இணைந்த கணிதம்
9. தொழிட்பவியல் பாடங்களிலிருந்து ஒரு பாடம் (குடிசார் தொழில் நுட்பவியல் அல்லது பொறிமுறைத் தொழில்நுட்பவியல் அல்லது மின், இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அல்லது உணவுத் தொழில்நுட்பவியல் அல்லது விவசாயத் தொழில்நுட்பவியல் அல்லது உயிர் வளத் தொழில்நுட்பவியல்)
10. தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
11. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

**(ஆ) சமயங்களும் நாகரீகங்களுக்குமான பாடங்கள்**

1. பௌத்த சமயம் அல்லது பௌத்த நாகரீகம்
2. கிறிஸ்தவ சமயம் அல்லது கிறிஸ்தவ நாகரீகம்
3. இந்து சமயம் அல்லது இந்து நாகரீகம்
4. இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரீகம்
5. கிரேக்க மற்றும் உரோம நாகரீகம்

**(இ) அழகியற் கல்விப் பாடங்கள்**

1. சித்திரம்
2. நடனம் (தேசிய அல்லது பரதம்)
3. சங்கீதம் (கீழைத்தேய அல்லது கர்நாடக அல்லது மேலைத்தேய)
4. நாடகமும் அரங்கியலும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்)

**(ஈ) மொழிப் பாடங்கள்**

1. சிங்களம், தமிழ், ஆங்கிலம்
2. அரபு, பாளி, சமஸ்கிருதம்
3. சீனம், மலாய், பிரெஞ்சு, ஜேர்மன், ரஷியன், ஹிந்தி, ஜப்பான்

### 5.2 வணிகவியல் பாடத்துறை

இப்பாடத்துறையில் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்படும் பாடங்களுள் குறைந்தது இரண்டு பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. கணக்கீடு
2. வணிகக் கல்வி
3. பொருளியல்

**எஞ்சிய பாடத்தை கீழே குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.**

1. வணிகப் புள்ளிவிபரவியல்
2. புவியியல்
3. அரசியல் விஞ்ஞானம்
4. வரலாறு (இலங்கையின் வரலாற்றுடன் இந்திய வரலாறு அல்லது ஐரோப்பிய வரலாறு அல்லது நவீன உலக வரலாறு)
5. அளவையியலும் விஞ்ஞான முறையும்
6. ஆங்கிலம்
7. ஜேர்மன்
8. பிரெஞ்சு
9. விவசாய விஞ்ஞானம்
10. இணைந்த கணிதம் அல்லது கணிதம்
11. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

## 5.3 உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறை

இந்தப் பாடத்துறையினைக் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் உயிரியல் பாடத்துடன் கீழே குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து இரண்டு பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

1. இரசாயனவியல்
2. பௌதீகவியல்
3. விவசாய விஞ்ஞானம்
4. கணிதம்

## 5.4 பௌதீக விஞ்ஞான பாடத்துறை

இந்தப் பாடத்துறையில் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து மூன்று பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்

1. இணைந்த கணிதம்
